
தர்மசக்கரம்



துன்மதி ௵ புரட்டாசி ௴ சக்கரம் 30 ஆரம் 9

ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்
திருப்பராய்த்துறை-639 115, திருச்சி ஜில்லா

திருப்பராய்த்துறை, ஸ்ரீ ராமகிருஷ்ண தபோவனம்

அந்தர்யோகம்

1981 ஆம் ஞூ நவராத்திரி பூஜையின் கடைசி மூன்று தினங்களாகிய அக்டோபர் மாதம் 5, 6, 7 தேதிகளில் கீழ்க்கண்ட வாழ்க்கை முறைப்படி இங்கு அந்தர்யோகம் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் அன்பர்கள் அக்டோபர் மாதம் 4 ஆம் தேதி ஞாயிற்றுக்கிழமை இரவே நேரில் நாள் ஒன்றுக்கு ரூ. 6-00வீதம் ரூ. 18-00 உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவு செய்து கொள்ளவேண்டும். தாய்மார்களுக்கும் இதில் இடமுண்டு. பன்னிரண்டு வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுவர்களும், கைக் குழந்தைகளுடன் வரும் தாய்மார்களும், நடைமுறையைப் பின்பற்ற இயலாதவர்களும் இதில் சேர்த்துக் கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை	6	மணிமுதல்	7	மணிவரை	தியானம்
,,	8	,,	9	,,	பஜனை
,,	9	,,	10	,,	லலிதா நாம விளக்க உபந்யாசம்
,,	11	,,	12	,,	அர்ச்சனை
மாலை	2	,,	3	,,	லலிதா நாம விளக்க உபந்யாசம்
,,	5	,,	6	,,	அர்ச்சனை
,,	6	,,	7	,,	தியானம்
இரவு	8	,,	9	,,	பஜனை

தியானம், லலிதாநாம விளக்க உபந்யாசம், அர்ச்சனை, பஜனை இந்த நிகழ்ச்சிகள் நடைபெறும் நேரங்கள் போக பாக்கியிருக்கும் 16 மணி நேரத்தில் இடைவிடாது நாமஜபம் நடந்துகொண்டிருக்கும். அந்தர்யோகத்தில் கலந்துகொள்ளும் அன்பர்கள் ஒவ்வொருவரும் காலையில் ஒருமணி நேரமும் மாலையில் ஒருமணி நேரமும் அகண்டநாம பஜனையில் கலந்துகொள்ளக் கடமைப்பட்டிருக்கிறார்கள். இரவு 10 மணி முதல் காலை 4 மணி வரையில் மாணவர்கள் செய்யும் நாம பஜனையில் அன்பர்கள் தங்களுக்கு வசதிப்பட்டால் கலந்துகொள்ளலாம். தாய்மார்கள் இரவு 10 மணி முதல் காலை 6 மணி வரை நடைபெறும் நாம ஜபத்தில் கலந்துகொள்ள மாட்டார்கள்.

தர்ம சக்கரம்

மாத சஞ்சிகை

சக்கரம் 30 | துன்மதி ஸூ புரட்டாசி மீ | ஆரம் 9

பொருளடக்கம்

வருட சந்தா :	உள்நாடு	ரூ. 12-00	வெளிநாடு	ரூ. 35-00
தனி இதழ்	,,	ரூ. 1-25	,,	ரூ. 3-00

அந்தர்யோக விவரங்கள்

மதுரை ஜில்லா—தேனியில் 23—9—81 புதன்கிழமை

இடம் : ஸ்ரீ கணேச கந்தப்பெருமாள் ஆலயம், தியாகராஜ நகர்

நேரம் : காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்

உணவு வசதி : பகல் உணவுக்கு ரூ. 1-50 செலுத்திச் சீட்டுப்பெற்றுக்கொள்ளலாம்.

திருநெல்வேலி ஜில்லா—செட்டிமேடு-டோனுவூரில் 26—9—81 சனிக்கிழமை

இடம் : அருள்மிகு வெங்கடாசலபதி திருக்கோவில்

நேரம் : மாலை 6-00 மணி முதல் மாலை 8 30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி திவ்யானந்தர்

சேலம் ஜில்லா—ஓமலூரில் 27—9—81 ஞாயிற்றுக்கிழமை

இடம் : குப்புசாமி செட்டியார் ஆரம்பப்பள்ளி

நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை

நடத்துபவர் : ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்

அந்தர்யோக விவரங்கள் (தொடர்ச்சி)

இராமநாதபுரம் ஜில்லா—அருப்புக்கோட்டையில் 27—9—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஹிந்து நாடார் நடுநிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர், **ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்**

மதுரை ஜில்லா—சுருளிமலையில் 2—10—81 வெள்ளிக்கிழமை

இடம்: சுருளி தீர்த்தத்துக்கு அருகில்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

மதுரை ஜில்லா—திருவேடகத்தில் 4—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: விவேகானந்த கல்லூரி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்**
உணவு வசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 1-00ம் மாலை சிற்றுண்டிக்கு 75 பைசாவும் செலுத்தி சீட்டுப்பெற்றுக் கொள்ளலாம்.

நீலகிரி மாவட்டம்—குன்னூரில் 9—10—81 வெள்ளிக்கிழமை

இடம்: ஸ்ரீ சற்குரு இராஜயோக ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்**
உணவுவசதி: நேரில் பகல் உணவுக்கு ரூ. 2-00 செலுத்திச் சீட்டுப் பெற்றுக் கொள்ளலாம்

பெங்களூரில் 11—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: கண்டோன்மென்ட் அஜந்தா டாக்கீஸ் எதிரிலுள்ள ஒடுக்கத்தூர் சுவாமிகள் மடம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணி வரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

கோவை ஜில்லா—அன்னூரில் 11—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: ஸ்ரீ மன்னிஸ்வரர் தேவஸ்தானம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி ஆத்மானந்தர்**

இராமநாதபுரம் ஜில்லா—விருதுநகரில் 11—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: பெரியகாளியம்மன் கோவில்
நேரம்: காலை 9-30 to 12-00; மாலை 5-00 to 7-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி ஸதானந்தர்**

நீலகிரி ஜில்லா—கோத்தகிரியில் 11—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: சாந்தி ஆச்ரமம்
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி குஹானந்தர்**
உணவு வசதி: நேரில் சீட்டுப் பெற்றுக்கொள்ளவும்.

சென்னையில் 18—10—81 ஞாயிற்றுக்கிழமை

இடம்: புரசவாக்கம் ஸர் M.CT.முத்தையாசெட்டியார் பெண்கள் உயர்நிலைப்பள்ளி
நேரம்: காலை 10-00 மணிமுதல் மாலை 4-30 மணிவரை
நடத்துபவர்: **ஸ்ரீமத் சுவாமி நித்தியானந்தர்**

प्रज्ञानं ब्रह्म

தர்ம சக்கரம்

அறவாழி அந்தணன் தாள்சேர்ந்தார்க்(கு) அல்லால்
பிறவாழி நீந்தல் அரிது.

சக்கரம் 30 | துன்மதி ஸ்ரீ புரட்டாசி மீ | ஆரம் 9

பிரார்த்தனை

पिता त्वं माता त्वं दयिततनयस्त्वं प्रियसुहृत् ।
त्वमेव त्वं मित्रं गुरुरसि गतिश्चासि जगताम् ॥

— यमुनाचार्य

பிதா த்வம் மாதா த்வம் தயிததனயஸ்த்வம் ப்ரியஸுஹ்ருத் ।
த்வமேவ த்வம் மித்ரம் குருரஸி கதிஸ்சாஸி ஜகதாம் ॥

— யமுனாச்சார்யர்

தந்தையும் தாயும் நீ, அன்புக்குரிய மைந்தன் நீ, நலம் விளைவிக்கும் நண்பன் நீ, உலகுக்குக் குரு நீ, அதற்குக் கதியும் நீயே.

எப்பொருளும் நீஎனவே எண்ணிநான் தோன்றாத
வைப்பைஅழி யாநிலையா வையாய் பராபரமே.

— தாயுமானவர்.

அருள் விருந்து

அழகை ரசிப்பது கடவுள் வழிபாடாகும்.

கடவுள் சிந்தனை மனதைத் தூயதாக்குகிறது.

தர்மத்தில் நிலைநிற்பவன் தாய்க்கு நிகராகிறான்.

ஒழுங்குபட்ட வாழ்வு உறுதியான வாழ்வு ஆகிறது.

பணிவில்லாத பணிவிடை அகங்காரத்தினின்று வருகிறது.

பேரன்பு மனிதனை சுவானுபூதியின்கண் எடுத்துச் செல்லுகிறது.

தீயோர்க்கு ஆதரவு தருவது தீமைக்கு ஆதரவு தருவதற்கு நிகர்.

அறிவில் முதிர்ந்தவன் வயதில் முதிர்ந்தவனைவிட மேலோனாகிறான்.

மதம் மாறுவது பெரிதன்று. மனத்தூய்மை பெறுவதே சாலச் சிறந்தது.

உயிர் வாழ்வைப் பேருயிர் வாழ்வாக எது மாற்றுகிறதோ அது சாஸ்திரம்

தன் உள்ளத்தைத் தூயதாக்குகிறவன் உலகுக்குப் பேருபகாரம் செய்தவனாகிறான்.

கொண்டுள்ள மேலாம் இலட்சியத்தினின்று யாண்டும் பிசகாது இருப்பவன் தீரன்.

இருக்கிறேன் என்று உணர்வது ஆத்மா. ஜடப்பொருளுக்கு அந்த உணர்வு இல்லை.

விக்ரஹ ஆராதனையை எதிர்ப்பவன் கல்லைக் கல்லாகக் காண்கின்றான். விக்ரஹ ஆராதனை பண்ணுபவன் கல்லைக் கடவுளாகக் காண முயலுகிறான்.

எண்ணெய் தீபத்தில் அழிந்துபட்டுப்போய்ப் பிறர்க்கு வெளிச்சம் தருகிறது. அங்ஙனம் நல்லான் சுயநலத்தை அழித்துப் பிறர்க்குப் பயன்படுகின்றான்.

காலம் சதா மனிதனை விழுங்கிக்கொண்டு இருக்கிறது. அதற்கிடையில் தன் கடமையை ஓடியோடிச் செய்கிறவன் ஒருபோக்கில் காலத்தை வென்றவனாகிறான்.

நான் கடலைக் காணமுடியுமா என்று கடலின் மீதுள்ள அலை அலைந்து திரிதற்கு நிகராகப் பரத்தில் நிலைத்து இருக்கும் ஜீவாத்மன் நான் பரமனைக் காணமுடியுமா என்று அலைந்து திரிகிறான்.

பரமஹம்சர் புகட்டிய

பெருநெறி விளக்கம்

இந்தக் கிரீஷ்சந்திரகோஷ் கடந்த சில மாதங்களாகப் பரமஹம்சதேவரைத் தரிசிக்க வந்து கொண்டிருந்தார். இந்தக் கிரீஷிடம் இருந்த பக்தி விசுவாசத்தை யாருமே ஆழம் பார்க்கமுடியாது என்று பரமஹம்சதேவர் இயம்பினர். பரம்பொருளிடத்து அவர் வைத்திருந்த பக்தி எவ்வளவு பெரியதோ அதற்கேற்றவாறு அருள்தாகமும் அவரிடத்துச் சதா ததும்பிக் கொண்டிருந்தது. வீட்டிலிருந்த பொழுது அவர் சிந்தனை முழுதும் பரமஹம்சரைப் பற்றியதாயிருந்தது. அவரிடம் வந்த பக்தர்களோடு அவர் பேசியதெல்லாம் பரமஹம்சரைப் பற்றிய பேச்சாம்.

பக்தர்களுக்கிடையில் பரமஹம்சதேவர் பாரமார்த்திகப் பெரிய விஷயங்களை எடுத்துப் பேசிக்கொண்டிருந்தார். "உலகப் பற்றுடைய ஒருவன் பரம்பொருளைப்பற்றியே பேசிக்கொண்டிருக்கலாம். ஆயினும் அப்பேச்சுக்கிடையில் உலக விஷயங்களும் புகுர்துவிடும். பெருங்காயம் வைத்திருந்த பாத்திரத்துக்கு நிகர் அன்னவன். அப்பாத்திரத்தை எவ்வளவுதான் துலக்கினுலும் பெருங்காய நாற்றம் அதைவிட்டு அகலாது. மற்று இங்கே வருகின்ற இளைஞர்கள் தூய உள்ளம் படைத்தவர்கள். காமத்தாலும், காசு ஆசையினுலும் அவர்களுடைய உள்ளம் அழுக்குப்படிந்து போகவில்லை. பரநாட்டத்துக்கு அவர்கள் முற்றிலும் தகுதி வாய்ந்தவர்கள். காக்கை குருவிகளால் கொத்தப்பட்டுள்ள கனிகள் கடவுளுக்குப் படைப்பதற்குப் பயன்படமாட்டா. உலக ஆசை என்னும் காக்கை குருவிகளால் கொத்தப்படாத கனிகளுக்கு நிகர் தூய உள்ளம் படைத்திருக்கும் இளைஞர்கள். மற்றும் ஓர் உபமானத்தைக்கொண்டு தூய உள்ளத்தவர்களையும் உலக ஆசைகளினுல் மலினப்பட்ட மனமுடையவர்களையும் சீர்தூக்கலாம். புதிய மட்பாண்டம் ஒன்றில் தங்கு தடையின்றிப் பாலை ஊற்றிவைக்கலாம். ஆனல் தயிர் வைக்கப்பட்டிருந்த மட்பாண்டம் அத்தகையதன்று. சில வேளைகளில் அவைகள் புதிய பாலைக் கெடுத்துவிடும். உலகப்பற்றில் உழன்றவர்கள்-தயிர் வைக்கப் பட்டிருந்த மட்பாண்டம் போன்றவர்கள். பிறவியிலிருந்தே ஆசாபாசங்களினின்று விடுபட்டுள்ள தூய ஆத்மாக்கள் புதிய மட்பாண்டத்துக்கு நிகர். அருள் நாட்டம் என்னும் பாலை அங்கு வளர்த்து வந்தால் அது பெரு நலனை விளைவிக்கும்.

"உலகப்பற்றில் உழன்றுகொண்டிருப்பதற்கிடையில் கடவுள் நாட்டம் கொண்டுள்ள பக்தர்களும் சிலர் இருக்கின்றனர். அன்னவர்கள் யோக சாதனங்களுக்கிடையில் போக நாட்டத்தை அடியோடு துறந்தவர்கள் அல்லர். இராவணன் படைத்திருந்த இயல்புக்கு நிகரானது அத்தகைய பக்தர்களின் பாங்கு. இராவணன் சிவபக்தனுயிருந்துகொண்டு சிவ பூஜையையும் ஆழ்ந்து பண்ணினுன். ஆயினும் காமம் அவனுடைய உள்ளத்தினின்று அகன்று போகவில்லை. ஆதலால்தான் அவன் யோகம், போகமாகிய இரண்டு நிலைகளுக்கிடையில் தத்தளித்துக்கொண்டிருந்தான். பக்தி சிறிதேனுமில்லாத மக்களைவிடப் பக்தி வாய்க்கப்பெற்றவர்கள் மேலோர்களேயாம். யாரிடத்துப் பக்தி சிறிதேனும் உருவெடுக்கவில்லையோ அன்னவர்களிடத்து அசுர இயல்பு ஆழ்ந்து வடிவெடுக்கிறது.

"உலக ஆசையில் சிறிது காலம் உழன்றுன பிறகு பரநாட்டத்தில் ஈடுபடுகிறவர்கள் சிலர் இருக்கின்றனர். மாறியமைந்துள்ள தங்கள் இயல்புக்கேற்ப நல்ல சூழ்நிலையையும் அவர்கள் தேடிக்கொள்கின்றனர். அத்தகைய பாங்கும் பாராட்டுதற்குரியதேயாம். அவர்களுடைய பாங்கை மற்றோர் உபமானத்தின் மூலம் விளக்கலாம். கன்றுகுட்டியாயிருக்கின்ற பொழுதே காய் அடிக்கப்படுகின்ற காளைகள் காமநோயில் வருந்துவதில்லை. ஆனல் முதிர்ந்த எருதுகளைக் காயடித்தால் அவைகள் அதன் பிறகு நல்ல பாங்கில் பயன்படுகின்றன. ஆயினும் அவைகள் பசுக்களுக்கிடையிலே நடமாடுமாகில் பழைய வாசனை வந்து அவைகளை

உபத்திரவப்படுத்தும். காம வாசனை அவ்வளவு கொடியது. அதை அறவே ஒதுக்கித் தள்ள வல்லவர்களே ஆத்ம சாதனத்துக்கு முற்றிலும் தகுதி உடையவர்கள் ஆகின்றனர்.

"துறவியர்களின் திருக்கூட்டம் ஒன்று ஓரிடத்தில் அமர்ந்திருந்தது. அழகுடைய மாது ஒருத்தி அவ்வழியே செல்ல நேர்ந்தது. அப்பெண்பாவின் வருகையால் துறவியர்கள் பாதிக்கப்படவில்லை. ஆனால் அவர்களுள் ஒரு பேர்வழி மட்டும் அவளிடத்துக் கடைக்கண் பார்வையைச் செலுத்தினன். அதற்கேற்ற காரணமும் இருந்தது. துறப்பதற்கு முன்பு கொஞ்சகாலம் அன்னவன் இல்வாழ்க்கையில் ஈடுபட்டிருந்தான். மக்கள் மூவரைப் பெற்றெடுத்த பிறகே அவன் துறவியானன். ஆதலால் அப்பழைய வாசனை அவனுடைய உள்ளத்தில் சிறிது ஊசலாடிற்று.

"வெள்ளைப்பூண்டைக் குழம்பாக அரைத்து ஒரு கிண்ணத்தில் போட்டு வைத்தால் அதன் நாற்றம் அக்கிண்ணத்தில் படிகிறது. கிண்ணத்தினின்று வெள்ளைப்பூண்டு குழம்பைக் காலிபண்ணலாம். பிறகு அதைக் கழுவவும் செய்யலாம். ஆயினும் வெள்ளைப்பூண்டு நாற்றம் மட்டும் அக்கிண்ணத்தை விட்டு அகலாது. விஷய வாசனை அத்தகையது.

"மரிமாமரத்தினின்று சுவைநிறைந்த மாங்கனி உண்டாகாது. யோகி ஒருவன் தன்னுடைய யோகசித்தியைப் பயன்படுத்தி மரிமாங்காயைச் சுவை நிறைந்த மாம்பழமாக மாற்றியமைக்கலாம். ஆனல் அச்செயல் அசாதாரணமானது. மனிதனுடைய இயல்பிலேயே தெய்விகம் தழைத்து ஓங்குதல் பாராட்டத்தக்கது.

"உலக வாழ்விலும் உலக இன்பங்களிலும் உழன்று கிடப்பவர்களுக்குக் கடவுளைப்பற்றிச் சிந்திக்க நேரம் எங்கே? மானுடன் ஒருவன் பாகவதம் கேட்க விரும்பினன். அதைப் படித்து விளக்குதற்குப் பண்டிதன் ஒருவனை அவன் நாடி நின்றான். அன்னவனுடைய நண்பன் இயம்பியதாவது: 'கல்வித் திறமை வாய்ந்த பண்டிதன் ஒருவனை நான் அறிவேன். ஆயினும் அதில் இடைஞ்சல் ஒன்று உண்டு. அப்பண்டிதன் கிருஷியில் பெரிதும் ஈடுபட்டிருக்கிறான். அவனிடம் நான்கு கலப்பைகளும், எட்டு எருதுகளுமிருக்கின்றன. அவைகளை வைத்துக்கொண்டு அவன் ஓயாது நிலத்தில் உழைத்து வருகிறான். ஓய்வென்பது அவனுக்கு இல்லை.' அதற்கு மற்றவன் கொடுத்த விடையாவது: 'பாகவதம் வாசிப்பதற்கு நேரம் வாய்க்கப்பெறாத பண்டிதன் எனக்கு வேண்டாம். கலப்பைகளிலும், கால் நடைகளிலும் உழன்று கிடக்கின்ற பாகவதப்பண்டிதன் ஒருவனை நான் தேடவில்லை. பாகவதத்திலேயே தன் கருத்து முழுவதையும் செலுத்தி அதன் உட்பொருளை உள்ளபடி எடுத்து விளக்க வல்ல பண்டிதன்தான் எனக்கு வேண்டும்.'

"பண்டிதர் ஒருவர் பாகவத வியாக்யானம் செய்ததை வேந்தன் ஒருவன் நாள்தோறும் கேட்டு வந்தான். நாள்தோறும் வாசிப்பு முடிவுறும்பொழுது, 'அரசே! நாம் இயம்பியதையெல்லாம் தாங்கள் அறிந்துகொண்டீர்களா?' என்னும் கேள்வியைக் கேட்டு வந்தார். அதற்கு விடையாக வேந்தன் சொன்னதாவது, 'ஐயனே, நீ வாசிப்பதை முதலில் நீ நன்கு அறிந்து கொள்வாயாக!' என்று இயம்பினன். பண்டிதனும் வீட்டுக்குத் திரும்பிய பிறகு அரசன் சொன்னதை எண்ணிப்பார்த்து வந்தான். இந்தப் பண்டிதன் பக்தி வாய்க்கப்பெற்றவன். பிரார்த்தனையிலும், தியானத்திலும் அவன் ஒழுங்காக ஈடுபட்டு வந்தான். படிப்படியாக அவனுக்கு விவேகம் உதயமாயிற்று. கடவுள் ஒருவரே மெய்ப்பொருள் என்றும், பிரபஞ்சத்திலுள்ள ஏனைய யாவும் வெறும் தோற்றமென்றும் அவன் அறிய வந்தான். உலக வாழ்க்கையில் அவனுக்கு விரக்தியுண்டாயிற்று. துறவு மார்க்கத்தை அவன் கைப்பற்றினன். வீட்டை விட்டு வெளியே கிளம்பியபொழுது வேந்தனுக்கு அவன் சொல்லியனுப்பிய செய்தியாவது: 'ஆம் அரசே! பாகவதத்தின் உட்பொருளை நான் இப்பொழுது அறிய வருகிறேன்.'

"உலகப்பற்றில் உழன்று வருகிற மக்களை நான் வெறுக்கின்றேனா? இல்லவேயில்லை. உலகத்தவர்களைப் பார்க்கின்றபொழுது ஒருபொருளாயுள்ள பரப்பிரம்மமே இத்தனை வடிவெடுத்து விளையாடுகிறது என்னும் கருத்தை எனக்கு நானே வரவழைத்துக் கொள்ளுகிறேன், பிரம்மம் ஒன்றே அனைத்துமாயிலங்கு

கிறது. நாராயணன் தானே இத்தனை வடிவங்களில் இலங்குகின்றான். பெண்பாலர்கள் அனைவரையும் நான் பராசக்தியின் சொரூபங்களாகக் கருதுகிறேன். கற்புடைய மாது ஒருத்திக்கும், விலை மாது ஒருத்திக்கும் இடையே நான் எந்த வித்தியாசமும் பாராட்டுவதில்லை.

"என்ன விந்தை! கீழ்த்தரமாயுள்ள உளுத்தம் பருப்பைத் தவிர மேலாம் பொருள் எதையும் வாங்கவரும் வாடிக்கைக்காரன் யாரையும் நான் காண்கிறேனில்லை. போகத்திலும், பொருளாசையிலும் ஊறியுள்ளவர்களே உலகில் பெரும்பாலும் தென்படுகின்றனர். காமத்தின் மயக்கத்திலும் செல்வத்தின் ஆதிக்கத்திலும் மனிதன் கட்டுண்டவனாகிறான். ஆகவே அவன் கடவுளை மறந்துவிடுகிறான். ஆனால் அழகு அனைத்துக்கும் உறைவிடம் கடவுள் என்னும் உண்மையை அறிந்து கொள்ளுகிறவன் எதையும் பார்த்து மயங்குகிறதில்லை. படைப்புக் கடவுளாகிய பிரம்மதேவருடைய பதவியே அல்பமானதாக அவனுக்குத் தென்படுகிறது.

"ராவணனிடம் அவனுடைய சிப்பந்தி ஒருவன் இங்ஙனம் இயம்பினான். 'சீதையை மயக்கி உன் வசம் ஆக்குதல் பொருட்டு நீ வெவ்வேறு வடிவங்கள் எடுத்துக்கொண்டு அவளை அணுகினாய். அவையாவும் பயன்படவில்லை. இனி, ராமனுடைய வடிவம் எடுத்துக்கொண்டு அவளிடம் போய் நீ ஏன் முயற்சி பண்ணலாகாது?' அதற்கு இராவணன் கொடுத்த விடையாவது: 'நான் இராமனைப் பற்றி நினைக்கும்பொழுதே என் மனம் மாறியமைகிறது. அந்நிலையில் தேவலோகக் கன்னிகைகளாகிய ரம்பாவும் திலோத்தமையும் வெந்து போன சாம்பலுக்கு நிகராக எனக்குத் தென்படுகின்றனர். அந்நிலையில் பிரம்மதேவனுடைய பதவியும் எனக்கு அல்பமாகத் தென்படுகிறது. இந்நிலையில் பிறர் மனைவியைப் பற்றிய பேச்சு எழுவதற்கு இடம் எங்கே?"

மனோமோஹனைப் பார்த்து "நான் இயம்புவது உனக்கு மன வருத்தத்தை உண்டுபண்ணலாம். ஆயினும் என் கருத்தை உன்னிடம் தெரிவித்தாகவேண்டும். இராக்காலிடம் இங்ஙனம் நான் இயம்பினேன். 'நீ யாரேனும் ஒருவனிடம் சம்பளத்துக்கு அமர்ந்து உன்னுடைய சுதந்திரத்தை விட்டுக்கொடுப்பாயாகில் அந்நிலையை நான் ஒருபொழுதும் ஆமோதிக்க மாட்டேன். அப்படிச் செய்வதைவிட நீ கங்கையில் வீழ்ந்து மூழ்கிப்போவது மேலானது என்றேன். அதே கருத்தைத்தான் உன்னிடமும் நான் இப்பொழுது இயம்புகிறேன்.'

ஒரு நாள் நேபாள நாட்டுப் பெண்ணொருத்தி இங்கு வந்தாள். கஞ்சராக்கட்டையை அடித்துக்கொண்டு பக்திப் பாடல்கள் சிலவற்றை அவள் பாடினாள். அவளுக்கு விவாஹம் ஆகியிருக்கிறதாவென்று ஒருவர் கேட்டார். அதற்குக் கூர்த்த மனப்பான்மையுடன் அவள் கூறியதாவது: 'என்ன பகருகின்றீர்! நான் சிவனுடைய பணிப்பெண். வேறு எவரையாவது நான் மணந்துகொள்ள இசைவது எங்ஙனம்?' காமத்திலும் காசு ஆசையிலுமே உழன்றுகொண்டிருக்கிற மானுடன் ஒருவன் கடவுள் நாட்டம் பூணுவது எங்ஙனம்? உலகப்பற்றற்ற பாரமாத்திகப் பெருவாழ்வு வாழுவது அவனுக்கு மிகக் கடினமானதாம். முதன் முதலாக அவன் தன் மனைவிக்கு அடிமையாகின்றான். இரண்டாவதாகப் பணத்துக்கு அவன் அடிமையாகின்றான். மூன்றாவதாக யாருக்குப் பணிவிடை பண்ணுகின்றானோ அம் மனிதனுக்கு அடிமையாகின்றான்.

"அக்பரிடமிருந்து சிறிது செல்வம் பெற்றுவரத் துறவி ஒருவர் அரண்மனைக்குச் சென்றார். அப்பொழுது அக்பர் சக்கரவர்த்தி பரம்பொருள் வழிபாடு பண்ணிக்கொண்டிருந்தார். வந்த துறவி சிறிது நேரம் அவர் அருகில் அமர்ந்திருந்தார். பிறகு எழுந்துபோக முயன்றார். சற்று அமர்ந்திருக்கும்படி அக்பர் சைகை காட்டிவிட்டுத் தம் பிரார்த்தனையைப் பூர்த்திபண்ணினர். 'என்னைப் பார்க்க வந்த தாம் ஏன் ஒன்றும் பேசாது எழுந்து போகின்றீர்' என்று கேட்டார் ராஜாதி ராஜனே, என்னிடம் வருகிற அதிதிகளுக்குப் பணிவிடை பண்ணச் சிறிது செல்வம் தங்களிடமிருந்து ஏற்றுச் செல்லலாமென்று வந்தேன். ஆனால் தாங்கள் யாசகம் பண்ணும் பாங்கில் பிரார்த்தித்துக்கொண்டு இருந்தீர். ஒரு யாசகனிடம் யாசகம் பண்ணுவதற்குப் பதிலாக நேரே பரமனிடத்திலேயே விண்ணப்பிக்கலாமே என்று நான் எண்ணினேன்' என்றார் அத்துறவி."

எந்நாள் கண்ணி

(தாயுமானவர் இயற்றியது)

3-9. எண்ணரிய சித்தர் இமையோர் முதல்ஆன
பண்ணவர்கள் பக்தர்அருள் பாலிப்பது எந்நாளோ.

கீழ் நிலையிலுள்ள மானுடனொருவன் தன்னுடைய முயற்சியினாலும், தகைமையினாலும் மேலோனாவது இயல்பு. அங்ஙனம் மேல் நிலைக்கு வருகின்ற மனிதன் தன்னுடைய முன்னேற்றத்தைக் குறித்து மிக எச்சரிக்கையாக இருக்கவேண்டும். முன்னேற்றமும், தகைமையும் பொருளாதாரத்துறையில் இருக்கலாம். சமுதாய அந்தஸ்தில் இருக்கலாம், கல்வித் துறையில் இருக்கலாம். பண்பாட்டில் இருக்கலாம். இவையாவுக்கும் மேலாக அருள்நாட்டத்திலிருக்கலாம். புதியதாக வந்தமைகிற முன்னேற்றத்தைப் பற்றியும் தகைமையைப் பற்றியும் கோட்பாடு ஒன்று உளது. பரம்பரை பரம்பரையாகவும், தலைமுறை தலைமுறையாகவும் மேலோராயிருப்பவர்கள் திடீரென்று புதியதாக மேலோனாக மாறியமைகிற ஒருவனைப் பற்றிப் பொறுமைப்படுவதும், ஏளனம்பண்ணுவதும் இயல்பு. சில சமயங்களில் அதற்கேற்ற காரணத்தைப் புதியதாக முன்னேற்றமடைந்தவன் அறிந்தோ அறியாமலோ உண்டுபண்ணுகிறான். அன்னவனுக்குச் சிறிதளவாவது படாடோபம் வாய்க்குமானால் அவனைக் குறித்து 'அற்பனுக்கு வாழ்வு வந்தால் அர்த்த ராத்திரியில் குடை பிடிப்பான்' என்னும் பழமொழி இருக்கிறது. யோக சாஸ்திரமும் இந்நிலைமைக்கு ஒரு பாங்கில் ஆதாரம் தெரிவிக்கிறது. யோகியல்லாத ஒருவன் திடீரென்று யோக சாதனத்தில் மேலே வருவானாகில் ஏற்கனவே யோகத்தில் நிலைபெற்றிருக்கிறவர்களும் விண்ணவர்களும் அதைக் குறித்து ஆட்சேபம் பண்ணுகின்றனர். ஆதலால் சாதனத்தில் அதிவிரைவில் முன்னேறி வருகிறவன் யாண்டும் பணிவுடனும் ஏற்கனவே மேல்நிலை அடைந்திருப்பவர்களிடத்துப் பக்தி பூர்வமாகவும் நடந்துகொள்ளுவது அவசியம் என்று யோக சாஸ்திரம் சாதகனுக்கு எச்சரிக்கை பண்ணுகிறது. இந்தஎச்சரிக்கைக்கு ஒப்பத் தாயுமானவர் ஈண்டு கணக்கிலடங்காத சித்தர்களைப் பற்றியும், தேவர்களைப் பற்றியும், பண்பாட்டில் மேலே வந்தவர்களைப் பற்றியும், பக்தர்களைப் பற்றியும் மிகப் பணிவாகத் தம்முடைய வணக்கத்தை இக்கண்ணியின் வாயிலாகத் தெரிவித்துக் கொள்ளுகிறார்.

6-1. ஐம்பூதத் தாலே அலக்கழிந்த தோஷம்அற
எம்பூத நாதன்அருள் எய்துநாள் எந்நாளோ.

எம்பூத நாதன்—பூத கணங்களுக்குத் தலைவனாயிருக்கும் எம் இறைவன்.

மானுட சரீரம் ஐந்து பூதங்களால் ஆனது. அவையாவன: ஆகாசம், வாயு, அக்னி, அப்பு, நிலம். இவ்வைந்தினுள் ஆகாசம் செயலற்று இருக்கிறது. பாக்கி நான்கு பூதங்களும் அவைகளுக்குரிய செயல்களைப் புரிந்து வருகின்றன. சரீர அமைப்பில் வாயுவின் செயல் சரியாக அமையாவிட்டால் அதனால் நோய்கள் பல உண்டாகின்றன. சரீரத்தில் இருக்க வேண்டிய வெப்பம் மிகைபட்டால் அது காய்ச்சலாகிறது. குறைபட்டால் சீதமாகிறது. உடலில் நீரின் அமைப்புக் குறைந்துபட்டுப் போனால் வரட்சியை உண்டு பண்ணுகிறது. அது மிகைபட்டால் சளியைக் கிளப்புகிறது. மண்ணின் கூறு மானுட உடலில் அதிகமானால் அது தடித்துப் போகிறது. குறைந்தால் உடல் மெலியவும், தளர்வுறவும் செய்கிறது. ஆகவே ஆரோக்கியமான உடல் வாழ்வு அரிதிலும் அரிதாக யாரோ சிலர்க்கே வாய்க்கிறது. பெரும்பான்மையோர் விதவிதமான நோய்களுக்கு யாண்டும் ஆளாகி வருகின்றனர். உடலமைப்பைக் குறித்து ஸ்ரீ ராமகிருஷ்ண பரமஹம்சர் இங்ஙனம் இயம்புகின்றார்: "ஒரு வீட்டில் குடிபுகுந்தால் அவ்வீட்டுக்குரிய வாடகையை மனிதன் செலுத்தியாக வேண்டும். அங்ஙனம் உடல் என்னும் வீட்டுக்குள் ஜீவாத்மன் குடிபுகுந்திருக்கிறான். அதில் வசித்திருக்கும் வரையில் ஒன்றன்பின் ஒன்றாகப் பல நோய்களுக்கு ஆளாவதே மனிதன் செலுத்தும் வீட்டு வாடகையாம்."

உடலுக்கு வருகிற நோய்களைச் சகித்துப் பழகுவது ஒருவித ஆத்ம சாதனையாகிறது. அவைகளைச் சகித்திருக்கும் வரையில் உள்ளம் உறுதி பெறுகிறது. நோயின் வேகம் குறை

கிறது. அவற்றுக்கெல்லாம் மேலாக ஆத்மசாதகன் அருள் நாட்டத்தில் எவ்வளவுக்கெவ்வளவு ஆழ்ந்து மூழ்குகிறனே அவ்வளவுக்கவ்வளவு அவன் சாதனத்தில் முன்னேறுகிறுன். உடலைப் பிடித்து வாட்டும் நோய்கள் அருள் நாட்டமுடையவனது உள்ளத்தைத் தொடமாட்டா. ஆதலால் உடல் வாழ்க்கைக்கு இன்றியமையாத நோய்களைப் புறக்கணித்தல் பொருட்டும், யாண்டும் தனக்குச் சொந்தமாயுள்ள இறைவனை அடைதல் பொருட்டும் அருள்நாட்டம் ஓங்குவது ஆதக என்பது இக்கண்ணியின் கருத்து.

6-2. சத்தமுதல் ஆம்புலனில் சஞ்சரித்த கள்வர்எனும்
பித்தர்பயம் தீர்ந்து பிழைக்குநாள் எந்நாளோ.

சத்தம்—ஓசை.

மானுட சரீரத்தில் ஞானேந்திரியங்கள் ஐந்து அமைந்திருக்கின்றன. உணவைச் சுவைத்துப் பார்ப்பதற்கு நா அமைந்திருக்கிறது. புறவுலகிலுள்ள வடிவங்களை அறிந்து கொள்ளுவதற்குக் கண் அமைந்திருக்கிறது. பிறர் கருத்துக்களை மொழியின் வாயிலாக அறிந்துகொள்ளுவதற்குக் காதை மனிதன் பெற்றிருக்கிறுன். வெப்பத்தையும், தணுப்பையும் உணர்தல் பொருட்டும் பொருள்கள் கடினமானவைகளா அல்லது மிருதுவானவைகளா என்பதை அறிந்துகொள்ளுதற்கு ஊறு அல்லது ஸ்பரிச உணர்ச்சியை மனிதன் பெற்றுள்ளான். வாழ்க்கைக்கு இன்றியமையாத காற்று நல்லதா கெட்டதா என்பதை மோப்பத்தால் மனிதன் கண்டுகொள்ளுகிறுன். ஆகவே புறவுலகத்தைப் பற்றிய ஞானம் சுவை, ஒளி, ஊறு, ஓசை, நாற்றம் ஆகிய ஐந்து விதங்களில் மனிதனுக்கு வந்து அமைகின்றன. இந்த ஐந்து பொறிகளும் ஒருவிதத்தில் கள்ளர்கள் போன்று நடந்து கொள்ளுகின்றன. பிறர் பொருளை அபகரிப்பது கள்ளர்களுடைய பாங்கு. ஜீவாத்மனுக்குச் சொத்து ஆக இருப்பது பரமாத்மாவின் இணக்கம். அந்தப் பேரிணக்கத்தைத் தடை போடுகிற பாங்கில் ஐந்து பொறிகள் நடந்து கொள்ளுகின்றன. பரமாத்மாவிடத்திருந்து வரும் பேரானந்தத்தை விஷய ஆனந்தமாக மாற்றவல்ல திறமை இந்த ஐம்பொறிகளுக்கு இருக்கின்றன. ஆகையினல் இவையாவும் கள்ளர்க்கு நிகராகின்றன.

ஒவ்வோர் இந்திரியத்தின் வாயிலாகவும் பெறுகிற சுகம் வளர்ந்து கொண்டே போகிறது. எங்ஙனம் விறகுக்கட்டை போட்டு நெருப்பின் வேகத்தைத் தணிக்க முடியாதோ அங்ஙனம் இந்திரிய சுகத்தில் வைத்துள்ள பற்றுதலை அச்சுகத்தில் ஈடுபடுவதால் அகற்ற யாருக்குமே இயலாது. ஆதலால் இந்திரிய சுகவேட்கை பித்தனுடைய பாங்குக்கு நிகராகிறது. ஐம்பொறிகள் போகிற போக்கிலேயே அவைகளை விட்டுவிட்டால் அவையாவும் ஒன்றுகூடி மனிதனுடைய மேலாம் பாங்கைப் பாழ்படுத்துகின்றன. எனவே பரமனை அடைய விரும்புகிற ஆத்ம சாதகன் ஐம்பொறிகளை அடக்கி ஆளவேண்டும் என்பது இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

6-3. நாளும் பொறிவழியை நாடாத வண்ணம்எமை
ஆளும் பொறியால் அருள்வருவது எந்நாளோ.

உடலெடுத்திடும் உயிர்கள் அனைத்தும் ஐம்பொறிகளைக் கையாண்டு பிரபஞ்ச வாழ்க்கையிலேயே உழன்று வருகின்றன. அதனல் நலனுண்டாவதற்கு நிகராகக் கேடுகளும் வந்தமைகின்றன என்னும் உண்மையை விவேகம் படைத்துள்ள மனிதன்தான் அறிய வருகிறுன். ஐம்பொறிகளைப் போகநெறியில் செலுத்தினல் இன்பதுன்பங்கள் இரண்டுக்கும் ஆளாக வேண்டும். பிறகு இன்பத்தைவிடத் துன்பமே அதில் அதிகம் என்பதை நல்லறிவு படைத்த மனிதன் அறிய வருகிறுன். ஐம்பொறிகளை யோகநெறியில் செலுத்தினல் துன்பத்தைத் தவிர்க்கவும் இன்பத்தை வளர்க்கவும் மனிதனுக்குச் சாத்தியமாகிறது. அதன் பிறகு யோக நெறியிலும் ஐம்பொறிகளைச் செல்லவொட்டாது அறவே தடுத்தாளுவது அவசியமாகிறது. பொறிவாயில் ஐந்தவித்தல் பரநாட்டம் கொள்ளும் மனிதனுக்கு இன்றியமையாத செயலாகிறது. அவைகள் வாயிலாகப் புறவுலகில் செல்லும் மனப்பான்மை முற்றிலும் மாறி அகவுலகிலேயே செல்லவேண்டும். புறவுலக நாட்டம் அகவுலகநாட்டமாக மாறியமையும் அன்றைக்கு அந்த ஆத்ம சாதகன் அருள் பிரசாதத்திற்கு முற்றிலும் அருகதை உடையவன் ஆகிறுன் என்னும் கருத்து இக்கண்ணியில் அடங்கியிருக்கிறது.

இயேசுவின் மலை உபதேச விளக்கம்

(சுவாமி பிரபவானந்தரின் கருத்தைத் தழுவியது)

25. பரமண்டலத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே, எங்கள் கடனாளியை நாங்கள் மன்னிப்பதுபோன்று எங்கள் கடன்களையும் நீ மன்னிப்பாயாக.

இங்குக் கடன் என்பது கர்மத்தைக் குறிக்கின்றது. காயத்தால் நிகழ்கின்ற செயல்களும் மனதால் எண்ணுகின்ற எண்ணங்களும் கர்மங்கள் எனப்படுகின்றன. நாம் நினைக்கும் ஒவ்வோர் எண்ணமும், செய்யும் ஒவ்வொரு செயலும் இரண்டு விளைவுகளை உண்டுபண்ணுகின்றன. முதலில் அவைகள் மனதில் பதிவுகளை உண்டுபண்ணிவிடுகின்றன. அப்பதிவுகள் எதிர்காலத்தில் எண்ணங்களாகவும் செயல்களாகவும் வடிவெடுக்கின்றன. செயல்கள், எண்ணங்களின் இயல்புக்கேற்ப அவைகள் இன்பத்தையோ துன்பத்தையோ தருகின்றன. இது இரண்டாவது விளைவாகும். நாம் ஒரு செயல் செய்தாலோ ஓர் எண்ணம் எண்ணினாலோ அவற்றிற்குரிய விளைவை அனுபவித்தாகவேண்டும். அவ்விளைவுதான் நாம் பட்ட கடனாகும். நாம் பட்ட கடனுக்கு நாமே பொறுப்பாளி ஆகின்றோம். மேலும் எண்ணங்களும் செயல்களும் ஏற்படுத்திய பதிவுகளின் தொகுப்பு நம்முடைய பண்பாக வடிவெடுக்கின்றது. எனவே நம்முடைய பண்புக்கு நாமே பொறுப்பாளியாகின்றோம். இவ்வுண்மையை அறிந்துகொண்டால் நமக்கு வருகின்ற நலத்துக்கும் பொலத்துக்கும் நாமே காரணம் என்பது நமக்குத் தெளிவாகும். நாம் படுகின்ற துன்பத்திற்குப் பிறர் யாரையும் நொந்துகொள்ளக் கூடாது. ஆனால் நாம் படுகின்ற துன்பத்திற்குப் பிறரை நொந்துகொள்கின்ற இயல்புதான் நம்மிடத்தில் இருக்கிறது. ஆதாம் விழ்ச்சி அடைந்ததற்கு ஈவைக் காரணம் காட்டிக் குற்றம் சாற்றுவது உண்டு. ஈவு சாத்தான்மீது குற்றம் சாற்றுவது உண்டு. இப்படி ஒருவர் பிறர்மீது குற்றம் சாற்றுவது உலகியல் வழக்கு. நம்முடைய கர்மத்திற்கு நாமே பொறுப்பாளி என்பதை ஏற்றுக்கொள்வோமேயானால் நாம் யாரையும் குற்றம்சாற்ற மாட்டோம். நாம் செய்த வினையே பிறர் மூலம் நமக்குத் திரும்பி வந்துகொண்டிருப்பதை அறிந்துகொண்டால் பழிக்குப் பழி வாங்கும் எண்ணம் போய்விடும். பிறருக்கு நலம் செய்யக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை நாம் உணர்ந்துகொள்ளவேண்டும். நாம் செய்த கேட்டிற்குப் பிறருக்கு நலம் செய்வதன் மூலம்தான் விமோசனம் தேடியாகவேண்டும். பிறருக்கு நலம் செய்வதையே நம்முடைய கடமை என்று உணர்ந்தால் பிறர் செய்த குற்றத்தை நாம் மன்னிப்போம். நாம் மன்னுயிர்களுக்கு நலம் செய்வோமானால் கருணாகரனாகிய கடவுள் நமக்கு நலம் செய்கின்றார்.

கர்மத்திற்குக் காரண காரியங்கள் உண்டு. நலம் செய்பவன் நலன் அடைகின்றான். கேடு செய்கின்றவன் கேடு அடைகின்றான். இது கர்மத்தின் நியதி. ஒவ்வொரு நல்ல காரியத்திற்கும் புண்ணியத்தைக் காரணம் என்றும், ஒவ்வொரு கெட்ட காரியத்திற்கும் பாபத்தைக் காரணம் என்றும் சொல்கின்றோம். புண்ணியத்தின் காரியமாக இன்பமும், பாவத்தின் காரியமாகத் துன்பமும் நம் வாழ்க்கையில் சம்பவிக்கின்றன. சரீரத்தை நான் என்று கருதுகின்ற அகங்காரம் தெய்வத்திடம் இருந்து நம்மைப் பிரித்து வைக்கின்றது.

''பரந்த பிரபஞ்சம் ஒரு சக்கரம் ஆகிறது. அந்தச் சக்கரத்தில் எல்லா உயிர்களும் இடம் பெற்றிருக்கின்றன. அந்தச் சக்கரம் சுழன்றுகொண்டே இருக்கிறது. அது நிற்பதில்லை. உயிர்கள் பிறப்பு இறப்பு என்ற சுழலில் சுழன்றுகொண்டே இருக்கின்றன. ஜீவன் தன்னைப் பிரம்மத்திற்கு அந்நியம் என்றுநினைக்கின்றவரையிலும் பிறப்பு இறப்புக்கு வசப்பட்டுச் சுழன்றுகொண்டே இருக்கவேண்டும். பிரம்மத்தின் அருளால் ஜீவன் தன்னைப் பிரமத்தோடு ஐக்கியப்படுத்திக்கொண்டால் பிறப்பு இறப்புக்கு உள்ளாவதில்லை. அழியாப் பெருநிலையை அடைகிறது.'' இங்ஙனம் ஸ்வேதாஸ்வதர உபநிஷதம் கூறுகிறது.

கர்மக்கட்டிலிருந்து நம்மை விடுவித்துக் கொள்வதற்கு வினைப்பயன்களையெல்லாம் இறைவனிடம் ஒப்படைத்துவிடவேண்டும், நம்மையும் அவரிடம் ஒப்படைத்துவிடவேண்

டும். அப்பொழுது இறைவன் நம் கர்மபலன்களையெல்லாம் துடைத்துவிட்டு நம்மை அவரோடு ஐக்கியப்படுத்திக் கொள்கிறார்.

பிறர்செய்த கேட்டை நாம் சிந்திக்கக்கூடாது. பிறர் செய்த நலத்திலேயே நாம் கண்ணும் கருத்துமாய் இருந்து பிறர் முன்னேற்றத்திற்கு நாம் ஓயாமல் உழைத்துவர வேண்டும். இந்த மனநிலை நம்முடைய கேட்டிற்கு விமோசனம் தேடுகிறது. அத்தகையவர்களுடைய கர்மத்தை எல்லாம் இறைவன் அகற்றி வைத்துவிட்டுக் கர்ம அதீதத்திற்கு எடுத்துச் செல்கிறார். இக்கருத்தைத்தான் ஏசுநாதர் ''பிறர் செய்த குற்றங்களை நாம் மன்னித்தால் நாம் செய்த குற்றங்களைக் கடவுள் மன்னிக்கிறார்" என்று பகர்ந்திருக்கின்றார்.

26. பரமண்டலத்திலிருக்கின்ற எங்கள் பிதாவே! எங்களை மயக்கத்தில் ஆழ்த்தவேண்டாம். கேட்டிலிருந்து எங்களை விடுவிப்பாயாக. ராஜ்யம், சக்தி, புகழ் ஆகியவைகள் யாண்டும் உம்முடையவைகள்.

இவ்வுலகம் மாயாஜாலம் ஆகிறது. கடவுள் ஒரு பெரிய ஜாலவித்தைக்காரர். மாயா சக்தியைக்கொண்டு சிருஷ்டி, ஸ்திதி, சம்ஹாரம் என்னும் ஜாலவித்தையைக் காட்டிக்கொண்டிருக்கிறார். இப்பிரபஞ்சமாகவும், விசுவமனமாகவும் வடிவெடுத்திருப்பது அவரிடத்தில் உள்ள மாயாசக்தியாகும். மாயை கடவுளை மறைத்து வைத்துக்கொண்டிருக்கிறது. மாயை கடவுளை மறைத்துக்கொண்டிருப்பதால் வேற்றுமை நிறைந்த இப்பிரபஞ்சம் தென்பட்டுக்கொண்டிருக்கிறது. வெளி உலகப் பொருட்கள் இந்திரியங்கள் மூலம் மனதைக் கவர்கின்றன. அக்கவர்ச்சிக்கு மனம் வசப்பட்டு மயக்கம் அடைகின்றது. மயக்கம் அடைந்த மனது கடவுளை மறந்து அவருடைய மாயைக்கு அடிமையாகிறது. அடிமையாகின்ற மனது அக்ஞானத்திற்கு இடமளிக்கிறது. அக்ஞானம் அகங்காரத்தை வளர்க்கின்றது. புறப்பொருளின் கவர்ச்சிக்கு வசப்படுகின்ற மனது படிப்படியாக அழிவு நிலைக்குப் போவதைப் பகவத் கீதை இங்ஙனம் பகர்கிறது. ''இந்திரியங்கள்மூலம் மனது புற உலகிற்குச் செல்லும்போது புற உலக நினைவு உண்டாகிறது. புறப்பொருளைப்பற்றிய சிந்தனை பற்றுதலை உண்டாக்குகிறது. பற்று ஆசையாக வடிவெடுக்கிறது. ஆசை கோபத்துக்குக் காரணமாகிறது. கோபம் மனதைக்குழப்பத்தில் ஆழ்த்துகிறது. மனம் குழப்பம் அடைகிறபொழுது நினைவு தடுமாற்றம் அடைகிறது. நினைவு தடுமாற்றம் அழிவில் கொண்டுபோய்ச் சேர்க்கிறது." ஆதாம்-ஈவு கதையில் வருகின்ற ஆதாம் ஜீவாத்மன் ஆகின்றான். ஈவு புத்தியாகின்றாள். சாத்தான் மாயை ஆகின்றது. ஈவு விழ்ச்சி அடைந்தது புத்தி புறப்பொருளின் கவர்ச்சிக்கு உட்பட்டு மயங்குவதைக் குறிக்கின்றது. புத்தி மயங்குகிறபொழுது ஜீவாத்மனும் வீழ்ச்சி அடைகின்றான்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிரார்த்திப்பதாவது: ''தாயே! நான் உன்னுடைய திருவடியில் சரணம் அடைந்துவிட்டேன். உலகை மயக்கும் மாயை உன்னுடைய குழந்தையாகிய என்னை மயக்காதிருக்க அருள்புரிவாயாக." ஸ்ரீ ராமகிருஷ்ணருடைய மற்றோர் உபதேசம் வருமாறு: ''தாய் ஒருத்தி விளையாட்டுப் பொம்மைகளைத் தன் குழந்தையிடம் தந்து தன்னை மறக்கும்படி செய்கிறாள். விளையாட்டுப் பொம்மைகளைக் குழந்தையிடம் தந்து குழந்தையை விளையாடும்படி செய்துவிட்டுத் தாய் தன் வீட்டுக் காரியங்களைச் செய்துகொண்டிருக்கிறாள். விளையாட்டுப் பொம்மைகளைக்கொண்டு விளையாடிச் சலித்துப்போன குழந்தை விளையாட்டுப் பொம்மைகளை வீசி எறிந்துவிட்டுத் தாய் வேண்டும் என்று அழுகின்றது. தாய் தன்னுடைய வேலையை நிறுத்திவிட்டுக் குழந்தையை எடுத்து அணைத்துக் கொள்கின்றாள். இவ்வுலகப் பொருட்களில் திருப்தி அடைந்தவர்களாக இவைகளை அனுபவித்து வருகின்றவரையிலும் பராசக்தி நம்மை இவ்வுலகப் பொருள்களோடு விளையாடும்படி விட்டுவிடுகின்றாள். இவ்வுலகப்பொருட்களை வீசிஎறிந்துவிட்டு அன்னை பராசக்திதான் வேண்டும் என்கின்றபொழுது அவள் நமக்குக் காட்சிகொடுக்கின்றாள்." மாயையின் மயக்கத்தில் இருந்து தப்புவதற்கும் நம்முடைய மூலநிலையை அடைவதற்கும் நம்மைப் பூரணர்களாக ஆக்கிக்கொள்வதற்கும் முதலில் நாம் இந்திரியங்கள் மூலம் புறவுலகிற்குச் செல்லும் மனதைத் தடுத்து நிறுத்த முயலவேண்டும். அதற்குப் புலனடக்கம் என்று பெயர். மனதை உள்

முகமாகச் செலுத்தி ஆத்மசொருபத்தில் குவியச் செய்யவேண்டும். அதற்குத் தாரணை என்று பெயர். அப்படிக் குவியச் செய்த மனதை நிலைத்து அதிலேயே ஆழ்ந்து மூழ்கியிருக்கச் செய்யவேண்டும். அதற்குத் தியானம் என்று பெயர். அத்தகைய தியானத்தின் மூலம் நாம் ஆத்ம சொருபமயம் ஆகிவிடுகின்றோம். அதைச் சமாதிநிலை என்று சொல்கின்றோம். இது ஒருநாளில் வந்து அமையக் கூடியது அன்று. இதற்குப்பெருமுயற்சிஎடுக்க வேண்டும். இறைவனுடைய திருவருளை யாண்டும் சார்ந்திருக்கவேண்டும். அப்பொழுதுதான் மாயை வலையை அறுத்துப் பரத்தோடு லயமாவது சாத்தியமாகும்.

दैवी ह्येषा गुणमयी मम माया दुरत्यया ।
मामेव ये प्रपद्यन्ते मायामेतां तरन्ति ते ॥

தைவீ ஹ்யேஷா குணமயீ மம மாயா துரத்யயா
மாமேவயே பிரபத்யந்தே மாயா மேதாம் தரந்தி தே

"குணங்களால் ஆகிய என்னுடைய தேவ மாயையானது உண்மையில் தாண்டமுடியாதது. யார் என்னையே சரணடைகின்றார்களோ அவர்கள் இந்த மாயையைத் தாண்டுகின்றனர்." இங்ஙனம் கண்ணன் பகர்ந்திருக்கின்றார். கண்ணனுடைய வாக்குப்படி மாயைக்கடப்பதற்குக் கடவுளைச்சார்ந்திருந்தே ஆகவேண்டும் என்பது தெளிவாகின்றது. மாயாசக்தி எத்தகைய ஞானியையும் மயக்கிவிடும் என்றும் சரீரவாழ்வு உள்ளவரையில் அந்தச் சக்திக்கு உட்பட்டே நாம் வாழ்ந்தாக வேண்டும் என்றும் ஸ்ரீ ராமகிருஷ்ணர் தம் குருவாகிய தோதாபுரியிடம் பகர்ந்தார். தோதாபுரியோ அக்கூற்றை ஏற்க மறுத்துவிட்டார். அவர் வாழ்வில் இரண்டு நிகழ்ச்சிகள் மாயா சக்தியினுடைய வன்மை எத்தகையது என்பதைக்காட்டித்தந்தபின்பே அவர் அக்கூற்றை ஏற்றுக்கொண்டார். அவர் எல்லாம் பிரம்ம சொருபம் என்றே சொல்வார். பிரம்மத்திற்கு அந்நியமாக ஒன்றுமில்லை என்பார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் பிரம்மஞானியின் ஞானத்தையும் அம்பிகை தத்தளித்துவிடும்படி செய்துவிடுவாள் என்று கூறுவார். ஒவ்வொரு நாளும் தோதாபுரி மாலைவேளையில் அக்னி வளர்த்து அதன் முன் இருந்து தியானம் செய்வார். அப்படி ஒருநாள் செய்துகொண்டிருக்கும் பொழுது ஸ்ரீ ராமகிருஷ்ணரும் அவருக்குப் பக்கத்தில் இருந்தார். தியானம் ஆரம்பிப்பதற்கு முன்பு வழிப்போக்கன் ஒருவன் எரிந்துகொண்டிருந்த அக்னியில் இருந்து ஒரு கொள்ளிக் கட்டையை எடுத்துச் சுருட்டுப் பற்ற வைக்க முயன்றான். அதைப் பார்த்ததும் தோதாபுரி அவனைத் தாக்க ஆயத்தமானார். ஸ்ரீ ராமகிருஷ்ணர் 'கொல்'என்றுசிரித்தார். அவன் செய்தது தவறல்லவா என்று தோதாபுரி கேட்டார். "சற்று நேரத்திற்கு முன்பு தாங்கள் யாவும் பிரம்மம் என்று கூறினீர்கள். தங்கள் கூற்றுப்படி தாங்களும் பிரம்மம்; அவ்வழிப்போக்கனும் பிரம்மம். பிரம்மம் பிரம்மத்தை அடிக்கிறது. மாயாசக்தியின் இவ்வன்மை குறித்துச் சிரித்தேன்" என்றார். மற்றொரு சமயம் தோதாபுரிக்கு வயிற்றுவலி வந்துவிட்டது. மனதைச் சரீரத்தைவிட்டு விலக்கிப் பிரம்மநிஷ்டையில் வைப்பதற்கு அவர் எவ்வளவோ முயன்றார். ஆனால் வயிற்றுவலியோ அவருடைய மனதைச் சரீர ஞாபகத்திற்கே இழுத்துக்கொண்டு வந்தது. சரீரம் இருந்தால்தானே சரீர ஞாபகம் வருகிறது. கங்கையில் சரீரத்தை உகுத்துவிடலாம் என்று கங்கையில் இறங்கினார். முழங்கால் அளவுக்குமேல் கங்கையில் நீர் இல்லை. கங்கையைக் கடந்து போய்விட்டார். இந்தச் சரீரத்தை உகுப்பதற்குக்கூட எனக்கு உரிமை இல்லையா என்று நினைத்தபொழுது நம்மையும் மீறிய சக்தி ஒன்று உள்ளது என்று ஸ்ரீ ராமகிருஷ்ணர் கூறியது அவர் ஞாபகத்திற்கு வந்தது. அப்பொழுதுதான் மாயா சக்தியை இறைவன் அருளால்தான் வெல்ல முடியும் என்பதை அவர் உணர்ந்தார்.

மாயையைக் கடக்கும்பொழுதுதான் கடவுள் காட்சி கிட்டுகிறது. யாவும் பிரம்ம மயமாய் இருப்பதை மாயையைக்கடந்து அப்பால் செல்கின்றவர்கள் அறிகின்றார்கள். இப்பிரபஞ்சம் அவருடைய ராஜ்யமாகவும், இப்பிரபஞ்சத்தில் உள்ள சக்திகள் அவருடைய மகிமைகளாகவும் இருப்பதை ஞானிகள் அறிகின்றார்கள். அவருடைய மகிமை யாண்டும் விளங்கிக்கொண்டிருப்பது அவர்களுக்கு முற்றும் தெளிவாகிறது. இக்கருத்தை இயேசுவின் இவ் உபதேசம் விளக்குகிறது.

வேதாந்தம்

வேதாந்தம் என்பது மெய்ப்பொருளைக் குறிக்கின்றது. வேதம் என்பது இயற்கை. இயற்கைக்கு அப்பாற்பட்டவர் மெய்ப்பொருள் ஆகின்றார். வேதத்திற்கு அப்பாற்பட்டதாய் இருப்பதால் மெய்ப்பொருளை வேதாந்தம் என்றும் சொல்லலாம். பஞ்சேந்திரியங்களுக்கும் மனதுக்கும் புலனாவது எதுவோ அது வேதம் அல்லது இயற்கை ஆகின்றது. பஞ்சேந்திரியங்களுக்கும் மனதுக்கும் அப்பாற்பட்டது எதுவோ அது வேதாந்தம் அல்லது மெய்ப்பொருள் ஆகின்றது.

'உள்ளுவதெல்லாம் உயர்வுள்ளல்' என்பது கோட்பாடு. எல்லாவற்றிற்கும் மேலான பொருளாய் இருப்பது வேதாந்தம். எனவே வேதத்தைப்பற்றிய சிந்தனை உயர்ந்த சிந்தனையாகிறது. இனி வேதாந்தத்துக்குத் திருமூலர் தருகின்ற விளக்கத்தை ஆராய்வோம். திருமூலருடைய பாடல் வருமாறு:

> வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர்
> வேதாந்தம் கேட்டும்தம் வேட்கை ஒழிந்திலர்
> வேதாந்த மாவது வேட்கை ஒழிந்திடம்
> வேதாந்தம் கேட்டவர் வேட்கைவிட் டாரே.

நமக்குத் தெரிந்த ஒருவரை நாம் சந்திக்கும் பொழுது "இப்பொழுதுதான் வருகின்றீர்களா? எங்கிருந்து வருகிறீர்கள்?" என்று கேட்போம். அவர் இப்பொழுதுதான் வருகிறேன் அல்லது சிறிது நேரத்திற்கு முன்பு வந்தேன் என்றும், தாம் எந்த ஊரில் இருந்து வந்தாரோ அந்த ஊர்ப் பெயரைக் கூறி அங்கிருந்து வந்ததாகவும் கூறுவார். 'இவ்வுலகத்துக்கு வந்துள்ள உயிர்கள் எல்லாம் எங்கிருந்து வந்திருக்கின்றன என்ற கேள்வி எழலாம். உயிர்கள் எல்லாம் மெய்ப்பொருள் அல்லது வேதாந்தத்திடமிருந்து புறப்பட்டு வந்திருக்கின்றன. வித் என்றால் அறிதல் என்று பொருள். வேதம் என்றால் இயற்கை. வேத வித் என்றால் இயற்கையை அறிபவன் என்று பொருள். இயற்கை அறிவு புலன்களைக்கொண்டும் மனதைக்கொண்டும் பெறுகின்ற அறிவு ஆகிறது. இதற்கு அபரவித்தை என்று பெயர். புலன்களுக்கும் மனதுக்கும் மேலான அறிவுக்குப் பரவித்தை என்றுபெயர். வாலறிவு என்றும்அதைச் சொல்லலாம். உயிர்கள் எங்கிருந்து வந்திருக்கின்றன என்றால் வேதாந்தம்அல்லது மெய்ப்பொருளில் இருந்து வந்திருக்கின்றன. வேதாந்தத்தைப் பற்றி அறிந்துகொள்ள வேதியர்கள் விரும்புகிறார்கள். மெய்ப்பொருளை அடையவேண்டும் என்ற நாட்டம் உடையவர்கள் வேதியர்கள் ஆகின்றார்கள். அவர்கள் அந்தணர்கள் என்றும் அழைக்கப்படுகிறார்கள். 'அந்தணர் என்போர் அறவோர்' என்று அந்தணர்களுக்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. மனத்துக்கண் மாசிலன் ஆதல் அனைத்தறன் என்று அறத்திற்கு விளக்கம் தரப்பட்டிருக்கிறது. மனதை மாசற்றதாக்கி அறவழியில் நிற்கின்ற அந்தணர்கள் மெய்ப்பொருளைப்பற்றி அறிய விரும்புகின்றனர்.

மெய்ப்பொருளுக்கு இனி விளக்கம் தந்தாக வேண்டும். உபாதிகள் எல்லாம் ஒழிந்த பிறகு எஞ்சியிருப்பது எதுவோ அது மெய்ப்பொருள். "வான்கெட்டு மாருதம் மாய்ந்து அழல்நீர் மண்கெடினும் தான் கெட்டல் இன்றிச் சலிப்பறியாத் தன்மையன்" என்று மெய்ப்பொருளுக்கு மாணிக்கவாசகர் விளக்கம் தருகிறார். பிரளயகாலத்தில் நிலம் நீரிலும், நீர் நெருப்பிலும், நெருப்பு காற்றிலும், காற்று ஆகாசத்திலும், ஆகாசம் மூலப் பிரகிருதியிலும் ஒடுங்குகின்றன. மூலப் பிரகிருதி மெய்ப்பொருளில் ஒடுங்குகிறது. மெய்ப்பொருள்தான் எஞ்சி இருக்கிறது. அம்மெய்ப்பொருள் மயமாவதற்கு "ஊன்கெட்டு உயிர்கெட்டு உணர்வு கெட்டு என் உள்ளமும் போய் நான் கெட்டவாபாடித் தெள்ளேணம் கொட்டாமோ" என்று கூறி மாணிக்கவாசகர் வழிகாட்டுகிறார். ஜீவன் தன் வியக்தியை மேற்கூறியவாறு கரைத்து மெய்ப்பொருளோடு ஒடுக்கினால் அவன் மெய்ப்பொருள் மயமாகின்றான். உடலைத்தான் என்று அகங்கரிப்பது அகங்காரமாகும். தன்னை உடல் மயமாகக் கருதுபவன் 'நான் நெட்டையன், குட்டையன், கறுப்பன், சிவப்பன்' என்று கூறிக் கொள்கின்றான். உடல் மயமாகத் தன்னை எண்ணிக்கொண்டிருப்பதை ஒழிக்க வேண்டும். அதை ஊன் கெட்டு என்று சொல்கின்றார்.

சரீரப் பற்று ஒழிந்துபோய்விட்டால் ஊன் கெடுதலாகிறது. நான் சக்திவாய்ந்தவனய் இருக்கின்றேன், ஆற்றல் படைத்தவனய் இருக்கின்றேன் என்று அகங்கரிப்பது உயிர்ப் பற்று ஆகிறது. உயிர்ப்பற்று போய்விட வேண்டும். உயிர்மயமாகத் தன்னே எண் ணிக்கொண்டிருக்கின்ற எண்ணத்தை ஒழித்து விடவேண்டும். உயிர் இருந்தால்தான் செயல் நிகழும். உயிர் இல்லாவிட்டால் உடல் செய லற்றதாய்ப் போய்விடும். உயிரை நாம் சக்தி மயமாகப் பாராட்டுகின்ருேம். சக்தி இல்லை யென்ருல் சிவமே சவமாகிவிடும். இதை விளக்குப் ஒரு நிகழ்ச்சியைச் சங்கரர் வாழ்க்கை யில் காண்போம். சங்கரர் காசியில் இருந்த பொழுது கங்கையில் ஸ்நானம் செய்துவிட்டுக் காசி விசுவநாதரைத் தரிசிக்கக் குறுகலான சந் தின் வழியே போய்க்கொண்டிருந்தார். அச் சந்தின் குறுக்கே சவம் ஒன்றைப் படுக்க வைத்து மாது ஒருத்தி புலம்பிக்கொண்டிருந் தாள். சவத்தைத் தாண்டிக்கொண்டு போகக் கூடாதாகையால் சங்கரர் அம்மாதுவிடம் பகர்ந்ததாவது: "நான் விசுவநாதர் தரிசனத் திற்குப் போகவேண்டும். குறுக்கே கிடக்கும் இச்சவத்தை எடுத்து நெடுக்கே போட்டுப் போவதற்கு வழிவிடு." அம்மாது சங்கர ரிடம் கூறியதாவது: "குறுக்கே கிடக்கின்ற சவத்தை எழுந்து நெடுக்காகப் படுக்கும்படி சவத்திற்கு நீங்கள் உத்தரவு போடுங்கள்." "சவம் எழுந்து நெடுக்கே படுப்பதற்கு அதற்குச் சக்தி ஏது?" என்று சங்கரர் கேட்டார். "சக்தி இல்லாதது சவம்தானே" என்று அவ் வம்மையார் கூறினர்கள். சங்கரர் விழிப் படைந்தார். "தாயே, நீங்கள் யாராக இருந் தாலும் எனக்குக் குரு ஆகின்றீர்கள்" என்று அந்த அம்மையின் காலில் சங்கரர் விழுந்தார். சவமாகக்கிடந்தது சிவனும், புலம்பிக்கொண்டு பெண்ணுக இருந்தது சக்தியும் ஆவார்கள். சிவ சக்தியாகச் சங்கரருக்குக் காட்சி கொடுத் துச் சங்கரருக்குச் சக்தியின் மகிமையை அவர்கள் விளக்கினர்கள்.

உணர்வு மயமாக இருப்பது உள்ளம். உணர்வு கெட்டு என்பது உள்ளத்தில் உள்ள பிரபஞ்ச உணர்வு கெட்டுப்போவதைக் குறிக் கிறது. உடலாக எண்ணிக்கொண்டிருந்த நான், உயிராக எண்ணிக்கொண்டிருந்த நான், உணர்வாக எண்ணிக்கொண்டிருந்த நான் ஒழிந்துபோனல் மெய்ப்பொருள்தான் மிச்சம் இருக்கிறது. அதுதான் யாவற்றுக்கும் ஆதார மாக இருக்கிறது. அதுவே வேதாந்தம் ஆகிறது. வேதாந்தத்தை அறிந்துகொள்ள விரும்புகிறவர்கள் வேதியர்கள் என்று சொன் னேம். நசிகேதன் வேதியன் ஆகின்ருன். நசிகேதன் எமனிடம் வேதாந்தமாகிய மெய்ப் பொருளைப்பற்றித்தான் கேட்கின்ருன். உடல் பிறப்பு எல்லாஉயிர்களுக்கும் பொது. மனிதன் உடலில் வாழ்கின்றபொழுது மற்ருெரு பிறப்பு எடுக்கின்ருன். அதை ஞானப் பிறப்பு என்று சொல்கின்ருேம். காயத்ரி மந்த்ரம் அறிவைப் பற்றிய தியானம் ஆகிறது. எந்த அறிவுப் பொருள் நம்அறிவைத் தூண்டுகிருரோ அந்தச் சுடர்க் கடவுளின் மேலானஒளியை நாம் தியா னிப்போமாக என்பது காயத்ரி மந்த்ரத்தின் பொருள். நாம் உடல் சொரூபம் அல்ல. நாம் அறிவு சொரூபம் என்பதைக் காயத்ரி மந்த்ரம் நம் உள்ளத்தின்கண் பதிய வைக்கிறது. உடல் சுகம் வேண்டுமென்று பாடுபடுகின்றவர் கள் தேகாத்ம புத்தி படைத்தவர்கள் ஆகிருர் கள். ஆத்ம ஞானத்துக்காகப் பாடுபடுபவர்கள் வேதியர்கள் ஆகின்ருர்கள். ஆத்ம ஞானம் பெற விழைகின்றவர்கள் அரியரினும் அரிய ராவார்கள். நவீனக் கல்விமான்கள் ஞானத் துக்காகக் கற்பவர்கள் அல்லர். பொருள் நாட் டமும் தேகசுகத்தைப்பெறும் நாட்டமும் உடை யவர்களாக அவர்கள் இருக்கிருர்கள். மெய்ஞ் ஞானம் பெற வேண்டும் என்ற நாட்டம் அவர் களுக்கு இல்லை. நசிகேதன் போன்ற ஞான வேட்கை உடையவர்கள் ஞானம் ஒன்றையே நாடுகிருர்கள். உடலில் இருந்துகொண்டே ஞானப் பிறப்பை எய்துகின்றவர்கள் துவிஜர் கள் ஆகின்ருர்கள். ஸ்ரீ ராமகிருஷ்ணர் தற் காலப் பள்ளிப் படிப்பை வேண்டாம் என்று ஒதுக்கினர். உடலை வளர்ப்பதற்கு வேண்டிய ஜீவனேபாயத்திற்குத் தற்காலக் கல்வி ஓரளவு துணைபுரிகிறது. ஆத்மஞானம் பெறவேண்டும் என்னும் வேட்கையைத் தற்காலக் கல்விமுறை உண்டாக்குவதில்லை. ஆகையால் அவர் தற் காலக் கல்வியை ஒதுக்கிவிட்டு மெய்ஞ்ஞானத் தைப்பெற நாட்டம் உடையவராக இருந்தார்.

வேதாந்தம் கேட்க விரும்பிய வேதியர் என்று அவரைப் பகரலாம்.

ஜீவாத்மன் சரீரத்தை ரதமாகவும், புத்தியைச் சாரதியாகவும், மனதைப் பிடிகயிருகவும், இந்திரியங்களைக் குதிரைகளாகவும் கொண்டு மெய்ப்பொருளை நோக்கி யாத்திரை பண்ணிக்கொண்டிருக்கின்றான். தன்னை உடல் மயமாகவும், மனோமயமாகவும், இந்திரியங்கள் மயமாகவும் கருதிக்கொள்கின்றவன் ஜீவாத்மாவாகின்றான். தெருவில் விறகைத் தலையில் தூக்கிச் செல்பவன் தாற்காலிகமாகத் தன்னை விறகாகக் கருதிக்கொள்கிறான். அப்படிக் கருதிக்கொள்வதனால் விறகு என்று சொன்னால் அவன் வருவான். அவன் உண்மையில் விறகு அல்லன் என்பதை அறிந்திருந்தும் விறகாகத் தன்னைக் கருதிக்கொள்ளும் உபாதி விறகைச் சுமந்து கொண்டு செல்லும் போது அவனுக்கு உண்டாகி விடுகிறது. பந்தியில் சாதம் பரிமாறிக் கொண்டே இருப்பவன் அச்செயலைச் செய்துகொண்டிருக்கும்பொழுது தன்னையும் அறியாது தன்னைச் சாதமயமாகக் கருதிக்கொள்கின்றான். பந்தியில் அமர்ந்திருப்பவர்கள் சாதம் என்று அழைத்தால் அவர்களை நோக்கி அவன் செல்வான். விறகைத் தூக்கிச் செல்பவன் மற்றவர்களுக்கு அடுப்பு எரிக்க உதவுகின்றான். சாதம் பரிமாறுபவன் மற்றவர்களுடைய பசியைப் போக்க உதவுகின்றான். அந்த நற்செயல்களைச் செய்துகொண்டிருக்கையில் தன்னை விறகாகவோ, சாதமாகவோ கருதிக்கொள்ள வேண்டியதில்லை. அங்ஙனம் பரம்பொருளை அடைவதற்காக ஜீவாத்மா இவ்வுடலைப் பெற்றிருக்கின்றான். மற்ற உயிர்களுக்கு நலம் செய்வதற்காகவும் ஜீவாத்மா இவ்வுடலைப் பெற்றிருக்கின்றான். இந்த நல்ல காரியங்களை இவ்வுடலைக்கொண்டு செய்துகொண்டிருப்பதற்கிடையில் இவ்வுடலைத் தன்மயமாக எண்ணிக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. ஆனால் ஜீவாத்மாக்கள் அந்தத் தவறைச் செய்துவிடுகின்றனர். உடல் எதற்காக அமைந்திருக்கிறது என்ற உண்மையை அறிந்திருந்த திருமூலர் பகர்வதாவது:

> உடம்பினை முன்னம் இழுக்கென் றிருந்தேன்
> உடம்பினுக் குள்ளே உறுபொருள் கண்டேன்
> உடம்புளே உத்தமன் கோயில்கொண் டான்என்று
> உடம்பினை யானிருந்து ஓம்புகின் றேனே.

உடம்புக்குள்ளே உத்தமன் கோயில்கொண்டிருக்கிறான் என்பதை அறிந்து அவ் உத்தமனை அடைவதற்குச் சரீரத்தைக்கொண்டு நல்ல கிருத்தியங்களைச் செய்யவேண்டும்.

உடலோடும், இந்திரியங்களோடும், மனதோடும் தன்னைப் பிணித்துக்கொள்கின்ற ஜீவாத்மன் முதலில் அந்தப் பிணிப்பில் இருந்து தன்னை விடுவித்துக்கொள்ளவேண்டும். அப்படி விடுவித்துக்கொள்வதற்குத் தான் உடல், இந்திரியம், மனம் அல்ல என்றும் தான் ஆத்மசொரூபம் என்றும் எண்ணவேண்டும். அந்த எண்ணம் ஆழ்ந்தது ஆகஆக உடல், மனம், இந்திரியங்களைத் தன்மயமாக்குகின்ற எண்ணம் ஒழிந்துவிடும். மெய்ப்பொருளிடம் இருந்துவந்த நாம் உபாதிகள் பலவற்றை உண்டுபண்ணிக்கொண்டு அவ்வுபாதிகள்மயமாக நம்மைக் கருதிவருகின்றோம். நாம் உண்டுபண்ணிக்கொள்கின்ற உபாதிகளை ஒழித்துவிட்டு மெய்ப்பொருள் நாம் என்பதை உணரும்போதுதான் நம் யாத்திரை பூர்த்தி அடைகின்றது. ஸ்ரீ ராமகிருஷ்ணர் இவ்வுண்மையை ஒரு உபமானத்தின்மூலம் விளக்குகின்றார். "கடல் நீர் வெப்பத்தினால் ஆவி ஆகிறது. அந்த ஆவி மேகமாகி மேகம் குளிர்ந்து மழையாகப் பொழிகிறது. மழைநீர் நதிகளாகப் பெருக்கெடுத்து ஓடுகின்றது. இறுதியில் மழைநீர் கடலைப் போய்ச்சேர்கின்றது. கடலில் இருந்து புறப்பட்ட நீர் கடலைப் போய்ச் சேர்கின்றபொழுதுதான் அதன் யாத்திரை பூர்த்தி அடைகின்றது. அங்ஙனம் மெய்ப்பொருளில் இருந்து புறப்பட்ட உயிர்கள் மெய்ப்பொருளைப் போய்ச் சேர்கின்றபொழுதுதான் அவைகளுடைய யாத்திரை பூர்த்தி அடைகின்றது." ஆகையால் நாம் புறப்பட்ட இடமாகிய மெய்ப்பொருளை உணர்கின்ற பொழுதுதான் நம் யாத்திரை பூர்த்தி அடைகின்றது.

மெய்ப்பொருளைப்பற்றிக் கேட்கின்றவர்கள் பிரபஞ்ச ஆசையை விட்டொழிக்கவேண்டும். உள்ளத்தில் மெய்ப்பொருள் நாட்டம் உண்மையில் உண்டாகிவிடுமானால் உள்ளத்தில் இருந்து உலக ஆசை ஒழிந்துபோகும். இன்

புற்றிருப்பதற்காக உலகப் பொருள்களின்மீது ஆசைகொள்கின்றோம். உலகப்பொருள்களை நாடிப்போவது இன்பத்தைப் பெறுவதற்கே யாம். உலக நாட்டம் சுகத்தைத் தருவதற்குப் பதிலாக ஆசையைப் பெருக்கி அல்லலை வளர்க்கிறது. உலக ஆசை அளவுக்கு உட்படாததாக இருக்கிறது. 'ஆசைக்கோர் அளவில்லை' என்று தாயுமானவர் பகர்கிறார். பிரபஞ்சம் முழுவதும் நமக்குச் சொந்தமாகிவிட்டால் சந்திரலோகத்தையும், சூரியலோகத்தையும் நமக்குச் சொந்தமாக்க வேண்டும் என்ற ஆசை உண்டாகும். குபேரசம்பத்துப் பெற்றிருப்பவனும் இன்னும் ஐசுவர்யம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்றான். சைக்கிள் வைத்திருக்கின்ற மனிதனுக்குக் கார் வாங்கவேண்டும் என்ற ஆசை உண்டாகிறது. காரைப் பெற்றுவிட்டால் விமானம் வாங்கவேண்டும் என்ற ஆசை உண்டாகிறது. உலக ஆசை இங்ஙனம் வளர்ந்துகொண்டு போகுமேயன்றி அது பூர்த்தி ஆவதில்லை. ஆகவே உலக வசதிகளைப் பெருக்கிக்கொண்டே இருப்பவன் ஆசையை வளர்த்துக்கொண்டே இருப்பவன் ஆகின்றான். உலகத்தில் வாழ்க்கை வசதிகளைப் பெருக்கிக்கொண்டே இருப்பவன் ஆசை வளர்ந்துகொண்டு இருப்பதைத் தடுத்து நிறுத்தமுடியாது.

ஆசை வளர்ந்து கொண்டே போகிறது என்பதற்கு ஸ்ரீராமகிருஷ்ணர் ஓர் உபதேசக்கதைச் சொல்கின்றார். "அம்பட்டன் ஒருவன் இருந்தான். அவன் ஒரு சமயம் காட்டுக்குள் போய்க் கொண்டிருந்தபொழுது 'ஏழு ஜாடித் தங்கம் வேண்டுமா' என்ற அசரீரி ஒன்றைக் கேட்டான். 'வேண்டும்' என்று மிக்க ஆவலுடன் கூறினான். காட்டுக்குள் இருந்த ஒரு மரத்தைக் குறிப்பிட்டு அம்மரத்தின் கீழ் ஏழு ஜாடி தங்கம் இருக்கிறதென்று அசரீரி கூறியது. அம்பட்டன் அவ்விடத்திற்குப் போய்ப் பார்த்தபோது ஆங்கு ஏழு ஜாடிகள் இருப்பதைக் கண்டான். அவற்றை ஒவ்வொன்றாகத் திறந்து பார்த்தான். ஆறு ஜாடிகளில் நிறையாகத் தங்கம் இருப்பதைப் பார்த்தான். கடைசி ஜாடியில் மட்டும் முக்கால் அளவுதான் தங்கம் இருந்தது. அந்த ஜாடியையும் நிரப்ப வேண்டும் என்ற ஆசை அவனுக்கு வந்து விட்டது. அவசரம் அவசரமாக அவற்றை வீட்டுக்கு எடுத்துச் சென்றான். வீட்டில் கொண்டு போய் வைத்தான பிறகு ஏழாவது ஜாடியை நிரப்பும் ஆசையைப் பூர்த்திபண்ண முயன்றான். வீட்டிலுள்ள சாமான்களையெல்லாம் விற்று அப்பணத்தைக்கொண்டு தங்கம் வாங்கி ஏழாவது ஜாடிக்குள் போட்டான். தனக்கு வரும் சம்பளத் தொகைக்குத் தங்கம் வாங்கி அதையும் ஜாடிக்குள் போட்டான். சம்பளப் பணத்தில் பாதிக்குமேல் தங்கம் வாங்குவதற்குப் பயன்படுத்தப்பட்டமையால் அவன் பட்டினி கிடக்க வேண்டியதாயிற்று. அதனால் அவன் உடல் இளைத்துக்கொண்டே வந்தது. அரசன் அவனைப் பார்த்து 'சரீரம் இளைப்பதற்குக் காரணம் என்ன?' என்று கேட்டான். 'விலைவாசி உயர்வின் காரணமாகச் சம்பளம் வாழ்க்கைக்குப் போதுமானதாக இல்லை' என்றான் நாவிதன். அரசன் அவன் சம்பளத்தை இரண்டு பங்கு உயர்த்தினான். ஆனால் அவன் வாங்கிய சம்பளப் பணத்தையெல்லாம் தங்கமாக மாற்றி ஜாடிக்குள் போட்டுக்கொண்டிருந்தான். ஆகையினால் அவன் உடல் மேலும் இளைத்துக்கொண்டே வந்தது. அரசன் மறுபடியும் அவனைப் பார்த்தபொழுது "சம்பளத்தை உயர்த்தியும் உன் உடல் தேறவில்லை. உனக்கு யக்ஷன் ஜாடித் தங்கம் கிடைத்திருக்கிறதா?" என்று கேட்டார். "அரசே, அது உங்களுக்கு எப்படித் தெரியும்?" என்று கேட்டான் அம்பட்டன். 'அது தான் இப்படி ஒரு மனிதனை அலக்கழித்துக்கொண்டிருக்கும். அது இருந்த இடத்திற்கே போய்ச்சேர வேண்டும் எனப் பிரார்த்தனை செய்துகொள். அப்பொழுதுதான் உனக்கு விமோசனம்' என்றார். அம்பட்டனும் ஜாடித் தங்கம் வந்த விதமே செல்லட்டும் எனப் பிரார்த்தித்துக்கொண்டான். அது அவனிடம் ஏற்கனவே இருந்த பொருள்களையெல்லாம் அபகரித்துக்கொண்டு போய்விட்டது." உலக ஆசையின் விளைவு அத்தகையது ஆகும். உலகப் பொருட்களை நாடிப் போனாலோ, உலக விஷயங்களைக் கேட்டாலோ ஆசை பெருகும். உலகத்தோடு இணக்கம் வைக்கின்றவர்கட்கு ஆசை பெருகிக்கொண்டே போகும். ஆனால் வேதாந்தம் அல்லது மெய்ப் பொருளை நாடிப்போனாலோ, மெய்ப்பொருளைப்

பற்றிக் கேட்டாலோ ஆசை பூர்த்தியாகி நிராசை உண்டாகிறது. மெய்ப்பொருள் ஞானம் உள்ளத்திலுள்ள உலக ஆசையை ஒழித்துத் தெய்வீகப்பற்றை வளர்க்கிறது. இதனையே 'வேதாந்தம் கேட்டவர் வேட்கை விட்டாரே' என்று திருமூலர் கூறியுள்ளார்.

பசி வரும்பொழுது உணவு உட்கொள்கின்றோம். உண்டபின் பசி தணிந்து விடுகிறது. சாப்பிட்ட பின்னும் பசிக்குமானால் அவன் சாப்பிட்டது உணவு அன்று; பசியை உண்டாக்கும் மருந்தாக இருக்கவேண்டும். அங்ஙனம் வேதாந்தம் அல்லது மெய்ப்பொருளைக்கேட்டவர்கள் உள்ளத்தில் ஆசை அகன்று வரவேண்டும். வேதாந்தம் கேட்டவர்கள் உள்ளத்தில் ஆசை வளர்ந்து வருமானால் அவர்கள் வேதாந்தம் கேட்டவர்கள் ஆகார். வேதாந்தம் என்கின்ற போர்வையில் அவர்கள் உள்ளம் உலக விஷயத்தை நாடிப்போவதாகிறது. திருப்பதி வேங்கடாசலபதிக்குச் சிலர் லட்சக்கணக்கான ரூபாயை உண்டியலில் போடுகிறார்கள். அப்படிப் போடுகிறவர்கள் எல்லாரும் கடவுள் வழிபாடு செய்தவர்களல்லர். அப்படிச் செய்வதன் மூலம் தங்களுடைய உள்ளத்தில் மேலும் ஆசையைப் பலர் வளர்த்தவர்களாகின்றார்கள். வெளித் தோற்றத்துக்கு அது கடவுள் வழிபாடாகத் தென்படினும் உண்மையில் அது உலக ஆசையை வளர்ப்பது ஆகிறது. மெய்ப்பொருள் நாட்டம் ஆசையை ஒழிப்பதாகும். மெய்ப்பொருளை உண்மையில் நாம் நாடுகின்றபொழுது ஆசை தானாகவே ஒழிந்துபட்டுப்போகிறது. வள்ளுவர் பகர்வதாவது:

"பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
பற்றுக பற்று விடற்கு."

மேற்குத் திசையை நோக்கிச் சென்றால் கிழக்குத்திசை பின்னணிக்குப் போகும். அங்ஙனம் கடவுள்பற்று ஓங்கி வந்தால் உள்ளத்திலிருந்து உலகப்பற்று அகன்றுவிடும். உள்ளத்தில் உலகப்பற்று ஒழியவில்லை என்றால் ஆங்குக் கடவுள் பற்று உண்டாகவில்லை என்பது தெளிவு. தெய்வப்பற்றை வளர்த்து வருவதற்கும், உலகப்பற்றை அகற்றுவதற்கும் நாம் செய்கின்ற செயல் ஆத்ம சாதனை ஆகும். மெய்ப்பொருள் நாட்டம் உடையவர்களுக்கு உலக நாட்டம் போய்விடும். உலகத்தில் சிலர் தங்களை வேதாந்திகள் என்று சொல்லிக் கொள்கிறார்கள். ஆனால் அவர்களிடத்தில் உலகப்பற்று வேண்டிய அளவு இருப்பதைப் பார்க்கின்றோம். அவர்களிடத்தில் நாம் எச்சரிக்கையாக இருக்கவேண்டும். ஒருவர் வேதாந்தம் பேசிக்கொண்டு ஒழுக்கம் குன்றிய செயலில் ஈடுபட்டிருந்தார். அப்பொய்வேஷக்காரரை ஸ்ரீ ராமகிருஷ்ணர் மிகவும் கண்டித்தார். அவர் ஸ்ரீ ராமகிருஷ்ணரிடம் பகர்ந்ததாவது: "வேதாந்தத்தின்படி இவ்வுலகம் பொய்; இவ்வுலகத்தில் நிகழும் செயல்களும் பொய்யானவை. அப்படி இருக்க என்னுடைய செயல்மட்டும் எப்படி மெய்யாகும்?"என்றார். "சீ, நீ ஒரு வேதாந்தியா! நீ ஒரு காமுகன்; உன் வேதாந்தப் பேச்சில் சிறு நீர் கழிக்கிறேன்" என்று கூறி அவருடைய போலி வேதாந்தத்தைப் புறக்கணித்தார் ஸ்ரீராமகிருஷ்ணர். அவர் பேச்சு வேதாந்த விஷயமாக இருந்தாலும் செய்கை ஆசையை வளர்ப்பதாகஇருந்தது. அவர் வேதாந்தம் கேட்டும் வேட்கை விட்டவர் அல்லர்.

'படிப்பது ராமாயணம் இடிப்பது பெருமாள் கோவில்' என்பது ஒரு பழமொழி. வேதாந்த நூல்களை விமர்சனம் செய்வார்கள். வேதாந்த விஷயங்களைப் பாடம் கேட்டுக்கொண்டிருப்பார்கள். அத்தகையவர்கள் உள்ளத்தில் சிற்றியல்புக்கு வேண்டியவாறு இடம் கொடுத்துக் கொண்டிருப்பார்கள். வேதாந்திகள் என்று சொல்லிக்கொண்டே மணம் புரிந்துகொண்டு குழந்தைகளைப் பெற்றுக்கொண்டே இருப்பார்கள். ஒருமுறை ஸ்ரீ ராமகிருஷ்ணர் தேவேந்திர நாததாகூர் என்ற பெரியாரைப் பார்க்கப் போனார். அவருக்கு மஹரிஷி என்ற பட்டத்தை மக்கள் வழங்கி இருந்தார்கள். அவருக்கு ஏராளமான மக்கள் இருந்தார்கள். அவரைப் பார்த்து விட்டுத் திரும்பும்போது ஸ்ரீ ராமகிருஷ்ணர் பகர்ந்ததாவது: "இத்தனை மக்களைப் பெற்றுக் கொண்டும், அதே சமயத்தில் மஹரிஷியாகவும் இருப்பது எனக்கு விளங்காத புதிராக இருக்கிறது." இப்படி உலகில் வேதாந்திகள் என்று சொல்லிக்கொண்டிருப்பவர்கள் ஆசையை வளர்க்கும் செயலில் ஈடுபடுகிறார்கள். அத்தகையவர்கள் வேதாந்தம் கேட்டும் வேட்கை விட்டவர்களல்லர். (தொடரும்)

விஞ்ஞானமும் மெய்ஞ்ஞானமும்

(திரு. V. சோமு B. Sc., M. Ed.,)

15. தராசு முள்ளும் மனமும் :

பொருள்களின் எடைகளைக் காணப் பலவித மான தராசுகள் பயன்படுகின்றன. அவை சாதாரணத் தராசு, வில் தராசு (Spring Balance), பௌதிக (அ) இயற்பியல் தராசு (Physical Balance), வேதியியல் தராசு (Chemical Balance) என்பனவாம்.

மளிகைக்கடைக்காரர்களும், காய்கறி விற்ப வர்களும் பொருள்களைத் தராசின் மூலம் நிறுத் துக் கொடுப்பதைப் பார்த்திருக்கின்றோம். இவ் வகைத் தராசு சாதாரணத் தராசு எனப்படு கிறது. இதைப் பயன்படுத்தும்போது எடைக் கற்கள் தேவைப்படுகின்றன என்பதை நாம் அறிவோம். சாதாரணத் தராசு ஒன்றின் அமைப்பை இப்போது பார்ப்போம். ஒரு கிடைமட்டமான தராசுக்கோலின் மையத்தில் மேல் நோக்கிய குறிமுள் ஒரு சட்டத்தின் பிளவில் அசைந்தாடும்படி அமைக்கப்பட் டுள்ளது. கோலின் இரு முனைகளிலும் சம எடையுள்ள தராசுத்தட்டுக்கள் தொங்கவிடப் பட்டுள்ளன. தராசுக்கோலின் மையத்தில் உள்ள குறிமுள்ளிலிருந்து தராசுக்கோலின் சம அளவு தூரத்தில் தராசுத் தட்டுக்கள் தொங்கவிடப்பட்டுள்ளன. தராசுக்கோலில் உள்ள குறிமுள் அசைந்தாடும். கையில் தூக்கிப் பிடிக்கும்படி ஒரு வளையம் பிளவுள்ள சட்டத்தின் மேல்பக்கம் பொருத்தப்பட் டுள்ளது. இரண்டு தட்டுக்களிலும் உள்ள எடைசமமாயிருக்கும்போது தராசு முள், சட் டத்தின் மேல் முள்ளுடன் சேர்ந்து நிற்கும். கடைகளில் பயன்படும் தராசுகளின் மூலம் ஒரு கிராம் எடைக்குக் குறைவான எடைகளை நிறுக்க முடியாது. ஆனால் நகைக் கடைகளில் பயன்படும் தராசுகளின் மூலம் ஒரு கிராம் எடைக்குக் குறைவான குன்றுமணியின் எடை யைக்கூடக்காணலாம். தபால் நிலையங்களிலும் கவர்களை நிறுக்கச் சாதாரணத் தராசுகள் பயன்படுத்தப்படுகின்றன.

சாதாரணத் தராசில் இரண்டு முட்கள் இருக்கின்றன. அவைகளுள் மேலேயிருப்பது அசைவதில்லை. தராசின் விட்டம் மேலும் கீழும் அசைவதற்கு ஏற்பக் கீழுள்ள முள் அசைகிறது. விட்டம் நடுநிலைக்கு வந்துவிட் டால் கீழ் முள்ளும் அசைவதில்லை.

ஆசை ஒருபுறமும் சினம் மற்றொரு புறமுமாக மனதை நடுநிலையையடையவிடாமல் ஓயாது அலக்கழித்துக் கொண்டிருக்கின்றன. பற்றி னின்று ஆசையும், வெறுப்பினின்று சினமும் வடிவெடுக்கின்றன. ஆக, விருப்பு வெறுப்புக் களுக்கு மனது ஆட்படும்பொழுது அது நடு நிலை பிறழ்ந்ததாகிறது.

நடுவுநிலை யோகம் என்று சொல்லப் படுகிறது. இது கீதையில் கண்ணன் வாக்கு.

நடுவுநின் றார்க்கன்றி ஞானமும் இல்லை
நடுவுநின் றார்க்கு நரகமும் இல்லை
நடுவுநின் றார்நல்ல தேவரும் ஆவர்
நடுவுநின் றார்வழி நானும்நின் றேனே

என்கிறது திருமந்திரம். திருவள்ளுவரும்

சமன்செய்து சீர்தூக்கும் கோல்போல் அமைந்தொரு
கோடாமை சான்றோர்க்கு அணி [பால்

என்ற குறளில் இதனையே எடுத்தியம்புகிறார்.

உலகில் இன்பம் இருப்பதுபோன்று துன்ப மும் உண்டு. துன்பத்தைத் தவிர்த்துவிட்டு இன்பத்தைமட்டும் இவ்வுலகில்பெறமுடியாது. தனி இன்பத்தை 'இங்கே பெற விரும்புபவர் வீணே முயலுகின்றனர். உலகத்தினின்று இன்பத்தை நாடாதிருத்தல் வேண்டும். தானே வந்தமையும் துன்பத்தைப் பொருட்படுத்த லாகாது. மனதை அப்படிப் பழக்கிவிட்டால் அது நடுநிலையாகும். அது மனிதனது மேன் மையை விளக்கவல்லது.

தராசு முள் நடுநிலைக்கு வருவதுபோன்று இன்ப துன்பங்களைச் சமனாகக் கருதி மனம் நடு நிலையில் உறுதி பெற்றிருக்க அறிவுத் தெய் வமே, நீ அருள்புரிவாயாக என்று நாம் அனை வரும் பிரார்த்திப்போமாக.

"தராசுத் தட்டின் இரண்டு தட்டுக்களிலும் எடை சமனாயிருக்குமானால் தராசு முள் மேல் முள்ளுடன் சேர்ந்து நிற்கும். அந்த மேல் முள் போன்றவர் கடவுள். தராசுமுள்போன்றது மனது. மனது கடவு ளோடு சேர்ந்து நடுநிலையிலிருக்கும்போது யோகம் வாய்க்கிறது." —ஸ்ரீ ராமகிருஷ்ணர்.

ஸ்ரீ லலிதா வியாக்கியானம்-157

903. कल्या கல்யா—கலைகளில் வல்லவள்.

எது முறையாகத் தோற்றத்திற்கு வருகிறதோ அதனிடத்துக் கலை அல்லது ஒழுங்குப்பாடு தென்படுகிறது. சிருஷ்டி முழுதிலும் ஒழுங்குப்பாட்டைக் காண்கிறோம். நள்ளிரவு தோன்றாநிலையிலிருக்கிறது. விடியற்காலத்தில் படிப்படியாக அது தோற்றத்திற்கு வருகிறது. அத்தகைய தோற்றத்தில் இனிமையும் மகிமையும் மிளிர்வது தேற்றம். நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம் எனக் கூறப்படுகிறது. எது நோயுற்று இருக்கிறதோ அது பார்க்கத் தகுதியற்றதாகிறது. பிரபஞ்சம் முழுதும் காட்சியில் வந்துள்ள நிலையில் குறைபாடோ அழகின்மையோ தோற்றத்தில் இல்லை. யாண்டும் ஆரோக்கியமே அதில் தென்படுகிறது. விளையாட்டுமயமாக இயற்கை காட்சி தருகிறது. நன்றாக விளையாடுவது ஒரு கலை. சிற்றுயிர்கள் பேருயிர்கள் ஆகிய எல்லா உயிர்களும் விளையாட்டுக் கலைகளில் தீவிரமாக ஈடுபடுகின்றன. விளையாட்டு நன்றாக நிகழுமிடத்து ஆயிரக்கணக்கான பேர் அதைப் போய் வேடிக்கை பார்க்கின்றனர். இயற்கையின் நடைமுறையே ஓர் ஒழுங்குப்பாடு நிறைந்த விளையாட்டாகக் காட்சி தருகிறது. கலைஞானம் மேல்நிலைக்குப் போகப் போக அதனிடத்துத் தெய்விகம் திகழுகிறது. எச்செயலைச் செய்தாலும் அதைச் சாமர்த்தியமாகச் செய்வது கலையின் விளக்கமாம். பேச்சுத் திறமையும் கலைக்கு நல்ல விளக்கமாம். முறையாகப் பேசுவதன் மூலம் மக்களுடைய போக்கையே திருத்தியமைக்கலாம். முறையான பேச்சுக் கேட்கின்றவர்கள் எல்லார்க்கும் உடந்தையாயிருக்கிறது. இயற்கை முழுதிலும் மங்களம் மிளிர்கிறது. இந்த மங்களம் அன்னை பராசக்தியின் சான்னித்தியத்தின் அறிகுறியாம். அன்னை பராசக்தியின் விபூதிகள் இத்தனை விதங்களில் வெளியாகிக் கொண்டிருப்பதால் அவள் கலைகள் அனைத்துக்கும் உறைவிடம் எனப் போற்றப்பெறுகிறாள்.

904. विदग्धा விதக்தா — திறமை மிக வாய்க்கப் பெற்றவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இயற்கையின் நடைமுறையை ஆராய்ந்து பார்த்தால் அன்னை பராசக்தி அரிய பெரிய செயல்களை எவ்வளவு எளிதில் செய்து சாதிக்கிறாள் என்பது வெளியாகிறது. கட்புலனாகாது நீராவி கடலினின்று கிளம்பி வானத்தில் மேலே போகிறது. ஆங்கு அது வெண்ணிறம், கார்நிறம் எடுக்கிறபொழுதே அதன் வண்ணம் நமக்கு விளங்குகிறது. மேகம் ஒன்று மற்றொரு மேகத்தோடு மோதுவதால் உண்டாகிற மின் சக்தி அளப்பரியது. பல ஆண்டுகளாக மானுடன் அரிய பெரிய எந்திரங்களை வைத்துக் கொண்டு உண்டுபண்ணுகிற மின் சக்தியை விடப் பல்கோடி மடங்கு அதிகமாக ஒரு நொடிப்பொழுதில் இயற்கை உண்டுபண்ணுகிறது. பூகம்பத்தின் வாயிலாக நில உலகின் அமைப்பையே நொடிப்பொழுதில் இயற்கைத் தாய் மாற்றியமைக்கின்றாள். உயிர்த் தத்துவத்தினிடத்தும் அவளுடைய வல்லமை நன்கு வெளியாகிறது. சிறிய எறும்புகள் ஒன்று சேர்ந்து அவைகளைவிடப் பன்மடங்கு வண்ணத்தில் பெரிய தின்பண்டத்தை எளிதில் தூக்கிச் செல்லுகின்றன. இச்செயலையும் அன்னையின் மகிமை என்றே சொல்லவேண்டும். இக்காலத்திய மானுடன் நூற்றுக் கணக்கான மனிதர்களை ஆகாய விமானத்தில் அதி விரைவில் ஒரு நாட்டினின்று தூரத்தில் இருக்கின்ற மற்றொரு நாட்டின்கண் எடுத்துச் செல்ல வல்லவனாயிருக்கிறான் என்றால் அச்செயலும் அன்னை பராசக்தியின் திறமையாம்.

அவளுடைய திறமை நுண்ணிய சில செயல்களிலும் வெளியாகின்றன. ரண வைத்தியத்தைக் கையாண்டு அழிந்து பட்டுப்போம் உயிர் ஒன்றுக்குப் புத்துயிர் தருவதும் அன்னையின் மகிமையாம். இங்ஙனம் இயற்கை முழுதிலும் நுண்ணிய நிலையிலும் அரியபெரிய அண்ட நிலையிலும் வைத்துச் செயற்கரிய செயல்கள் பலவற்றை அன்னை பராசக்தி சர்வகாலமும் நிகழ்த்தி வருகின்றாள். ஆகையினால் அவள் விதக்தா எனப் போற்றப்படுகிறாள்.

905. वैन्दवासना பைந்தவாஸனா—பைந்தவம் என்னும் ஸ்தானத்தை ஆசனமாகக் கொண்டிருப்பவள் என்பது இதன் பொருள்.

மனிதனுடைய நெற்றியிலே புருவத்துக்குச் சற்று மேலும் ஆக்ஞை சக்கரத்துக்குச் சற்றுக் கீழும் இருக்கிற ஸ்தானத்துக்குப் பைந்தவம் என்னும் பெயர் வந்துள்ளது. இது ஆனந்தத்துக்கு இருப்பிடம். அன்னை பராசக்தி இந்தப் பைந்தவத்தை ஆசனமாக அமைத்துக்கொண்டு அதன்கண் எழுந்தருளியுள்ளாள். ஆங்கு அவளுடைய சந்நிதான விசேஷத்தால் ஆத்ம சாதகன் சாதனத்தில் ஈடுபடுகின்ற பொழுதெல்லாம் பரமானந்தம் துய்க்கிறான். இதன்கண் அமர்ந்து கொண்டு அன்னை பராசக்தி ஜீவர்களிடத்துக் காமரசத்தையும் வளர்த்து வருகின்றாள். ஆக இக பரத்துக்குரிய இன்பங்களனைத்துக்கும் இருப்பிடமாகப் பைந்தவாசனம் அம்பிகைக்கு அமைந்திருக்கிறது. ஆனந்தத்துக்கு இருப்பிடம் என இந்த அமைப்பை விளக்கலாம்.

ஸ்ரீ சக்கரத்தில் அமைந்துள்ள ஒரு பகுதிக்குப் பைந்தவம் என்பது பரிபாஷை. ஆனந்தத்துக்கு இருப்பிடம் என்பது அதன் பொருள். இனி வரைந்துள்ள ஸ்ரீ சக்கரம் மனிதனுடைய கற்பனை. இயற்கையாயமைந்துள்ள பிரபஞ்சமே உண்மையான ஸ்ரீ சக்கரம். அப்பிரபஞ்சத்தில் எங்கெல்லாம் ஆனந்தம் மிளிர்கிறதோ ஆங்கெல்லாம் அன்னை பராசக்தியின் சாந்நித்யம் தானாக விளங்குகிறது. எனவே மனிதனுக்கு அமைந்திருக்கின்ற ஸ்ரீசக்கரமாகிய உடலின்கண் சதா ஆனந்தம் மிளிர்ந்துகொண்டிருக்குமாகில் அத்தகைய உடல் வாழ்க்கையே சரியான அன்னையின் வழிபாடு ஆகிறது.

906. तत्त्वाधिका தத்வாதிகா — தத்துவங்களனைத்துக்கும் அப்பாற்பட்டவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இயற்கையின் கூறுகளனைத்தும் தத்துவங்கள் என இயம்பப்பெறுகின்றன. சாங்க்ய தர்சனப் பிரகாரம் தத்துவங்கள் இருபத்தைந்தாம். ஐந்து பூதங்கள், அவைகளின் தன் மாத்திரைகள் ஐந்து, ஞானேந்திரியங்கள் ஐந்து, கர்மேந்திரியங்கள் ஐந்து, சித்தம், மனம், புத்தி, அகங்காரம் என அந்தக் கரணங்கள் நான்கு. இவையாவும் ஒன்று சேர்ந்து இருபத்து நான்கு தத்துவங்களாகின்றன. இவை யாவும் பிரகிருதியின் கூறுகளாம். இவைகள் ஜடநிலையில் இருக்கின்றன. இவைகளுக்கப்பால் சேதனமாயிருப்பது புருஷதத்துவம். ஆக சாங்க்யதர்சனப் பிரகாரம் தத்துவங்கள் இருபத்தைந்து. பிரகிருதிமயமாயுள்ள இருபத்து நாலு தத்துவங்களை முப்பத்தாறு தத்துவங்களாகப் பிரித்தமைப்பது மற்றோர் ஐதிகம். அவைகளையே தொண்ணூற்றாறு தத்துவங்களாக மேலும் பிரித்தமைப்பது மற்றும் ஓர் ஐதிகமாகிறது. இவை யாவையும் சுருங்கச் சொல்லின் புருஷதத்துவம் பிரகிருதி தத்துவம் என இரண்டில் இவையாவும் அடங்குகின்றன. இதே பிரகிருதி, புருஷ தத்துவங்கள் புராண வரலாற்றின்படி அர்த்தநாரீசுவர தத்துவமாக இலங்குகின்றன. மாது ஒருபாகம் ஆனவன் என்பது இதன் பொருள். சராசரங்களனைத்தும் சேதன அசேதனங்களனைத்தும் அர்த்தநாரீசுவர தத்துவத்தில் அடங்கப் பெறுகின்றன.

அன்னை பராசக்தியைப் பரதேவதையாகக் கருதுமிடத்து இந்தத் தத்துவங்களனைத்துக்கும் அப்பாற்பட்ட நிலையில் அவள் இலங்குகின்றாள். வேதாந்த பூர்வமாக இயம்புமிடத்து அவள் குணசஹிதமாக இருக்கும்பொழுது சகுணப் பிரம்மம் அல்லது அர்த்தநாரீசுவர தத்துவமாக இலங்குகின்றாள். குணாதீதத்தில் அவள் நிர்குணபிரம்மமாகப் இலங்குகின்றாள். தத்துவாதிகா என்னும் நாமம் நிர்குணப் பிரம்மத்துக்குரியதாம். சகுணப் பிரம்மமாக இலங்கும் அதே பரதேவதை நிர்குணப் பிரம்மமாகவும் அமைந்துள்ளாள். நிர்குண, நிராகார உபாசகர்களுக்குச் சிந்தனைக்குரியதாக இந்த நாமம் அமைந்திருக்கிறது.

907. तत्त्वमयी தத்வமயீ — தத்துவங்களின் வடிவத்தில் இருப்பவள் என்பது இந்த நாமத்தின் பொருள்.

இயற்கையைப் பற்றிய உண்மைகளனைத்தும் தத்துவங்கள் எனப்பெயர் பெறுகின்றன. சாங்க்யதர்சனப்படி தத்துவங்களை ப்பிரகிருதி தத்துவங்கள் என்றும், ஆத்ம தத்துவம் என்றும் இரண்டாகப் பிரித்து வைத்தோம். பிரகிருதி தத்துவங்கள் ஜடமயமானவைகள். ஆத்ம தத்துவமோ சேதனம். ஜடம் வேறு, சேதனம் வேறு என்று வியாவஹார தசையில் வைத்துப் பாகுபடுத்துகிறோம். பின்பு அங்ஙனம் பொருள்கள் இரண்டு இருக்கின்றனவா

என்பது கேள்வி. சிவமும், சக்தியும் பெயரளவிலும் செயலளவிலும் இரண்டு தத்துவங்கள். உண்மையில் பொருள் ஒன்று; அதன் தோற்றங்கள் பல. ஜடம் என்பது உண்மையில் சேதனத்தின் ஒரு கூறு ஆம். ஜடசக்தியில் வெளிச்சத்தைச் சான்ருக எடுத்துக்கொள்ளலாம். வெளிச்சம் என்றும், இருள் என்றும் இரண்டு நிலைகள் உண்டா என்பது கேள்வி. வெளிச்சமும், இருளும் இரண்டு நிலைகள் இல்லை. அவையிரண்டும் இரண்டுவிதப் பாங்குகளாம். எப்படியென்று ஒரே சக்தியின் பார்ப்போம். பட்டப்பகலில் நமக்கு நன்ருகப் பொருள்கள்தென்படுகின்றன. அப்படித் தென்படுவதற்குக் காரணம் வெளிச்சம். அமாவாசை இருளில் படலம்படலமாக மேகம் கட்டியிருக்கிறது. அந்நிலையில் காண்போன் ஒருவனுக்குத் தன் உடலே காட்சியில் இல்லை. ஆதலால் அது இருள் என இயம்பப்படுகிறது. அதே இருளில் புலியும் ஆந்தையும் பொருள்களைத் தெளிவுறக் காண்கின்றன. அந்நிலையை அந்த விலங்கும் பறவையும் இருள் என ஏற்றுக்கொள்ளமாட்டா. அந்த ஜந்துக்களுக்குப் பகல் நேரத்தில் கண் தெரிவதில்லை. ஆக மனிதனுக்குப் பகலாகவும் இருளாகவும் இருக்கும் இயற்கையின் நிலைகள் புலிக்கும், ஆந்தைக்கும் நேர்மாருக அமைந்துள்ளன. ஆதலால் ஒரு நிலையை இருள் என்று இயம்பினல் யாருக்கு இருள் என்னும் கேள்வி எழுகிறது. ஓர் உயிருக்கு இருளாக அமைந்திருக்கும் பாங்கு மற்ருேர் உயிருக்கு வெளிச்சமாகத் தென்படுகிறது. அதேவிதத்தில் சேதனம் ஜடம் என்பதும் அவைகளைக் காண்போனுடைய ஆத்ம பரிபாகத்தைப் பொறுத்தவைகளாம். நிறைஞானியின் காட்சியில் அசேதனம் என்று சொல்லப்படுவதும் ஜடம் என்று சொல்லப்படுவதும் வெறும் பெயரளவிலேயாம். அதற்கு நேர்மாருக ஜடநிலையிலுள்ள உயிர்களுக்குச் சேதனம் விளங்குவதில்லை. உண்மையில் ஒரு பொருள் காண்போனுடைய பரிபாகத்தை அனுசரித்துச் சேதனமாகவும், அசேதனமாகவும் காட்சி கொடுக்கிறது. ஆதலால் அன்னை பராசக்தி தத்துவ மயமாயிருக்கிருள் என்பதின் பொருள் அவள் யாவுமாயிருக்கிருள் என்பதாம். அனைத்திடத்தும் அன்னை பராசக்தியின் சாந்நித்தியத்தைக் கண்டு பழகுதல் நல்ல ஆத்ம சாதனமாம்.

அன்னை பராசக்தி தானே பிரகிருதியின் கூறுகளாகிய இருபத்து நான்கு தத்துவங்களாகவும் அவைகளை யாண்டும் பயன்படுத்தி வருகிற புருஷ தத்துவமாகவும் இலங்குகின்ருள். அவளுக்குப் புறம்பாகப் பொருள் ஏதும் இல்லை என்பதை இந்நாமம் விளக்குகிறது.

ஆத்ம சாதகன் அடைகின்ற அனுபூதிகளில் சம்ப்ரக்ஞாத சமாதி, அசம்ப்ரக்ஞாத சமாதி என இரண்டு கூறுகள் இருக்கின்றன. சம்ப்ரக்ஞாத சமாதியைச் சவிகல்ப சமாதி என்றும், சகுணப் பிரம்மத்தில்திளைத்திருப்பது என்றும் பகரலாம். ஆங்கிலத்தில் இதை **Contentfull Consciousness** என மொழி பெயர்க்கலாம். மெய்ப்பொருளின் எண்ணிக்கையிலடங்காத விபூதிகளை ஆத்ம சாதகன் வெவ்வெறு பாங்குகளில் இருந்து அனுபவித்து வருகிருன். அந்த அனுபவங்களுக்கேற்ப அவனுடைய தூய மனதில் பலப்பல விருத்திகள் உண்டாகின்றன. அந்நிலையில் அவன் ஆடவும், பாடவும், சிரிக்கவும், அழவும் செய்கின்ருன். பித்தன்போன்று அவன் ஒரு வேளை நடந்து கொள்கிருன்; பேயன் போன்று அடுத்த தருணத்தில்தென்படுகின்ருன்; மனவிகாரம் ஏதும் அடையப்பெருத குழந்தைபோன்று அடுத்த தருணத்தில் அவன் தென்படுகிருன். இவையாவும் சகுணமயமாயுள்ள அம்பிகையின் சொரூபங்களாம்.

அதே ஆத்மசாதகன் அசம்ப்ரக்ஞாத சமாதியை அடைகின்றபொழுது அவனுடைய தோற்றம் மற்ளொரு வடிவு எடுக்கிறது. வெளித்தோற்றத்துக்கு அவன் ஜடம் போன்று தென்படுகிருன். உள்ளத்தினுள்ளே வியவஹாரங்கள் யாவையும் தாண்டியவனுகிருன். அதை அகண்டாகார விருத்தி என இயம்பலாம். இது ஆங்கிலத்தில் **eontentless eonsciousness** என இயம்பப் பெறுகிறது. சுத்த சைதன்யம் எனவும் இந்நிலையைப்பற்றிப் பகரலாம். ஆனந்தத்துக்கும் அப்பாற்பட்ட இந்நிலையிலிருக்கும் நிறைஞானிக்குப் பேசவோ, எண்ணவோ,உடலை அசைக்கவோ இயலுவதில்லை. ஆயினும் வெறும் ஜடநிலைக்கும் அவன் பெற்றிருக்கும் நிர்குண, நிராகார, நிராலம்ப, நிர்விகல்ப சமாதிக்கும் வெகுதூரமாம்.

பாவ்ஹாரி பாபா

(சுவாமி விவேகானந்தர்)

[310ஆம் பக்கத் தொடர்ச்சி]

இந்தியாவில் பல பெரியோர்கள் பிறர் மனதை இழுக்கும் புறச்செயல் எதையும் செய்யாமலேயே வாழ்ந்து போயிருக்கிறார்கள். அவர்களைப் போன்று பாவ்ஹாரிபாபாவும் கவர்ச்சிகரமான புறச்செயல் எதையும் செய்யவில்லை. மதபோதனையை வாயால் போதிப்பதைவிட வாழ்க்கையின்மூலம் போதிப்பதையே லட்சியமாகக் கொண்டுள்ளது இந்தியா. அந்த லட்சியத்திற்கேற்பப் பாவ்ஹாரிபாபா வாழ்க்கை வாழ்ந்து வந்தார். உண்மையைக் கிரஹிக்கப் பக்குவப்பட்டவர்கள் அத்தகைய மகான்களிடம் செல்வார்களானால் அவர்களுக்கு அவர்கள் மிகவும் பயன்பட்டு வந்தார்கள். அவர்கள் தங்கள் அனுபவத்தை மற்றவர்களுக்குப் போதிப்பதில் அக்கறை செலுத்தவில்லை. உள்ளத்தை ஒழுங்குபடுத்துவதன் மூலமாகவே உண்மையை அறிய முடியும் என்றும், பிரசாரத்தால் உண்மையை அறிய முடியாதென்றும் அவர்கள் உறுதியாக நம்பிவந்தார்கள். சமுதாயச் சீர்திருத்தத்தை ஊக்குவிப்பது மட்டும் சமயம் அல்ல என்பதும், உண்மையை நேரில் தரிசிப்பதுதான் சமயம் என்பதும் அவர்களுடைய கருத்தாகும். ஒரு காலத்தைப் பொற்காலம் என்றும், சக்தி வாய்ந்த காலம் என்றும் சொல்வதை அவர்கள் மறுக்கின்றார்கள். எல்லாக் காலமும் அவர்களுக்கு நற்காலமே. காலத்தில் உயர்வு தாழ்வு கற்பிப்பது அவர்களிடமில்லை. இப்பொழுதே உண்மையை நேருக்கு நேர் தரிசிக்கவேண்டுமென்று அவர்கள் வற்புறுத்துகிறார்கள். மரணத்துக்குப் பின் பார்த்துக் கொள்ளலாமென்று அவர்கள் காத்திருப்பதில்லை. உலகுக்கு உதவுவதற்காக ஏன் குகையை விட்டு வெளியே செல்வதில்லை என்ற கேள்வி பாவ்ஹாரிபாபாவிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் அடக்கத்துடனும், ஹாஸ்யமாகவும் அளித்த விடையாவது :

"தீயோன் ஒருவன் குற்றம் செய்து அகப்பட்டுக்கொண்டான். அவன் செய்த குற்றத்துக்குத் தண்டனையாக அவன் மூக்கை அறுத்து விட்டார்கள். மூக்கறுபட்ட முகத்தை மற்றவர்களுக்குக் காட்ட அவன் வெட்கப்பட்டான். தன் நிலையைக் குறித்துத் தன்னையே அவன் வெறுத்தான். உலகத்தவர் கண்ணுக்கு மறைவாக இருக்கும் பொருட்டுக் காட்டுக்குப் போய் விட்டான். அங்குத் தனக்குப் பக்கத்தில் யாராவது இருப்பதைக் கண்டால் அவன் புலித்தோலைத் தரையில் பரப்பி அதன்மீது அமர்ந்து ஆழ்ந்து தியானத்தில் இருப்பதாகப் பாசாங்கு செய்வான். அந்தச் செயலைப் பார்த்த மக்கள் தூரப் போய்விடுவார்கள் என்று நினைத்தான். ஆனால் அச்செய்கை மக்களை அவன்பால் திரண்டு வரும்படி இழுத்தது. மக்கள் அவனுக்கு மரியாதை செய்யவும் ஆரம்பித்தார்கள். அதனால் அவனுடைய காட்டு வாழ்க்கை அவனுக்குச் சுகஜீவனமாக அமைந்தது. ஆண்டுகள் பல சென்றன. மக்கள் அவனிடம் உபதேசம் பெறவேண்டும் என்ற ஆவலுடன் வந்தார்கள். மௌனமாக இருந்த அவனிடத்து உபதேசம் பெறுவது நல்லது என்று நினைத்தார்கள். ஓர் இளைஞன் அவனிடம் உபதேசம் பெற மிக ஆவல்கொண்டிருந்தான். உபதேசம் செய்யக் காலதாமதம் செய்தால் அந்த மகானுடைய புகழுக்குக் கேடு வரும் நிலை ஏற்பட்டது. எனவே அவன் தன் மௌன விரதத்தைக் கலைத்துவிட்டு அவ்விளைஞனிடம் அடுத்தநாள் வரும்பொழுது ஒரு கூரான கத்தி கொண்டு வரும்படி கூறினான். அவ்விளைஞன் தன்னுடைய வெகுநாளைய ஆவல் நிறைவேறப் போகிறது என்பது குறித்து மகிழ்ச்சியடைந்தான். அடுத்த நாள் காலை வரும்பொழுது தன் விருப்பத்தை நிறைவேற்றிக் கொள்ளுவதற்குக் கூரிய கத்தியுடன் வந்தான். மூக்கறுபட்ட மகான் அவ்விளைஞனை ஜன நடமாட்டமில்லாத காட்டின் உட்பகுதிக்கு அழைத்துச் சென்றான். ஆங்குக் கையில் கத்தியை எடுத்து இளைஞனுடைய மூக்கை அறுத்தான். அவ்விளைஞனுக்கு அவன் உபதேசம் செய்ததாவது : "இளைஞனே! நான் இந்த முறையில்தான் உபதேசம் பெற்றேன்.

உனக்கும் நான் அதே முறையில் உபதேசம் செய்திருக்கின்றேன். நீயும் மற்றவர்களுக்குஇம் முறையிலேயே உனக்குச் சந்தர்ப்பம் கிடைக்கும்பொழுது உபதேசம் தருவாயாக." இளைஞன் தனக்குக் கிடைத்த உபதேசத்தை வெட்கத்தினால் மற்றவர்களிடம் வெளியிடவில்லை. ஆனால்குருவினுடைய உபதேசத்தைத் தன் சக்திக்குச் சாத்தியமான அளவு நிறைவேற்றி வந்தான். அதன் விளைவாக மூக்கறுபட்ட மகான்கள் நாடெங்கும் பரவலாயினர். அப்பேறப்பட்ட மற்றோர் இயக்கத்தை நான் தோற்றுவிக்க வேண்டுமென்று நீங்கள் விரும்புகிறீர்களா?''

வேறொரு சமயம் அவர் ஆழ்ந்த உள்நோக்கோடு இருந்தபொழுது கேட்ட கேள்விக்கு அவர் அளித்த விடையாவது : "உடலைக் கொண்டுதான் உலகுக்கு உதவமுடியுமா? உள்ளத்தால் பிறருக்கு உதவமுடியாதா? உடல் அசைவின்றி உள்ளத்தைக்கொண்டு உலகுக்கு ஏன் நன்மை செய்ய முடியாது?''

ஹோமாக்னி வளர்த்தல், ரகுநாத விக்ரஹத்தை வழிபடுதல் போன்ற செயல்கள் ஆரம்ப சாதகர்களுக்கு உரியன. அவற்றை மகான்கள் ஏன் செய்யவேண்டும் என்றகேள்வி மற்றும் ஒருமுறை கேட்கப்பட்டது. அதற்கு அவர், "தனக்குத்தான் கருமம் செய்ய வேண்டுமா? பிறர் நலத்துக்காக அவைகளைச் செய்யக்கூடாதா?" என்று விடை பகர்ந்தார்.

வேறொரு சமயம் அவருடைய ஆச்ரமத்திலிருந்து சில பொருள்களை ஒரு திருடன் களவாடினான். திருடி வெளியே போவதற்குள் அத்திருடன் அவ்ரைப் பார்த்துவிட்டான். அவரைப் பார்த்ததும் களவாடிய பொருள்களைக் கீழே போட்டுவிட்டுத் தப்பித்துக்கொள்வதற்காக ஓடினான். பாவ்ஹாரிபாபா அப்பொருள்களைக் கையில் எடுத்துக்கொண்டு அவனைத் துரத்தினார். சில மைல் தூரம் அவனைப் பின் தொடர்ந்து ஓடி அவனைப் பிடித்துவிட்டார். அப்பொருள்களை அவன் காலடியில் வைத்துக் கூப்பிய கைகளுடனும், நீர் பெருகிய கண்களுடனும் அவனுடைய விஷயத்தில் தலையிட்டதற்கு மன்னிப்புக் கேட்டுக்கொண்டார். அப்பொருள்கள் தமக்கு உரியன அல்ல என்றும், அவனுக்கே அவை உரியன என்றும், ஆகையால் அவற்றை அவன் எடுத்துக்கொள்ள வேண்டுமென்றும் அன்புடன் வேண்டிக்கொண்டார். பாவ்ஹாரிபாபாவின் செயல் அத்திருடனுடைய மனப்பான்மையை அடியோடு மாற்றிவிட்டது. அன்றுமுதல் அவன் துறவியாக மாறிவிட்டான்.

மற்றொரு சமயம் பாவ்ஹாரிபாபாவை நல்ல பாம்பு ஒன்று தீண்டிவிட்டது. அவருடைய உடல் சவம்போன்று ஆய்விட்டது. பலமணி நேரத்திற்குப் பிறகு அவர் உயிர்பெற்று எழுந்தார். நண்பர்கள் அதைப்பற்றி அவரிடம் விசாரித்தபொழுது "ஈசனிடமிருந்துவந்த தூதுவனாக அந்த நல்லபாம்பை நான் கருதுகிறேன்" என்றார். அவரிடமிருந்த பணிவு, அன்பு, சான்றாண்மை ஆகிய பண்புகள் அவர் வாழ்வில் மேற்கூறிய நிகழ்ச்சிகள் நடந்திருக்கலாம் என்பதை நம்பும்படி தூண்டுகின்றன. அவர் தமக்கு வந்த உடல் நோயை ஈசனிடமிருந்து வந்த தூதனாகவே கருதுவார். நோய் அவரை மிகத் துன்புறுத்திய காலத்தும், அதை ஈசனுடைய தூதனாகவே கருதி வந்தார். அவரிடமிருந்த இந்தச் சீரிய பண்புகள் சுற்றியுள்ள மக்களிடம் பரவ ஆரம்பித்தன. அப்பக்கம் போகின்ற சுற்றுப்புறக் கிராமமக்கள் அவருடைய சன்னிதான விசேஷத்தினால் ஏற்பட்ட அமைதியை நன்கு அறிந்திருந்தனர். அவருடைய பிற்கால வாழ்க்கையில் தம்மை யாருக்கும் காட்டாமல் வைத்திருந்தார். பூமிக்குள்ளிருந்து குகையைவிட்டு வெளியே வரும் சமயம் குகை கதவுக்குப் பக்கத்திலிருப்பவரோடு பேசுவார். குகையைவிட்டு வெளியே வந்தவுடன் ஹோமம் வளர்ப்பதும், பூஜை செய்வதும் ஆகிய காரியங்களைச் செய்வார். ஹோமத் தீயிலிருந்து எழுந்த புகையும், பூஜைக்காக ஆயத்தப்படுத்தியபொழுது எழுந்த ஓசையும் அவர் குகைக்கு வெளியே வந்திருக்கிறார் என்பதைத் தெரிவித்தன.

அவர் தாம் மேற்கொண்ட காரியம் எவ்வளவு சிறியதெனினும் அதில் முழுக் கவனத்தையும் செலுத்தியது அவரிடமிருந்த சிறப்பியல்பாகும். ரகுநாதருக்கு எவ்வளவு சிரத்தையோடு பூஜை செய்தாரோ அவ்வளவு சிரத்தையோடு பாத்திரங்களைத் துலக்குவதிலும் ஈடுபடுவார். குருவினிடத்து எத்தகைய அன்பும், சிரத்தையும் வைத்திருந்தாரோ, அத்தகைய அன்பும்,

சிரத்தையும் சாதனத்திலும் வைத்திருந்தார்.

பணிவு என்பதற்குத் தாழ்வு என்பது அவர் கொண்டுள்ள கருத்தன்று. மனவேதனையையும், துன்பத்தையும் பொறுத்துக்கொள்ளல் அல்லது தம்மை இழிவுபடுத்திக்கொள்ளுதல் பணிவுக்குப் பொருளல்ல என்பது அவருடைய கருத்து. பரம்பொருள் தரிசனம் ஏற்படும் பொழுது உள்ளத்தில் பணிவு இயல்பாகவே எழுகின்றது. தமக்கென எதையும் வைத்துக் கொள்ளாதவனுக்குக் கடவுள் சொந்தமாகின்றார் என்ற கருத்தை அவர் அழகாக மக்களுக்கு எடுத்துரைப்பார். எல்லா ஆசைகளையும் விட்டொழித்தவனுக்கும், சுயநலத்தை ஒழித்தவனுக்கும் கடவுள் சொந்தமாகிறார் என்று உபதேசம் செய்வார். தம்மைக் குரு ஸ்தானத்தில் வைத்துக்கொண்டு அவர் மக்களுக்கு எப்பொழுதும் போதனை செய்ய மாட்டார். நீர்க்குழாயைத் திறந்தவுடன் நீர் வருவது போன்று அவர் உள்ளத்தைத் தொட்டுவிட்டால் ஞானம் அவர் வாயிலிருந்து வந்துகொண்டேயிருக்கும்.

அவர் பருத்த மேனியுடையவர். உயர்ந்த தோற்றமுடையவர். அவருக்கு ஒரு கண் தான் உண்டு. முதியவரான பிறகும் அவருடைய தோற்றம் இளமையாகவே காட்சி கொடுத்தது. இனிமையான குரல் படைத்தவர். அவர் தம் வாழ்வின் பிற்காலத்தில் பத்து வருடங்கள் மக்கள் காட்சிக்குத் தென்படாது வாழ்ந்து வந்தார். வெண்ணெயும், உருளைக் கிழங்கும் அவர் குகையின் மேற்பகுதியில் இருந்தபொழுது அருந்தி வந்தார். குகைக் குள்ளிருந்தபொழுது அவர் எதையும் உண்பதற்கு விரும்பவில்லை. யோகத்துக்கும் தூய்மைக்கும், பணிவுக்கும், அன்புக்கும் விளக்கமாக அமைதியாக விளம்பரமில்லாது அவர் வாழ்ந்து வந்தார்.

சமாதியிலிருந்து எழுந்து குகைக்கு வெளியே வரும்பொழுது ஓமத்தீ வளர்ப்பார். அவ்வோமத்தீயிலிருந்து புகை தோன்றிவரும். எப்பொழுதெல்லாம் புகை தென்படுகிறதோ அப்பொழுதெல்லாம் அவர் குகைக்கு வெளியில் இருக்கிறார் என்பதை அறிந்துகொள்ளலாம். ஒருநாள் அவர் குகைக்குள்ளிருந்து புகை வந்தபொழுது அதோடு உடல் வேகும் நாற்றமும் கிளம்பி வந்தது. வெளியிலுள்ள மக்கள் உள்ளே என்ன நிகழ்கிறது என்பதை ஊகித்தறிந்துகொள்ள முடியவில்லை. உடல் கருகும் நாற்றமும், புகையும் அதிகமாகிக்கொண்டு வரவே உள்ளே என்ன நிகழ்கின்றது என்பதைப் பார்க்கக் குகையின் கதவை உடைத்தார்கள். குகையின் கதவு திறந்ததும் அந்த யோகிதம் உடலை ஓமத்தீக்குக் கடைசி ஆஹுதியாகக்கொடுத்துக்கொண்டிருப்பதைப் பார்த்தார்கள். சாம்பல் குவியல்தான் அவர் உடலிலிருந்து மிச்சமாயிற்று.

"மகான்களுடைய செயல்கள் சாதாரண மக்களின் அறிவுக்கெட்டாதவைகள். மகான்களுடைய செயல்களின் உட்கருத்தை அறிந்துகொள்ளாத அறிவிலிகள் அவர்களுடைய செயல்களில் குற்றம்காண்கிறார்கள். சாதாரண மக்களுக்கு மகான்களுடைய செயல்களுக்குரிய காரணங்கள் விளங்குவதில்லை." இங்ஙனம் காளிதாசர் பகர்ந்துள்ளார்.

மகான்கள் பிறர்க்குத் துன்பத்தையோ, கஷ்டத்தையோ தரவிரும்புவதில்லை. சிலர் தாங்கள் இவ்வுலகைவிட்டு மறையும் காலம் வந்ததை அறிந்து தங்கள் உடலைத் தாங்களே தகனம் செய்துகொண்டு தாங்கள் மறைந்த பின்பு தங்கள் உடலைத் தகனம் செய்யும் சிரமத்தை மற்றவர்களுக்குத் தருவதில்லை.

பாவ்ஹாரிபாபா ஒரு மகானென்பதை நாம் அறிவோம். தம் உடலுக்கு முடிவு காலம் வந்துவிட்டதை அறிந்து மரணத்துக்குப் பின் மற்றவர்களுக்குத் தம் உடலைத் தகனம் செய்யும் தொந்தரவு இருக்கக்கூடாது என்பதற்காகத் தம் உடலைச் சுய நினைவு இருக்கும்பொழுதே அக்னிக்கு ஆகுதியாகக் கொடுத்துவிட விரும்பியிருப்பாரென்று நாம் துணிந்து முடிவுகட்டலாம்.

பாவ்ஹாரிபாபாவுக்கு நாம் நன்றிசெலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம். அவரை ஞாபகப்படுத்திக்கொள்ளுவதற்கு எழுதும் இவ்விஷயங்களை அவருக்கே சமர்ப்பிப்போம். அவரை ஞாபகப்படுத்திக்கொள்ள அவருடைய லட்சியத்தில் அன்பும், அதை நடைமுறைக்குக் கொண்டுவருகின்ற செயலும் நம் வாழ்க்கையில் இடம்பெறுவன ஆகுக.

(முற்றும்)

ஸத் ஸம்பாஷணை

கேள்வி: (287) தன் உடலின் இடப்பாகத்தையே அம்பிகைக்குக் கொடுத்த சிவனார் ஏன் மன்மதனை அழித்தார்?

அம்பிகைக்குப் பார்வதிதேவி என்பது பெயர். பர்வதராஜனுடைய புதல்வி என்பது அந்தநாமத்தின் பொருள். அன்னை பராசக்தி பிரபஞ்சமாக இலங்குகின்றாள். பிரபஞ்சமோ ஜடசக்தி சித்சக்தி ஆகிய இரண்டையும் தன்மயமாய் உடைத்திருக்கிறது. உயிரற்ற நிலையிலிருப்பது ஜடசக்தி. உயிர் உற்றதாயிருப்பது சித் சக்தி. பர்வதம் அல்லது மலை உயிரற்றதாய்க்காட்சிகொடுக்கிறது. அம் மலையினின்று தோன்றி வந்த சக்தி மலைமகள்எனவும் இயம்பப் பெறுகிறாள். இயற்கையின் அமைப்புக்கு எடுத்துக்காட்டாக இருப்பவள் மலைமகள். பிரபஞ்சம் கல் நிலையினின்று படிப்படியாகப் பரிணமித்து உயிர்த் தத்துவமாக மாறுகிறது. உயிர்த் தத்துவமோ உன்னத நிலையை எட்டுகிறபொழுது சிவ சொருபமாகிறது. இக்கோட்பாட்டை விளக்குதற்கே பார்வதி தேவி தென்முனையிலிருந்து கொண்டு தவம்புரிகின்றாள். தவத்தின் வாயிலாகச் சிவனை அடையத் தகுதி அவளுக்கு வாய்க்குங்கால் சிவன் சக்தியை மணந்து கொள்ளுகின்றார். மணந்தான பிறகு அவருக்கு அர்த்தநாரீசுவரன் எனவும் மாதொரு பாகன் ஆனவன் எனவும் அடைமொழிகள் வந்தமைந்துள்ளன. அங்ஙனம் அம்பிகையை மணந்துகொள்ளுதற்கு முன்பே மன்மத தகனம் நிகழ்ந்துவிட்டது. அச்செயலின் உட்கருத்தை மக்கள் எல்லாரும் அறிந்திருப்பது அவசியமாகிறது. ஆணும், பெண்ணும் மணந்துகொள்ளுவது உலகின் இயல்பு. அத்தகைய இணக்கம் காமத்தை அடிப்படையாகக் கொண்டிருக்குமானால் அது கடைத்தரமான இணக்கம் ஆகிறது. ஆசையை அவித்தான பிறகு அமைகிற இணக்கம் மேலானது. பழங்காலத்து ரிஷிகள் காமத்தை வென்றவர்களாகவிருந்தார்கள். ஆதலால்தான் அன்னவர்களுக்கு வாய்த்த மகப்பேறு ரிஷியின் இயல்பு படைத்ததாக இருந்தது. இதே கோட்பாட்டின்படி சிவனாருக்கும் அம்பிகைக்கும் செல்வர்களாக வாய்த்த கணபதியும் குமரனும் தெய்வீகப்பெற்றியுடன் வடிவெடுத்தார்கள். காமத்தால் தூண்டப்பெற்றுப் பிறக்கிற குழந்தைகள் காமச் செல்வர்களும், செல்விகளும் ஆகிறார்கள். தவத்தின் விளைவாகப் பிறக்கும் மகப்பேறுகள் தெய்வப்பெற்றி வாய்ந்தவைகளாகப் பிறக்கிறார்கள். வாழ்க்கை சம்பந்தமான இந்த மேலாம் கோட்பாட்டை மக்களிடத்து அறிவுறுத்துதல் பொருட்டே சிவனார் மன்மத தகனம் பண்ணியான பிறகு கன்னியாகுமரியாயிருந்த பராசக்தியை மணந்து அவளுக்குத் தன் சொருபத்தில் செம்பாதியைக் கொடுத்துள்ளார்.

கேள்வி: (288) யோக நித்திரையின் விளக்கம் யாது?

தூங்கும்பொழுது மனிதன் ஜடப்பொருளுக்கு நிகராகின்றான். அந்நிலையில்மனம் ஒடுங்கி இருக்கிறது. ஆதலால் தன்னைப்பற்றிய உணர்ச்சியோ, உடலைப்பற்றிய உணர்ச்சியோ ஆழ்ந்த உறக்கத்தில் இல்லை. மனிதன் ஆழ்ந்து உறங்குகிறபொழுது தமோகுணம் தலையெடுத்திருக்கிறது. அதற்கேற்றவாறு உறக்கத்தின் நிலை ஜடத்தை ஒத்திருக்கிறது. ஆத்ம சாதனம் பயின்று வருகிறவனுக்குத் தமோகுணத்தை வெல்லும் தகைமை படிப்படியாக மேலோங்குகிறது. தமோகுணத்தை வென்று ரஜோகுணத்துக்கு வருவதும், ரஜோகுணத்தை வென்று சத்துவ குணத்தை அடைவதும் ஆத்ம சாதனத்தின் குறிக்கோள். உறங்குகின்ற பொழுது மனிதனிடத்துச் சத்துவகுணத்தோடு கூடிய நிலைமை வாய்க்குமாகில் அது யோக நித்திரை எனப்படுகிறது. அறிதுயில் எனவும் அது இயம்பப்படுகிறது. தமோகுணத்தில் ஊறி உறங்குபவனுடைய நிலை ஜடம் அல்லது கல் போன்றது. ஆங்கு உணர்வு ஒடுங்கிக் கிடக்கிறது. சத்துவகுணத்திற்கு வருங்கால் அதே உணர்வு தெளிந்த நிலையிலிருக்கிறது. உலகைப்பற்றிய உணர்ச்சியோ அல்லது தன்னுடைய ஜீவவியக்தியைப்பற்றிய உணர்ச்சியோ ஆங்கு இல்லை எனினும் முற்றிலும் தெளிவடைந்துள்ள உணர்ச்சியாக அது திகழ்கிறது. அந்நிலையையே யோக நித்திரை

என நாம் இயம்புகிறேம். விவேகானந்த சுவாமிகளுக்குச் சின்னஞ் சிறுவயதிலிருந்தே யோகசித்திரை வாய்த்திருந்தது. அவர் பெற்றிருந்த தூயமனமே அதற்குக் காரணமாயிற்று.

கேள்வி: (289) மேலை நாடுகளில் கல்வித் திட்டம் வெற்றியடைந்துள்ளது நம் நாட்டில் தோல்வி அடைந்தது ஏன்?

கல்வி மேல் நாட்டில் முற்றிலுமே வெற்றியடைந்திருக்கிறது என்றும் நம் நாட்டில் முற்றிலுமே தோல்வி அடைந்திருக்கிறது என்றும் இயம்புவது பொருந்தாது. மேல் நாட்டுப் பள்ளிகளில் உடல் உழைப்பை ஒட்டிப்போடுகிற திட்டங்களைப் பெரிதும் நிறைவேற்றுகின்றனர். அக்காரணத்தை முன்னிட்டே அங்குக் கல்வி வெற்றியடைந்திருக்கிறது என்று கருதப்படுகிறது. நம் நாட்டிலோ மாணக்கர்களுக்கிடையில் உடல் உழைப்பு மிகக் குறைவு. வெறும் மனேமுயற்சி மயமான கல்வியைத் தான் நம் நாட்டு இளைஞர்கள் கற்று வருகின்றனர். பள்ளிப் படிப்பு முடிந்தான பிறகு நம்மவர்கள் சமுதாயத்துக்குச் சுமையாயிருப்பதை முன்னிட்டு நம் நாட்டுக் கல்வி தோல்வியடைந்திருக்கிறது என்னும் முடிவுக்கு வருகிறேம்.

பண்பாடு என்பது கல்வியின் மற்றெரு முக்கியமான பணியாகிறது. பெற்றேர்க்கு அடிபணிந்திருப்பதும் காலமெல்லாம் பெற்றேர்க்குப் பணிவிடை பண்ணுவதும் பண்பாட்டின் விளைவாம். மேல் நாட்டுக்கல்வித் திட்டப்படி வயது முதிர்ந்த மகன் எந்த விதத்திலும் தாய் தந்தையர்க்குக் கடமைப்பட்டவன் அல்லன். கோழியும் குஞ்சும் தருணம் வருகிற பொழுது பிரிந்து கொள்ளுவதுபோன்று மேல் நாட்டு மாணக்கர்கள் தங்கள் தாய் தந்தையர்களிடமிருந்து பிரிந்துகொள்ளுகிறர்கள். நம் நாட்டுக் கல்வியின் பண்பும்பயனும் அத்தகையவைகள் அல்ல. ஏழையாயிருப்பவனும், தன் வருவாயில் ஒருபகுதியைக்கொண்டு பெற்றேரைப் பேணுவது நம் நாட்டுக் கல்வித்திட்டத்தின் வெற்றியாம். மேல்நாடுகளிலுள்ள உழைப்புத் திறமையும், நம் நாட்டுப் பண்பாகிய பெற்றேர்க்கு யாண்டும் கடமைப்பட்டிருக்கும் பான்மையும் சேர்ந்து அமையுமானல் அதுவே தலைசிறந்த கல்வித் திட்டமாகும். உலகெங்கும் இத்தகைய நல்ல கல்வித்திட்டம் அமைவது அவசியமாகிறது.

கேள்வி: (290) நாம் அணு ஆயுதம் வைத்திருக்க வேண்டாமா?

ஜடசக்தியைப் பயன்படுத்தி மனிதன் பிறர்க்குச் செய்யும் கேடுகளுள் மிகக் கொடியது அணு ஆயுதம். வாழ்க்கையைப் பற்றிய கோட்பாடு ஒன்று உளது. மனிதன் பிறர்க்கு எதை எடுத்து வழங்குகின்றனே அது இம்மியளவும் பிசகாது அவனையே வந்து சேருகிறது. உலகனைத்தும் இன்புற்றிருக்கவேண்டும் என்று தீவிரமாக எண்ணுபவன் தானே இன்புற்று இருக்கிறன். பிறரை அழித்து ஒழித்துத் தள்ளிவிட்டுத் தான் மட்டும் வாழ்ந்திருக்க வேண்டும் என்று எண்ணுபவன் தானே அழிந்துபட்டுப் போகின்றன். பஸ்மாசுரனுடைய செயல் இதற்குச் சான்றாகிறது. வேண்டுமானல் பௌதிக விக்ஞானத்தில் தீவிரமாக முன்னேற்றமடைந்து நம் நாட்டவர்களும்அணு ஆயுதம் அமைக்கக் கற்றுக்கொள்வதில் கேடு ஒன்றுமில்லை. அங்ஙனம் தற்பாதுகாப்பிற்காக அணு ஆயுதம் அமைத்து அதைச் செயலுக்குக் கொண்டுவர யாண்டும் ஆயத்தமாகவும் இருக்கலாம். ஆயினும் அதைப் பயன்படுத்திப் பிறரைத் துன்புறுத்தவோ, துடைத்துத் தள்ளவோ நம் நாட்டவர்கள் ஒருநாளும் எண்ணலாகாது. மேலான நல்லெண்ணத்திற்கு நிகரான ஆயுதம் வேறு ஏதுமில்லை.

இக்காலத்தில் அணு ஆயுதம் படைத்திருப்பவர்களுள் உச்ச நிலையிலிருப்பவர்கள் அமெரிக்கர்களும் ரஷ்யர்களும் ஆவார்கள். மனஅமைப்பில் அவர்களுக்கிடையில் இருக்கும் சஞ்சலத்திற்கும் நம்மவர்களுக்கிடையில் இருக்கும் அமைதிக்கும் வெகுதூரம். உலகத்திலுள்ள யாரையும் எதிர்க்கவோ, தாக்கவோ, துடைத்துத்தள்ளவோ நாம் எக்காலத்திலும் திட்டம் போட்டது கிடையாது. உலகனைத்தும் இன்புற்று இருக்கவேண்டும் என்னும் பரந்த மனப்பான்மையே நம்முடைய தேசியத் திட்டமாகும். அதன் விளைவாகத்தான் பல்லாண்டு பல்லாண்டு பல்லாயிரத்தாண்டு நாம் வாழ்ந்து வருகிறேம் நலன் விதைப்பவன் நலனை அறுவடையாக எடுக்கிறன். தீமை விதைப்பவன் தானே தீமைக்கு இலக்கு ஆகிறன். இது வாழ்க்கைக் கோட்பாடு.

அனுமன் கண்ட சீதை

(திரு. K. ராமமூர்த்தி M. Com.)

VIII. " வான் உயர் கற்பினள் "

அனுமனின் சுய அறிமுகத்தினல் சீதாப் பிராட்டிக்கு அவன்மீது ஓரளவு நம்பிக்கை ஏற் பட்டுவிட்டது. எனவே தன் மனத்தை மேலும் தெளிவுபடுத்திக் கொள்வதற்காக, ராமனின் நடவடிக்கைகளை மீண்டும் ஒருமுறை சொல்ல வேண்டும் என்றும், ராம-இலக்குவரின் அங்க அடையாளங்களை வர்ணிக்கவேண்டும் என்றும் சீதை அனுமனிடம் கேட்டுக்கொள்கின்ருள். இந்தச் சந்தர்ப்பத்தில் ஆதிகாவியத்திலும் கம்பனிலும் அனுமன் வாயிலாக ராமனுடைய பாதாதிகேச வர்ணனை கொடுக்கப்பட்டுள் ளது. பின்னர் நடைபெற்ற அனுமன் சீதை உரையாடலில் வான்மீகத்திலிருந்து கம்பன் சிறிது மாறுபட்ட விவரங்களைத் தருகின்ருன். இந்தப் பகுதிகளைச் சற்று விரிவாகக் காண் போம்.

1. பக்தியின் சங்கமம்

அரக்கரின் வெஞ்சிறையில் வாடிய சீதை மனித இனத்தவரையே பார்க்க வாய்ப் பில்லாமல் மாதக்கணக்கில் இருந்திருக்கின் ருள். தன் இனத்தை விட்டுப் பிரிக்கப்பட்ட மான்போன்று சீதை வருந்தினள் என்று ஆதி கவி கூறும்பொழுது அரக்கருலகில் எப்படிப் பட்ட உயிர்ப் பிண்டங்களுக்கு நடுவே சீதை சிறை வைக்கப்பட்டிருந்தாள் என்பது தெளி வாகும். சீதையைக் காத்துநின்ற அரக்கியரின் கோரமான உருவங்களை நினைத்துப் பார்த் தால் சீதையின் தவிப்பை நாம் உணரமுடியும். சீதை அசோக வனத்தை விட்டு ஓடிப்போய் விடாமலும், வேறு எவரும் சீதையை வந்து பார்த்து விடாமலும் மட்டும் அவர்கள் காவல் செய்யவில்லையாம்; சீதையை எமன் கூட வந்து பார்க்காமல் காத்து நின்ருர்களாம் அவ் அரக்கியர். அரக்கரின் கொடுமை தாங்காமல் சீதை ஒருவேளை தற்கொலை செய்து கொள்ளக் கூடுமாதலால் அந்த நிலையினின்றும் சீதை யைத் தடுக்கவுமே காவல் இருந்ததாம். அத ஞல்தான் கம்பன் சீதையைக் காவல் செய்யும் அரக்கியரைச் " சாதல் காப்பவர் " என்றும் அவர்கள் காவலைத் " தெறு காவல் " என்றும் வர்ணிப்பான். இந்த நிலையில் பத்து மாதங் கள் இன்னலுற்ற சீதைக்கு வாடிய பயிர் வாழ வந்த மாமழை போன்று அனுமன் வரவு புத்துயிரளிக்கின்றது. அந்தப் பயிருக்கு உரம் ஊட்டுவது போன்றவை ராமனைப்பற்றிய செய் திகள்; ராமனைப் பற்றிய நிகழ்ச்சிகள்; ராம னின் குண நலன்கள்; ராமனின் மேனி அழகு; ஏன் ராமனைப் பற்றிய எந்த ஒரு விவரமும் சீதைக்கு உயிர் ஊட்டும் மருந்தாகவே ஆகின்றது.

சிறையிலிருந்தது உடல் என்ருலும் சிந்தை யில் ராம பக்தியை வளர்த்து வந்தவள் சீதை. இந்த எண்ணத்திற்குப் புறத்தோற்றம் உண்டு பண்ணுபவன் போன்று தோன்றினன் அனுமன். ராமனைக் கண்டு தன் எலும்பெல் லாம் நெக்குருக உள்ளம் குழைந்து அவன்-வயப்பட்டவன் அனுமன். எனவே அனுமன் சீதை சந்திப்பு இரண்டு பக்திக் கடல்களின் சங்கமம் என்று சொல்லலாம். இரண்டு பக்தர் கள் சந்தித்தால் தங்கள் தெய்வத்தைப் பற்றிப் பேசிக்கொள்வது தவிர வேறெதுவும் பேசு வார்களா என்ன? நாவுக்கரசரும் ஞான சம்பந்தரும் சந்தித்துச் சிவன் பெருமையைப் பற்றிப் பேச ஆரம்பித்தால் அவ்விருவர் உள்ளமும் பக்திப் பெரு வெள்ளத்தில் மூழ்கி ஆனந்திக்கும் என்று சொல்லவும்வேண்டுமோ? அதுபோன்றதே அனுமன்-சீதை சந்திப்பும். அனுமனுக்கு இது ஒரு புது அனுபவம். கிஷ் கிந்தா காண்டத்தில் ராம இலக்குவரைப் பார்த்தது முதல் ராமனைத் தன் இஷ்ட தெய் வம் ஆக்கிக்கொண்டவன் அனுமன். ராம நாமத்தின் மகிமையைக் கண்ணுரக் கண்டவன் அவன். சம்பாதியின் சிறகுகளை முளைக்க வைத்த நாமம்; ஆவிபோகும் வேளையில் வாலிக்கு அறிவு தந்து அருளிய நாமம்; கடத் தற்கரிய பெருங்கடலைத் தான் கடந்து வர உத விய நாமம். இந்த நாமத்துக்கு உரியவனிடம் பக்தி நாள்தோறும் வளர்ந்து வருகின்றது அனுமனுக்கு. அந்த நாமத்தை அல்லும் பக லும் நினைந்து நினைந்து உருகிக்கொண்டிருக் கும் பக்தையான சீதையைப் பார்க்கின்ற

போது அந்த நாமத்துக்கு உரியவளிடம் அவனுக்குப் பக்தி இன்னும் அதிகமாகின்றது. அது மட்டுமா? ஆன்று அவிந்து அடங்கித் தவம் செய்யும் முனிவர்களின் தவமெல்லாம் 'தவம் செய்த தவமாம்' தையலான சிதையின் தவக்கனலின் முன் தூசிக்கு நிகராக இருப்பதையும் அனுமன் உணர்கின்றான். அந்தத் தவத்தின் திரு உரு கேட்கின்றது ராமனைப்பற்றி. ராமனின் ஓவியத்து எழுத ஒண்ணாத உருவத்தில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்து அவன் பண்பு நலன்களைத் தன் சிந்தையில் எண்ணி எண்ணி இறும்பூதெய்திய அனுமன் அந்தத் தெய்வத்தை வர்ணிக்க வாய்ப்புக் கிட்டும் போது வாளா இருப்பானா என்ன? அனுமனின் பக்திவெள்ளம் மடைதிறந்த வெள்ளம் போன்று பாய்ந்து சீதையின் பிரிவுத் தீயை அணைத்து அவள் உள்ளத்தைக் குளிர்விக்கின்ற விந்தையை இனிக் காண்போம்.

2. அனுமன் கண்ட ராமன்

வான்மீகத்தில் அனுமன் தரும் வர்ணனை ராமனின் பண்பு நலன்களையும் மேனி அழகினையும் விவரிப்பதாக அமைந்திருக்கின்றது. ஆனால் கம்பனில் வெறும் மேனி அழகுமட்டுமே விவரிக்கப்படுகின்றது. வான்மீகத்தில் ராமனின் பாதம் முதல் தலைவரை உள்ள உறுப்புக்களின் வர்ணனை சாமுத்ரிகா சாஸ்திரம், பிராஹ்ம புராணம், நாரதபுராணம் முதலிய நூல்களில் கூறப்பட்டுள்ள உடல் இலக்கணக் கூறுகளையும், வராஹமிகிரர், வரருசி, கார்க்காசாரியார், நந்தி, காத்யாயனர் முதலியவர்களின் கூற்றுக்களையும் தொகுத்துக் கொடுப்பது போன்று அமைந்துள்ளது.

அனுமனிடம் சீதை ராமனைப்பற்றியும் இலக்குவனைப் பற்றியும் விசாரிக்கின்றாள். அவர்களுடைய அழகு எவ்வண்ணத்தது? துடைகள், புஜங்கள் எவ்வண்ணமானவை? ஆகாரம் எத்தகையது? என்று பிராட்டி வினவுகின்றாள். அனுமன், தான் கவனித்த அளவில் ராம இலக்குவரின் லட்சணங்களைக் கூறுவதாக ஆரம்பிக்கின்றான். ஆனால் ராமனைப்பற்றிமட்டும்தான் பேசுகின்றான். இந்தப் பேச்சில் ராமனுடைய பண்பு நலனும் மேனி அழகும் காணப்படுகின்றன. உடற்கூறுபற்றிய விவரங்களை விட்டுவிட்டுக் குணச் சிறப்புக்களைமட்டும் அனுமன் கூறிய வரிசையில் இங்குக் காண்போம் :—

1. எல்லா உயிரினங்களின் உள்ளத்தையும் கவர்ந்து தன்பால் இழுக்கும் கருணையுள்ளத்துடன் பிறந்தவர் ராமர்.

2. தேஜஸில் கதிரவனையும், பொறுமையில் பூமியையும், அறிவுக்கூர்மையில் பிருஹஸ்பதியையும், புகழில் இந்திரனையும் ஒத்தவர்.

3. தம் குடிமக்களைக் கண் இமைபோன்று காத்துப்பேணும் பண்புள்ளவர்.

4. தம் குல ஆசாரத்தையும் தர்மத்தையும் முறையாகப் பின்பற்றுபவர்.

5. எதிரிகளை எரிக்கும் ஆற்றல் பெற்றவர்.

6. உலகத்திலுள்ள நான்கு வர்ண-ஆசிரம தர்மத்தைப் பாதுகாப்பவர்.

7. ஒழுக்கத்தில் தாமும் சிறந்து விளங்கி, மற்றவர்களையும் அவ்வாறே நடக்கும்படி செய்பவர்.

8. உள்ளத்தால் பொய்யாது ஒழுகி, உலகத்தார் உள்ளத்துள் எல்லாம் உள்ளவர்.

9. எப்பொழுதும் இறைவனை வழிபடுபவர்.

10. பொறிகளின்வழியே புலன்களைச்செல்லவிடாமல் தடுத்து நிறுத்துபவர்.

11. சான்றோர்களுக்கு உதவுவதில் முன்னணியில் நிற்பவர்.

12. நற்செயல்களையும், புண்ணிய கர்மங்களையும் இயற்றும் வழிமுறைகளை உணர்ந்தவர்.

13. அரசியல் நெறியில் வந்த அறநெறி ஓம்பிக்காப்பவர்.

14. அறவோரெனப்படும் அந்தணரை ஆதரிப்பவர்.

15. சாஸ்திரங்களை முறைப்படி அறிந்து தெளிந்தவர்.

16. சீலமும் அடக்கமும் படைத்தவர்.

17. இன்னல்களை எதிர்நோக்குவதில் கூட்டு ஒருவரையும் வேண்டாக் கொற்றவர்.

18. யஜுர்வேதத்தை நன்கு அறிந்து உணர்ந்தவர்.

19. மற்ற வேதங்களையும், வேதாங்கங்களையும் முறையே கற்றுத் தெளிந்து, வேதவிற்பன்னர்களால் பாராட்டப் பெற்றவர்.

20. வில்வித்தையில் தன்னிகரில்லாத் தனிப்

பெரும் வீரர்.

21. சத்தியத்தையும் தர்மத்தையுமே துணையாகக் கொண்டவர்.

22. பொருளைச் சேர்ப்பதிலும், சேர்த்த பொருளை ஈவதிலும் திறமையுடையவர்.

23. இடம் பொருள் ஏவல் நோக்கிச் செயலாற்றும் திறன் கொண்டவர்.

24. தம்மைச் சரணடைந்தவரைத் தம் உயிருக்கும் மேலாகப் பேணுபவர்.

25. எடுத்த காரியத்தைச் சிரமமின்றி எளிதாக நிறைவேற்றும் இயல்புள்ளவர்.

ராமனின் பண்பு நலன்களில் தன் உள்ளத்தைப் பறிகொடுத்த அனுமன் சீதையிடம் அப்பண்பு நலன்களில் தன்னை மிகவும் கவர்ந்தவையாக எடுத்துக்காட்டியவை இவை. இவற்றை அனுமன் விவரித்தபோது சீதை ராமனுடைய பண்புகளையெல்லாம்கேட்டுத் தன் உள்ளத்தில் உவகை மீதூரக் களிப்படைந்திருப்பாள் என்று கூறத் தேவையில்லை.

3. அனுமன் கூறிய செய்திகள்

ராமனைப் பற்றிக் கூறப்புகுந்த அனுமன் முக்கியமான செய்திகள் சிலவற்றையும் சீதையிடம் தெரிவிக்கின்றான். ராம இலக்குவர்க்கும் சுக்ரீவனுக்கும் ஏற்பட்ட நட்புப் பற்றியும் வாலி வதை பற்றியும் சீதையிடம் சொல்கின்றான். வான்மீகியின் அனுமன் வாலியின் வலிமைபற்றிச் சீதையிடம் எதுவும் கூறுவதில்லை. ஆனல், ராவணனைத் தன்வாலில் கட்டி விளையாடியவன் என்றும், நாள்தோறும் நான்கு கடல்களுக்கும் சென்று சந்தியா வந்தனம் செய்தவன் என்றும், பாற்கடலைக் கடைவதில் தேவர்களுக்கு உதவியவன் என்றும் வாலியின் வலிமைபற்றிக் கூறவைக்கின்றான் கம்பன் தன் அனுமனை. அத்துடன் இல்லாமல், இப்பேர்ப்பட்ட வாலியை ராமன் ஒரே அம்பினல் கொன்றான் என்ற செய்தியையும் சீதையிடம் தெரிவிக்கின்றான். சீதையின் சிதைந்துபோயிருந்த மனத்திற்கு வாலி வதை பற்றிய இக்குறிப்பு எவ்வளவு நம்பிக்கையூட்டியிருக்கும் என்று நினைத்துப் பார்த்தால் தான், வாலி வதைபற்றி அவளிடம் பேசிய அனுமனின் அறிவுத்திறன் நமக்குத்தெளிவாகும்.

நாம் பிறருடைய புற அமைப்பைத்தான் காண்கின்றோம். பிறருடைய செயல்களைப் பார்த்து அவர்களிடமுள்ள மகிமையை அறிகின்றோம். ஆனல் சான்றோர்கள் ஒருவரைப் பார்த்த மாத்திரத்திலேயே அவரிடமுள்ள மகிமைகளைக் கண்டுகொள்கிறார்கள். ராமன் அனுமனைச் சந்தித்த உடனேயே லக்ஷ்மணனிடம் “லக்ஷ்மண! இவன் கற்றவன், இவனிடம் நட்புக்கொள்வது நல்லது. இவன் சொல்லின் செல்வன்” என்று அனுமனுடைய மகிமைகளையெல்லாம் விளக்கிக் கூறுகின்றார். எனவே அனுமன் அறிவுத்திறன் படைத்தவன் என்பதை ராமன் அவனைச் சந்தித்த அன்றே அறிந்துகொள்கின்றார்.

ஆதிகாவியத்தில் அனுமனின் உரையில் இன்னொரு சிறப்பான பகுதி, சீதை கழற்றி எறிந்த அணிகலன்களை அனுமன் முதலியோர் ராமனிடம் காட்டியபோது அவன் அடைந்ததுயரம் பற்றியது ஆகும்: அணிகலன்களைக் கண்ட ராமன், அவற்றை அணிந்திருந்த சீதையையே நேரில் பார்த்துவிட்டதுபோன்று நினைத்துத் துயரக்கடலில் மூழ்கினன்; அவற்றைத் தன் மடிமீது வைத்துக்கொண்டும்கைகளால் தொட்டுப் பார்த்துக்கொண்டும் பெருமூச்செறிந்தான்; ராமனின் துயரக்கனலை அவை இன்னும் அதிகமாக்கிக் கொழுந்துவிட்டு எரியும்படி செய்தன; சீதையை நினைத்து ராமன் துயிலை மறந்தான்; சோகமே உருவெடுத்தவன் ஆனன்; பூகம்பத்தினல் தாக்கப்பட்ட மலைபோல் நிலைகுலைந்தான்; அழகான சோலைகளையும், இசைபாடும் அருவிகளையும், வளம் பெருக்கும் ஆறுகளையும் கண்டபோதெல்லாம் சீதையின் நினைவு வந்து ராமனை வாட்டியது. கம்பராமாயணத்தில் அணிகலன் கண்ட ராமன் நிலைமையை அனுமன் வேறுவிதமாக விவரித்ததை முன்னர்க் கண்டோம். சீதையின் பிரிவால் தேய்ந்துபோய்க்கொண்டிருந்த ராமனின் உயிரைப் பிடித்து நிறுத்தியவை சீதையின் அணிகலன்களாதலால் அவையே சீதையின் மாங்கல்யத்தைக் காப்பாற்றின என்று பேசுவான் கம்பன்கண்ட அனுமன். ராமனைப் பற்றிய இந்தச் சோகச் சித்திரம் சீதையின் சிந்தையில் இரண்டு மாறுபட்ட உணர்வுகளைத் தோற்றுவித்தது. ஒன்று ராமபிரான் தன்னை மறக்கவில்லை என்றும் தன் நினைவால் அவர்

வாடுகிறார் என்றும் அறிந்த சீதை மனத் திருப்தியுடன் மகிழ்ச்சியும் அடைந்தாள். இரண்டாவது ராமன் உள்ளம் தன் நினைவைச் சுமந்து நிற்கின்றது என்ற நினைவு தந்த மகிழ்ச்சி ஒருபுறமிருக்க தன் நினைவால் ராமன் படும் துன்பத்தை நினைந்து நினைந்து சீதை நொந்துபோகின்றாள். எனவே மகிழ்ச்சியும் வேதனையும் நிறைந்த உள்ளத்துடன் அனுமன் சொன்ன செய்தியை ஏற்றுக்கொள்கின்றாள் சீதை.

ராமனின் சோகத்தைக் கூறிய அனுமன், அடுத்து, தானும் ஏனைய வானர வீரரும் சீதையைத் தேடிப் புறப்பட்ட வரலாற்றை விவரிக்கின்றான். தென்திசை வந்த அங்கதனைத் தலைமையாகக்கொண்ட தன் கூட்டத்தினர் சீதையைக் காணாது கடல் அருகில் வந்து தவித்ததையும், சம்பாதியின் உதவியால் சீதை இருக்குமிடத்தைத் தெரிந்துகொண்டதையும், பின்னர் தான் மட்டும் இலங்கை வந்து இரவில் ராவணன் முதலியோர் அரண்மனைகளில் அவளைத் தேடியதையும், இறுதியில் சீதையைக் கண்டதையும் அனுமன் எடுத்துக் கூறுவான். இந்தச் சந்தர்ப்பத்தில் ஒரு செய்தியைக் குறிப்பிடவேண்டியிருக்கின்றது. 35ஆம் சர்க்கத்தில் 70-71ஆம் சுலோகங்களில் அனுமன் சீதையிடம் தெரிவிக்கும் செய்தி:-

"அங்கதனைத் தலைமையாகக் கொண்ட வானர வீரர்கள் உன்னைக் கண்டுபிடிக்கும் ஆவல் உந்தப்பெற்றவர்களாகக் கடலின் அருகில் வந்து நின்று அதிர்ச்சியடைந்தார்கள். கடலை எதிரில் பார்த்தவர்களாய்த் திகிலடைந்து பெருங்கவலைக்குள்ளானார்கள். அது சமயம் நான்,கடலைக்கண்டு அதிகமாக விசனப்படுகின்ற வானரப் படையினரின் ஏக்கத்தையும் பயத்தையும் போக்கி, நூறு யோசனை அகலமுள்ள இப்பெருங்கடலைத் தாண்டி வந்தேன்." இந்தச் செய்தியில் அனுமன் வானரப் படையின் பலவீனத்தை வெளிப்படுத்தி விடுகின்றான். கடலைக் கண்ட வானரர் எல்லாரும் கலக்கமடைந்து பயந்துவிட்டனர் என்றும் தான் ஒருவனே கலங்காமல் அவர்கள் அச்சத்தைப் போக்கியதாகவும் அனுமன் கூறுகின்றான். உண்மையில் நடந்ததும் அது தான். ஆனால் இதே அனுமன் சிறிதுநேரம் கழித்து, சீதையை உற்சாகப் படுத்துவதற்காக வானரப் படையினரின் வீரத்தினைப் புகழ்ந்து இப்படையில் எல்லாரும் அவனுக்குச் சமமானவராகவோ அல்லது அவனைக்காட்டிலும் அதிக வலிமையுடையவராகவோதான் இருக்கின்றார்களே தவிர அவனைக் காட்டிலும் குறைவான பலம் படைத்தவர் யாருமே இல்லை என்றும் [சர்க்கம் 39, சுலோகங்கள் 38,40] பேசுவான்.வரலாறு சொல்லும்போது உண்மை நிலையை விவரித்த மாருதி, சீதையின் மனத் தளர்வைப் போக்கி உற்சாகமூட்ட நினைத்த போது கற்பனை வளத்துடன் பேசமுற்படுகின்றான். இனி, கம்பராமாயணத்தில் அனுமன்-சீதை உரையாடலில் உள்ள சிறப்பினைப் பார்ப்போம்.

4. கம்பன் புகுத்திய புதுமை

வான்மீகத்தில் சீதை ராம-இலக்குவரின் மேனி அழகு பற்றிக் கேட்பதாகவும் அதற்கு அனுமன் ராமனைப் பற்றிய விவரங்களைத் தந்ததாகவும் முன்பு கண்டோம். கம்பனில் சீதை ராமனின் மேனிபற்றித்தான் அனுமனிடம் கேட்கின்றாள். இதற்கு அனுமன் இருபது பாடல்களில் ராமனின் உடல் அமைப்பு அழகு பற்றி எடுத்துக் கூறிப் பதில் தருகின்றான். உவமை கூறி விளக்குவதற்கு அப்பாற்பட்டது ராமன் அழகு என்றும், எல்லா உவமைகளும் ராமனுடன் ஒப்பிடும்போது தோற்றுப்போய் விடுகின்றன என்றும் ஆரம்பிக்கின்றது இந்த வர்ணனை. இப்பாடல்களில் கவிதை நயம் சிறிதும் இல்லை என்றும், இவை இடைச் செருகல் என்றும் கூறித் திரு பி. ஸ்ரீ அவர்கள் தாம் ஆனந்த விகடன் பத்திரிகையில் எழுதி வந்த சுந்தர ராமாயணத்தில் இப்பாடல்களை விமர்சனம் செய்யாமல் விட்டுவிடுகின்றார். நம்முடைய கட்டுரைக்கு ராமனின் மேனியழகு விமர்சனம் தேவையில்லாத பகுதியாதலின் அதனை விட்டுவிடலாம். ஆனால் அனுமனின் ராமன் மேனிபற்றிய வர்ணனை சீதையின் நெஞ்சத்தை நெகிழ வைத்திருக்கும் என்பது திண்ணம். சீதையின் உள்ள உருக்கத்தை உணர்ந்த அஞ்சனைச் செல்வன் சீதையின் இந்த மனநிலையை மாற்றாமல் அதே வேகத்தில் ராமன் தன்னிடம் கூறியனுப்பிய அடையாள மொழிகளைச் சீதையிடம் சொல்லத்

துவங்குகின்றான்.

கிட்கிந்தா காண்டத்தில் ராமன் அனுமனைத் தனியாக அழைத்து, சீதையிடம் தரவேண்டிய மோதிரத்தைக்கொடுத்து, அவளிடம் அனுமன் தெரிவிக்கவேண்டிய அடையாள மொழிகளையும் கூறி அனுப்புகின்றான். இவற்றை அக் காண்டத்தில் நாடவிட்டபடலம் 67-72 செய்யுட்களில் காணலாம். தங்கள் வாழ்வில் நிகழ்ந்த, இருவரும் நினைவிற்கொண்டுள்ள சில நிகழ்ச்சிகளை ராமன் சீதையிடம் தெரிவிக்குமாறு கூறுகின்றான். இவ்வாறு ராமன் கூறி அனுப்பிய நிகழ்ச்சிக் குறிப்புக்கள் ஆறு ஆகும். கிட்கிந்தா காண்டத்தில் காணப்படும் இந்த ஆறு செய்திகளாவன:

1. மிதிலைக்கு ராமன் தம்பியுடனும் கௌசிக முனிவருடனும் சென்றபோது கன்னிமாடத்தில் சீதையைப் பார்த்தது.

2. வில் முறிபட்ட செய்திகேட்ட சீதை, அந்த வில்லை ஒடித்தது. தான் கன்னிமாடத்தில் நின்றிருந்தபோது மிதிலைவீதியில் பார்த்த அழகனாக இல்லாவிட்டால் தான் உயிர்துறந்து விடப்போவதாக நினைத்துக்கொண்டது.

3. ஜனகன் அரண்மனை மண மண்டபத்தில் சீதை நுழைந்ததும் ராமனைப் பார்த்ததும் ராமன் சீதையைப் பார்த்ததும்.

4. அயோத்தியிலிருந்து வனம் செல்ல முற்பட்ட ராமனுடன் சீதையும் பிடிவாதமாக உடன் புறப்பட்டதும், அவளால் அளவில்லாத துன்பம் ஏற்படும் என்று ராமன் சொன்னதும்.

5. அதற்குச் சீதை சினந்து, வருந்தி, தான் ஒருத்தி இல்லாவிட்டால் ராமனுக்கு எப்போதுமே இன்பம்தான்போலும் என்று கூறியது.

6. ராமனுடன் வனம் புறப்பட்ட சீதை, அயோத்தியின் வாயிலைக் கடந்தவுடன் வனம் வந்துவிட்டதா என்று ராமனிடம் கேட்டது.

வான்மீகியின் கிட்கிந்தா காண்டத்தில் ராமன் அனுமனிடம் இவைபோன்ற எந்த அடையாள மொழிகளும் கூறுவதில்லை. அடையாளமாக மோதிரம்தான் தருகின்றான். எனவே கம்பன் தன் காப்பியத்தில் புதிதாகப் புகுத்திய நிகழ்ச்சிதான் இது. ஆனால் கம்பனுக்கு முன் இது பற்றிய குறிப்பு பிரபந்தத்தில் காணப்படுகின்றது. பெரியாழ்வார் திருமொழியில் மூன்றாவது பத்தில், 105வது பகுதியான "நெறிந்த கருங்குழல் மடவாய்" என்று ஆரம்பிக்கும் பாசுரம் "சீதைக்கு அனுமன் தெரிவித்த அடையாளம்" என்ற தலைப்பின் கீழ் காணப்படுகின்றது. பெரியாழ்வார் கூற்றுப்படி அனுமன் சீதையிடம் ஏழு அடையாளச் செய்திகளைத் தெரிவிக்கின்றான்:

1. பரசுராமனைக் கர்வபங்கம் செய்தது.

2. 'எல்லியம் போதினிதிருத்தல், இருந்த தோரிட வகையில் மல்லிகை மாமாலை கொண்டாங்கார்த்தது.'

3. 'குலக்குமரா காடுறையப் போ' என்ற கைகேயியின் கட்டளைப்படி ராமன் சீதையுடனும் தம்பியுடனும் காடு சேர்தல்.

4. கங்கைக் கரையில் குகனுடன் கொண்ட தோழமை.

5. சித்திரகூடத்திலிருக்கும்போது பரதன் வந்து ராமனைப் பணிந்து வேண்டியது.

6. ஒரு காக்கை சீதையைத் துன்புறுத்தியதும் அதனை ராமன் தண்டித்ததும்.

7. பொன்மானைப் பிடிக்க ராமன் சென்றதும் அவன் பின்னே இலக்குவன் சென்றதும்.

எனவே, கம்பனுக்கு முன்பே இந்த 'அடையாள மொழிகள்' கதை நம் நாட்டில் பரவலாக வழங்கி வந்தது என்பது தெளிவாகும். அதனால்தான் ஆதிகாவியத்தில் காணப்படாவிட்டாலும், தன் நூலுக்கு இதனால் சிறப்பு மிகும் என்று எண்ணிக் கம்பன் இந்த அடையாள நிகழ்ச்சிப் பகுதிகளைச் சேர்த்துக்கொண்டான் போலும்.

இனி, ராமன் கூறியனுப்பிய அடையாள மொழிகளைக் கம்பனுடைய அனுமன் எவ்வாறு சீதையிடம் தெரிவிக்கின்றான் என்று பார்ப்போம். கிஷ்கிந்தையில் ராமன் அனுமனிடம் தெரிவித்த ஆறு நிகழ்ச்சிகளையும் மீண்டும் நம் நினைவில் தெளிவுபடுத்திக் கொண்டு அசோக வனத்தில் அனுமன் சீதையிடம் சொல்லப் போவதைக் கூர்ந்து கவனிப்போம். ராமன் தந்த ஆறு நிகழ்ச்சிகளுக்குப் பதில் அனுமன் மூன்று நிகழ்ச்சிகளையே சீதையிடம் விவரிக்கின்றான். நிகழ்ச்சிகளின் தன்மையையும் சொல்லின் செல்வன் மாற்றிவிடுகின்றான். அனுவேண்டிய இடத்தில் தன் அறிவைப் பயன் படுத்தத் தவறுவதில்லை.

வாசுதேவ மனன விளக்கம்

(சுவாமி ஸதானந்தர்)

திரிலோக ஆதிபத்தியம், இந்திரபதவி, குபேரசம்பத்து, தேவலோக மாதர் இவைகளைப் பெற்றுக்கொண்டு ஆழ்ந்த தூக்கத்தை விட்டு விடு என்ருல் யாரும் விடமாட்டார்கள். மற்ற சுகங்கள் தாற்காலிகமாகவாவது சலிப்பை உண்டாக்குகின்றன, தெவிட்டுகின்றன; இவற்றில் என்ன சுகம் அடைந்துவிட்டோம், இவற்றிற்கு இத்தனைபாடு என்கிற மனச்சோர்வு உண்டாகிறது. நமது ஆரோக்கியம், அறிவு, மனேபலம், குறைவதை, தேய்வதை உணர்கிருேம். சுஷுப்தி சுகமே சுகம், விஷயசுகம் சுகமன்று என்று எல்லாருக்கும் ஓரளவு விளங்குகிறது. சுஷுப்தியை எல்லாரும் விரும்புகிருர்கள். அது இல்லாவிட்டால் மானுட வாழ்வே சாத்தியமில்லை, பயித்தியம் பிடித்துவிடும். சுஷுப்தியில் துயரப்படுவார் இல்லை. சரீரத்தின் களைப்புக்கும் மனச் சஞ்சலத்துக்கும் ஆழ்ந்த தூக்கம் மிகப் பெரிய பரிகாரம், சஞ்சீவினி ஆகும். ஆகையால் சுஷுப்தி ஆனந்தம் உயர்வுடையது, நிரதிசயமானது.

இனி இதற்குச் சாசுவதத் தன்மை எப்படிச் சொல்வது என்பதைப் பார்ப்போம். விழிப்பிலும் சொப்பனத்திலும் அநேக ரூபமான பற்பல விஷயங்களால் தனித்தனியாகச் சுகம் அனுபவிக்கப்படுகிறது. அவைகள் அளவுக்கு உட்பட்டவைகள். ஆகையால் அவை அநித்தியமானவை. சுஷுப்தி சுகம் ஒரே ரூபமானது, அளவுக்கு உட்படாதது, வேறு ஒரு வஸ்துவின் மூலம் இது உண்டாவதில்லை. ஆகவே சுஷுப்தி ஆனந்தம் நித்தியமானது. அது நித்தியமானல் அந்தச் சுகம் விழிப்பிலும் சொப்பனத்திலும்கூட அனுபவிக்கப்படவேண்டுமே, அப்பொழுது ஒருவராலும் அது அனுபவிக்கப்படவில்லையே என்கிற கேள்வி எழுகிறது. விழிப்பிலும் சொப்பனத்திலும் அந்தச் சுகம் இருக்கிறது. ஆனல் மனதின் விருத்திகளால் மறைக்கப்பட்டு அந்தச் சுகம் அனுபவிக்கப்படுவதில்லை. சுஷுப்தியில் பெற்ற ஓய்வு, தெளிவு, புத்துணர்ச்சி, தெம்பு இவைகளின் பலத்தால், துணையால்தான் ஜாக்கிரதாவஸ்தை நிகழ்கிறது. அது உயிரோட்டம் நிறைந்தது ஆகிறது.

கேள்வி: எல்லாவற்றிற்கும் காரணமாக இருக்கும் ஆனந்தத்தைக் காரிய ரூபமான அந்தக்கரண விருத்திகள் எப்படி மறைக்க முடியும்?

பதில்: சூரியனை மேகம் மறைப்பது போலவும் அக்னியைப் புகை மறைப்பது போலவும் கயிற்றின் தோற்றத்தைப் பாம்பின் தோற்றம் மறைப்பதுபோலவும் பிரம்மானந்தத்தை அந்தக்கரண விருத்திகள் காரிய ரூபமாக இருந்தும் மறைக்கின்றன. சாம்பலால் மறைக்கப்பட்ட அக்னியும் பனியால் மூடப்பட்ட சூரியனும் இல்லை என்றே சிறுவர்களும் மூடர்களும் எண்ணுகின்றனர். ஆனல் விவேகிகள் அப்படி எண்ணுவதில்லை. இதுபோன்றே வெளிப்பார்வை உள்ளவர்களுக்கு பிரம்மானந்த ரூபமான சுஷுப்தி ஆனந்தம் மறைக்கப்பட்டுத் தெரியாமல் போனலும் உள்நோக்கு உள்ளவர்களுக்கு உண்மை தெரிகிறது. சுஷுப்தி பிரம்மானந்த சொரூபமாக விளங்குகிறது. மூக்காலத்திலும், மூன்று அவஸ்தைகளிலும் ஒரே விதமாக அவர்களால் ஆனந்தம் அனுபவிக்கப்படுகிறது. ஆகையால் பிரம்மானந்தத்தைவிட வேருக இல்லாத சுஷுப்தி ஆனந்தம் நித்தியமானது என்பது தீர்மானமாகிறது.

இப்படி வேறு ஆதாரமில்லாததும், தன்னிலும் மிக்கது அற்றதும் சாசுவதமுமான பிரம்மானந்தத்தின் சத்-சித்-ஆனந்தம் என்கிற மூன்று லக்ஷணங்களும் நமக்கு அனுபவத்துக்கு வருவதால் நாம் ஆனந்த ரூபம் என்பது தீர்மானமாகிறது. இவ்விதம் சத்-சித் ஆனந்த லக்ஷணம் நம்மிடம் இருப்பதாகச் சுருதி, யுக்தி, அனுபவங்களால் முடிவானதால் நாம் சச்சிதானந்த பிரம்மம் என்பது தீர்மானமாகிறது. நாம் சச்சிதானந்த ஸ்வரூபம் என்பது எப்படி நம் அனுபவத்துக்கு வருகிறது என்பதைப் பார்ப்போம். வேதாந்த சாஸ்திரத்தின் தாத்பர்யத்தை, உண்மையைத் தீர்மானிப்பது என்கிற சிரவணத்தைக் குருமுகமாக அறிந்து அதைத் தொடர்ந்து மனனம் பண்ணி நிதித்யாசனம் செய்து வரவேண்டும். இப்படி

வெகுகாலம் நிதித்யாசனம் செய்து கொண்டிருப்பவனுக்கு "நான் சச்சிதானந்த மயமான பிரம்மம்" என்கிற ஞானம் உண்டாகிறது. இது பரோக்ஷ ஞானம் எனப்படுகிறது. அதாவது இந்த ஞானம் நம் அறிவுக்கு எட்டுகிறது, உண்மைதான் என்று அறிந்துள்ளோம், ஆனால் அனுபவ சாத்தியமாகவில்லை, அந்த உணர்வு சொரூபமாக நாம் இன்னும் மாறி அமையவில்லை என்று பொருள்.

இனி இந்தப் பரோக்ஷ ஞானத்தையும் தாண்டி 'நான் காரியத்தைச் செய்பவன், இது என் காரியம், நான் இன்ன ஜாதிக்காரன், நான் இன்ன வருணத்தான், நான் இன்ன ஆச்ரமத்தைச் சேர்ந்தவன் என்பன போன்ற பற்றுதலை, உணர்வுகளை விட்டு விட்டு, கடந்து 'நான் பிரம்மம், பிரம்மமே நான் சச்சிதானந்தம் என் சொரூபம்' என்கிற அனுபவத்தை, உணர்வை அடையவேண்டும். இப்போது சாதனம் முற்றுப்பெற்றது, அது அடைய வேண்டிய குறியை அடைந்து விட்டது எனலாம். முயற்சி, அப்பியாசம் ஆங்கு நின்றுவிடுகின்றன. சுஷுப்தியில் இருப்பது போன்று ஏந்த உபாதியும் அற்று, இப்பிரபஞ்ச சம்பந்தமான எந்த விவகாரமும் அற்று இருக்கிறது. ஜலத்தில் கரைந்த உப்புப் போன்று ஆங்கு ஜீவவியக்தி போய்விடுகிறது. பரவஸ்து ஒன்றுதான் மிச்சமிருக்கிறது. அலை தன் ரூபத்தையும் நாமத்தையும் இழந்து கடல் மயம் ஆய்விடுவது போன்று கடலை அடைந்த நதிபோன்று ஜீவன் பரவஸ்து ஆய்விடுகிறான். பிரம்மத்தில் மனம் லயித்து விடுகிறது. ஆங்குத் துவந்துவம் இல்லை. இப்பிரபஞ்ச வேற்றுமைகள் இல்லை. ஆசாபாசம் இல்லை. பயம் இல்லை. எல்லாம் தன்மயம். யாவும் ஒன்றே. எல்லாம் அன்புமயம், அறிவுப்பெருவெளி. ஆனந்தமயம். இத்தகைய அனுபவம் யாருக்குச் சித்திக்கிறதோ அவரே மகாத்மா. இந்த அனுபவ மயமான, இந்தப் போதத்துக்கே, உணர்வுக்கே அபரோக்ஷ அனுபவம், அபரோஷ ஞானம் என்று பெயர். இந்த அனுபவம் யாருக்கு இயல்பாக, அவர் சொரூபமாக ஆகிறதோ இதில் மாற்றமே இல்லாதிருக்கிறதோ அவரே மகாத்மா, ஞானி, பரமாத்மா தரிசனம் பெற்றவர் எனப்படுகிறார். இப்படிப்பட்ட அனுபவம் எப்பொழுது ஏற்படுகிறதோ அப்பொழுது அந்தப் புருஷன் ஸ்வானுபவரூபியாகவே ஆகிறான், ஆனந்தரூபி ஆகிறான். இந்த ஆனந்தத்தின் பெருமையை அவன்தான் அறியமுடியுமேதவிர மற்றவர்கள் அறியமுடியாது. பிரம்மானந்தத்தை விவரிக்கின்ற வேதமும் அறியாது இதை எடுத்து விளக்கவும் முடியாது. இதற்கு மொழி இல்லை, பதங்கள் இல்லை. ஸ்தூலத்தில் உபமானத்துக்கு ஒருபொருளும் இல்லை. ஆகையால் இது மனம் வாக்குக்கு அப்பாற்பட்டது, கடந்தது, சொல்வதற்கு ஆளும் மிச்சமில்லை. பேயர், பாலர், பித்தர் போன்று அவர்கள் தென்படுகிறார்கள். ஆயினும் அவர்கள் முன்னிலையில் சாதாரண ஜீவர்களுக்கு அப்போதைக்குச் சாந்தி ஏற்படுகிறது. உபாதிகள் விலகிச் சற்று உயர்ந்த சிந்தனைகள், கடவுள் சிந்தனைகள் எழுகின்றன. ஞானி தன்னையறியாமலே, உலகம் அறியாமலே உலகுக்குச் செய்கிற பேருபகாரம் இது. ஞானியைவிட உலகுக்கு உபகாரம், நன்மை செய்தவரார்? எதை அடைந்தால் அனைத்தும் அடைந்தது ஆகிறதோ, எதைப் பெற்ற பிறகு மேலும் பெறுவதற்கு ஒன்றுமில்லையோ, அந்தப் பிரம்மத்தில் அவன் இரண்டறக் கலந்து விடுகிறான்.

இனி, ஆத்மாவின் அகண்டம், துண்டுபடாத, இரண்டற்ற, பேதமற்ற ஏகவஸ்து, அதைத் தவிர வேறு இல்லை என்கிற தாத்பர்யத்தை, உண்மையை அறிந்துகொள்ள முயல்வோம்.

கேள்வி: இதுகாறும் சொன்ன விளக்கங்களால் தேகம் முதலிய பஞ்சகோசங்களில் நான் எனது என்கிற எண்ணம் விலகிவிட்டது. புத்தியைப் பிரகாசப்படுத்தும் சச்சிதானந்த ரூபமான பரமாத்மாவே நான் என்கிற ஞானம் ஏற்பட்டு விட்டது. இனி இதில் மாற்றம் இல்லை. ஆனால் ஒரு சந்தேகம்: ஆத்மா ஸத்ரூபம், சித்ரூபம், ஆனந்தரூபம் என்று விளக்கப்பட்டதல்லவா? இந்த மூன்று லக்ஷணங்களும் கூறும் ஸத் சித்-ஆனந்தம் என்னும் மூன்று பதங்களும் வெவ்வேறான மூன்று ஸ்வரூபங்களைக் குறிப்பிடுகின்றன. இப்பதங்கள் வெவ்வேறான மூன்று பொருள்கள் எனத்

தோன்றுகிறது. ஆகையால் வெவ்வேறான மூன்று பொருள்களைக் கூறும் இந்த மூன்று பதங்களுக்குப் பிரிவற்ற ஒரே வஸ்து எப்படிப் பொருளாகும். (அதாவது மூன்று பதங்களும் ஒரே பொருளைக் குறிக்கிறதா? ஒரே பொருள் இந்த மூன்று லக்ஷணங்களும் உடையதாக இருக்கிறதா? ஏககாலத்தில் எல்லாம் இருக்கிறதா என்பது கேள்வி.)

பதில்: தேசத்தினால் பரிச்சேதம் (பரிச்சேதம் என்றால் பிளவு, வேறுபட்டிருப்பது, ஒன்றுக்கும் மேற்பட்டவைகளாக இருப்பது என்று பொருள்) காலத்தால் பரிச்சேதம் வஸ்துவினால் பரிச்சேதம் என்னும் மூன்றுவிதப் பரிச்சேதங்கள் அற்றதும் அதனால் எல்லையற்றதுமான பொருள்தான் அகண்டம் எனப்படுகிறது. (கண்டம் என்றால் துண்டு, பிநுவு என்று பொருள். அகண்டம் என்றால் பிளவற்ற ஏக வஸ்து என்று பொருள். கொள்ளிடம் பிரிவதற்கு முன்பு உள்ள காவேரிநதிக்கு அகண்ட காவேரி என்றுபெயர். அதற்குமுன் பிரிவினை இல்லை, ஏகமாய் இருக்கிறது என்று பொருள்.) அகண்ட வஸ்துவுக்கு இந்த மூன்று லக்ஷணங்கள் எதற்காகச் சொல்லப்படுகின்றன என்று அறிந்துகொள்வோம்.

தேசபரிச்சேதம் அற்றது என்ற ஒரே லக்ஷணத்தை அங்கீகரித்தால் எங்கும் வியாபகமான ஆகாசமும் தேசபரிச்சேதமற்றதாக இருப்பதால் ஆகாசமும் அகண்டம் என்று ஆகிவிடும். அது அகண்டம் ஆவதில்லை. ஆகவே அகண்டமான ஆத்மாவின் லக்ஷணம் லக்ஷ்யம் அல்லாத ஆகாசத்திலும் இருப்பதால் அதிவியாப்தி தோஷம் ஏற்படும். (அதிவியாப்தி = நாலுகாலுள்ளது பசு என்றால் நாய், மற்ற விலங்குகளுக்கும் நாலுகால் இருக்கிறதே. அவை பசு அல்லவே. இந்த விளக்கப் பிழைக்கு அதிவியாப்தி என்று பெயர். லக்ஷ்யமில்லாதவற்றிற்கும் அந்த லக்ஷணம் இருப்பது என்று பொருள்.) இதைத் தடுக்கக் காலப் பரிச்சேதமற்றது என்ற லக்ஷணம் கூறப்பட்டது. ஆகாசத்திற்குத் தோற்றமும், மறைவும், அழிவும் இருப்பதால் காலப் பரிச்சேதம் இருக்கிறது. ஆகாசம் காலப் பரிச்சேதம் அற்றதாக இல்லை. ஆகையால் இந்த இரண்டாவது லக்ஷணத்தால் ஆகாசம் அகண்டம் அன்று. தேசபரிச்சேதமற்றது என்ற இரண்டு லக்ஷணம் மட்டும் சொன்னால் ஆகாசத்தை விட்டாலும் காலத்தை அகண்டமாக எடுத்துக்கொள்ள நேரும். எங்கும் உள்ளதால் காலம் தேசபரிச்சேதமற்றது. தன்னாலேயே தன்னை அளவுக்கு உட்படுத்த முடியாது. அதனால், அதாவது காலம் காலத்தால் அழியாது. ஆகையால் காலம் காலப் பரிச்சேதமற்றது. இந்த இரண்டு லக்ஷணங்களும் காலத்தில் இருப்பதால் காலமும் அகண்ட வஸ்துவாகி விடும். இதற்காகவஸ்து பரிச்தேமற்றது என்ற மூன்றாவது லக்ஷணம் சேர்க்கப்பட்டது. காலத்தைக்காட்டிலும் வேறான பொருள்கள் ஏராளமாக இருப்பதால் காலத்தில்வஸ்து பரிச்சேதம் உள்ளது. காலம் வஸ்து பரிச்சேதமற்றதாக இல்லை. ஆகையால் காலம் அகண்டமன்று. ஆத்மா ஒன்றில்தான் இந்த மூன்று லக்ஷணங்களும் இருப்பதால் ஆத்மா ஒன்றே அகண்ட வஸ்து. வேறு ஒன்றும் அகண்டமன்று. இதற்குத்தான் மூன்று லக்ஷணங்கள் கூறப்பட்டன. ஒரு பொருளை நிர்ணயிப்பதற்கு எவ்வளவு துருவி ஆராய்ந்திருக்கிறார்கள் என்பதை எண்ணிப் பாருங்கள். ஆத்மா தேசத்தில் கட்டுப்படாதது. காலத்தால் அழியாதது, வர்த்தமானம் அல்லது காரணகாரிய நியதியில் அடங்காதது. நீண்ட கால அளவுகளுக்கு யுகம், கல்பகாலம், மன்வந்தரம் என்று பெயர். ஒவ்வொன்றும் எத்தனை வருஷங்கள் கொண்டது என்று கணக்கிடமுடியாத அளவு அவைகள் பெரியவை. ஆயினும் கல்பகாலமும் ஒருநொடியும் ஒன்றே. ஆதிஅந்தமற்ற என்றைக்கும் உள்ள, நித்தியப்பொருளிடத்துக் காலக்கணிப்புச் சாத்தியப்படாது. கனவில் நம் மனதில் இப்பிரபஞ்சத்தையே பார்க்கிறோம். ஸ்தூல ஆகாசத்தைக்காட்டிலும் சிதாகாசம் பெரியது என்பதற்கு அதுவே சான்று. காலமும் தேசமும் அற்ற இடத்தில் வர்த்தமானமும் இல்லை. தேச கால வர்த்தமானம் என்பது மனதின் கற்பனை. உண்மையில்அவை இல்லை. இதைத் தெரிந்து கொண்டால் ஆத்ம தத்துவம் நமக்கு நன்கு விளங்கும். உள்ளது ஆத்மா ஒன்றே. ஜீவாத்மா, பரமாத்மா என்கிற பதப்பிரிவினை விளக்கத்திற்காக ஏற்பட்டவை. ஜீவனும் சிவனும் ஒன்றே. உள்ளது ஒன்றே.

குமரகுருபரர்

(வித்துவான். ஆதி பாலசுந்தரன் M. A.)

மனிதனுக்குப் பகுத்தறிவு உண்டு; மனம் உண்டு; உணர்வு உண்டு; அவனுக்கு என்று உரிமை உண்டு. மனிதனுக்கு இருப்பது போலப் பகுத்தறிவு விலங்குகளுக்கு உண்டா? இல்லை. பிற உயிர் இனங்களுக்கு உண்டா? இல்லை. மற்ற உயிர்களுக்கு மனம் உண்டா? உண்டு. ஆனல் மனிதனுக்கு உள்ளது போல விரிந்த அளவு மனம் பிற உயிர்களுக்கு இல்லை. மனிதனுக்கு அமைந்துள்ள உரிமைகள் வேறு. பிற உயிர் இனங்களுக்கு அமைந்துள்ள உரிமைகள் வேறு.

மனிதன் பகுத்தறிவைக் கொண்டு, மனத்தாலே சிந்தித்து அவனுக்கு என்று அமைந்துள்ள உரிமைகளை எவ்வாறு பயன்படுத்த வேண்டும்?

மனித வாழ்வு செம்மைப்படுவதற்குரிய நெறி முறைகளையும், கடைப்பிடிக்க வேண்டிய நியதிகளையும் நம் முன்னேர்கள் தொகுத்துச் சொல்லி இருக்கிருர்கள். ஏற்றுக்கொள்ள வேண்டிய நீதிகள் இவை; நடைமுறைகள் இவை என ஆன்ருேர்கள் வகைப்படுத்திச் சொல்லியிருக்கிருர்கள்.

வாழ்க்கைக்குத் தேவையான அடிப்படை உண்மைகளைத் தொகுத்துச் சொல்லியிருப்பதுடன், சிறப்பாகவும், விளக்கமாகவும் சொல்ல வேண்டிய அவசியமான செய்திகளைத் தனித் தனியாகவும் இயம்பியுள்ளார்கள்.

மனிதனுக்கு என்று உரிமைகள் உள்ளன அல்லவா! அந்த உரிமைகளைப் பயன்படுத்திக் கொண்டு, நன்மையானவற்றையெல்லாம் நீக்கி விட்டுத் தீமையானவற்றை அவன் செய்யக் கூடும். அப்படி அவன் செய்ய முனையும்போது, சான்ருேர்களின் அறிவுரைகள் அவனுடைய மனத்திலே தங்கியிருந்து இவை நல்லவை; இவற்றைச் செய்; இவை தீயவை; இவற்றைச் செய்யாதே என்று உணர்த்தி நல்வழிப்படுத்துகின்றன.

நல்ல நண்பர்கள் அறிவுரை கூறுவார்கள்; உண்மைதான். ஆனல், நல்ல நண்பர்கள் எல்லாருக்கும் கிடைப்பார்களா? கிடைக்க மாட்டார்கள். அப்படியே கிடைத்தாலும் இடம் அந்த நண்பரைப் பிரித்துவிடும். காலம் பிரித்து விடக்கூடும். இப்படி இடமோ காலமோ நல்ல நண்பர்களைப் பிரித்து விடக் கூடும்.

ஆனல், சான்ருேர்கள் கூறிய அறிவுரைகளை இடம் பிரித்து விடுமா? காலம் பிரித்துவிடுமா? இடமோ, காலமோ பிரித்து விடாது.

நல்ல நண்பர்கள் கிடைத்தாலும், வேண்டிய சமயத்தில் நமது உதவிக்கு அவர்களால் வர முடியாமல் போகக்கூடும். ஆனல், சான்ருேர்களின் அறிவுரைகள் நிறைந்த நூல் நம்மிடமே இருக்கும். எப்போது வேண்டுமானலும் அந்த நூல்கள் நமக்குப் பயன்படும்.

குமரகுருபரர் அருள் நூல்களையும், பக்தி நூல்களையும் நமக்குத் தந்துள்ளார். இலக்கிய நூல்களையும் தந்துள்ளார். இலக்கண நூல்களையும் அளித்திருக்கின்ருர்.

மக்களுக்கு நீதி புகட்டுவதற்காக நீதிநெறி விளக்கம் என்னும் நூலையும் அளித்துள்ளார். மக்களுக்கு வேண்டிய நீதிகளைத் தொகுத்துச் சொல்லும் நூல் திருக்குறள். திருக்குறள் கருத்துக்களையொட்டிச் சுருக்கமாகவும், தெளிவாகவும் ஒரு நூல் இயற்றித் தருமாறு குமரகுருபர சுவாமிகளை மதுரையை ஆண்டு வந்த திருமலைநாயக்க மன்னர் வேண்டிக்கொண்டார். அவருடைய வேண்டுகோளை நிறைவேற்றுவதற்காகவும் குமரகுருபர சுவாமிகள் நீதிநெறி விளக்கத்தைப் பாடினர்.

சமூகத்துக்கு வேண்டிய நீதிகளைச் சொல்லும் போது, செய்தே ஆகவேண்டும் எனக் கட்டளை இடுவதாக நீதி நூல்கள் அமைந்திருக்கும். பயன்படக்கூடிய நீதிகளைச் சொல்லும்போது, செய்யலாம் என்று சொல்லாமல், செய்தே ஆகவேண்டும் என்று உத்தரவு இடுவதாக அமைந்திருக்கும்.

இலக்கிய நூல்கள் செய்திகளைச் சொல்லிக் கொண்டு போகும். புராணங்கள், இதிகாசங்கள் முதலியன வரலாறு, கதை ஆகியவற்றைச் சொல்லும். நீதி நூல்கள் நீதிகளைச் செய்தே ஆகவேண்டும் என்று கட்டளை இட்டு வற்புறுத்தும்.

மனித வாழ்க்கை பயனுள்ள முறையில் அமைவதற்கு எடுத்துச் சொல்லவேண்டிய நீதி நெறிகள் எண்ணிக்கையில் அடங்காமல் பல உண்டு.

அவற்றுள் மிகவும் இன்றியமையாதவற்றை நீதிநெறி விளக்கத்தில் ஸ்ரீ குமரகுருபரர் எடுத்து விளக்கியுள்ளார். கடவுள் வாழ்த்தாக அமைந்த பாடல்:

நீரில் குமிழி இளமை நிறைசெல்வம்
நீரில் சுருட்டும் நெடுந்திரைகள்—நீரில்
எழுத்தாகும் யாக்கை நமரங்காள் என்னே
வழுத்தாதது எம்பிரான் மன்று.

— 'நீரில் குமிழி இளமை "......—இளமைப் பருவம் தோன்றுகிற குமிழிக்கு நிகர் ஆகும். தண்ணீரில் குமிழி தோன்றும்; தோன்றிய உடனேயே அழியும்; நிலைத்து நிற்காது. அதே போன்றுதான் இளமைப் பருவமும்.

உலகத்தில் குழந்தையாகப் பிறக்கின்றார்கள். ஆயினும் யாரும் குழந்தையாக இருக்க விரும்புவதில்லை. பின்னாளில், துன்பப்படுகின்றபொழுது, "குழந்தையாக இருந்திருந்தால் இவ்வளவு துன்பம் வந்திருக்காதே!" என்று நினைத்து வருத்தப்படுவார்கள். ஆனால் குழந்தைப் பருவத்திலேயே இருப்பதற்கு யாரும் விருப்பப்படமாட்டார்கள்.

குழந்தைப் பருவத்திலேயே இருப்பது இயற்கைக்கு முரணானது ஆகும். குழந்தைப் பருவத்திலேயே இருப்பது இயற்கை நியதியும் அன்று. குழந்தைப் பருவத்தில் ஏற்பட வேண்டிய மாறுதல்கள் ஏற்பட்டே ஆகவேண்டும். அவ்வாறு ஏற்படாத உடம்பு குற்றமுடைய உடம்பேயாகும்.

குழந்தைப் பருவம் மாறி இளமைப் பருவம் வருகிறது. இளமைப் பருவம் நிலைத்து இருக்க வேண்டும் என்று ஆண் பெண் இருபாலாரும் விரும்புகின்றார்கள். ஆனால், இளமைப்பருவம் நிலைத்து இருக்கக் கூடியதா? இல்லையே! இளமை நிலையில்லாதது என ஆன்றோர் அனைவரும் இயம்பியுள்ளனர். சிறிது காலம் மட்டுமே—வரையறுத்த காலம் வரையிலுமே—தங்கியிருக்கக் கூடியது இளமை. இளமைப் பருவம் எந்நாளும் நிலைத்திருக்கக் கூடியது என்று நினைப்பது அறியாமையாகும்:

நீர்க்குமிழி எவ்வாறு தோன்றியவுடனே அழியுமோ அதுபோன்று, இளமைப் பருவமும் நிலைத்து நிற்காமல் அழிந்துவிடும். நாள் தோறும் நாம் காணக்கூடிய ஒன்று நீர்க்குமிழி. எனவே, தெரிந்த உதாரணத்தைக்கொண்டு இங்கே குமரகுருபரர் உண்மையை விளக்குகின்றார்.

"நிறைசெல்வம் நீரில் சுருட்டும் நெடுந் திரைகள்"—நிறைந்த செல்வம் தண்ணீரில் காற்றினால் சுருட்டப்படும் பெரிய அலைகள் ஆகும்.

ஆறிடும், மேடும் மடுவும் போலாம் செல்வம் என்பது ஆன்றோர் கொள்கை. காட்டாற்றில் திடீர் என வெள்ளம் வரும். அப்படி வரும் போது அது மண்ணை அரித்துக்கொண்டு வந்து ஓர் இடத்தில் மேடாக்கும். அடுத்து வருகின்ற வெள்ளப் பெருக்கு அந்த மேட்டை அடித்துக் கொண்டு சென்று ஆழமான பள்ளமாக்கி விடும்.

அதே போன்று ஏராளமான செல்வம் ஒருவருக்கு வந்து சேரும். எப்படித் திடீர் என்று வந்ததோ அதே முறையில் திடீர் என்று அந்தச் செல்வம் மறைந்து போகும். முறையாகத் தேடுகின்ற செல்வந்தான் அளவோடு வரும்; சிறுகச் சிறுக வந்து பெருகும். முறையற்ற செல்வம் திடீர் எனத் தோன்றிவந்து பெருகும். நியாயமான முறையில் செல்வம் தேடுகின்ற ஒருவருக்குத் திடீர் என்று அதிகமான பணம் வந்து சேருவதற்கு நியாயம் இல்லை.

தண்ணீரில் அலைகள் உண்டாகின்றன. அந்த அலைகள் காற்றினால் ஏற்படுகின்றன. தண்ணீரில் அலைகள் தோன்றும்; பிறகு மறையும். இவ்வாறு அடிக்கடி தோன்றித் தோன்றி மறையும் இயல்பு உடையவை அலைகள்.

அதே போன்று, செல்வம் ஒருவருடைய கைக்கு வரும். அதே போன்று கையை விட்டு நீங்கும். சக்கரக்கால் போல வரும் செல்வம் என்பது ஆன்றோர் வாக்கு. வண்டிச் சக்கரம் மேலும் கீழுமாக மாறி மாறிச் சுழலும். செல்வம் ஒரு சமயம் வரும்; பிறிதொரு சமயம் போகும். அலை நிலையில்லாதது. செல்வமும் நிலையில்லாதது. செல்வத்தையே பெரிது என்று நம்புவதில் ஒரு பயனும் இல்லை. அழியக்கூடியது எனவே, செல்வம் நமக்குத்

தக்க சமயத்தில் உதவும் என எண்ணுவது அறியாமையாகும்.

"நீரில் எழுத்தாகும் யாக்கை"—நீரில் எழுதப்பட்ட எழுத்துக்கு நிகர் உடம்பு என்பதாகும். "கல்மேல் எழுத்துப் போல் காணுமே"—என்பது சான்றோர் வாக்கு. எழுதப்பட்ட எழுத்துச் சிறிதுகாலம் அழியாமல் இருக்க வேண்டுமானால் கல்லின்மேல்எழுதப்பட்டிருக்க வேண்டும். கல்மேல் எழுதப்பட்ட எழுத்து அழியாது தெளிவாகத்தெரியும். சற்று நிலைத்து நிற்கும்.

நீரில் எழுத முடியாது. கை விரலால் எழுத முயலுவார்கள். எழுதுகின்றவர்களுக்குத் தாம் இன்ன எழுத்து எழுதுகிறோம் என்னும் உணர்வு இருப்பதால் எழுதுகின்ற எழுத்தின் வடிவம் மனத்தில் தோன்றும்.

ஆனால், மற்றவர்களுக்கு எழுத்தின் வடிவம் கண்ணுக்குத் தெரியாது. நீரில் எழுதிக்கொண்டிருக்கும்பொழுதே அழிந்துகொண்டே வரும்.

யாக்கையாகிய உடம்பின் நிலையும் அப்படித்தான். தோன்றுகின்றபொழுதே அழியும் தன்மை உடையது உடம்பு. உடம்பைப் பெறுவது நம் கையில் இல்லை. அவரவர் விருப்பப்படியே உடம்பைப் பெற்றுக்கொள்ளலாம் என்றால், உறுப்புக் குறைபாடு உள்ள உடம்பைப் பெற யாரும் விரும்பமாட்டார்கள். ஏழ்மை நிலையில் பிறப்பு எடுப்பதையும் விரும்புபவர்கள் இரார். எனவே, நமக்கு உடம்பு வாய்ப்பது என்பது நம் கையில் இல்லை.

வினைப்பயன் காரணமாகக் கிடைக்கக்கூடிய உடம்பு அழியாமல் நிலைத்து இருக்கும் என்பது நம் கையில் இல்லை. தோன்றுகின்ற சமயத்திலேயே அழியும் தன்மையுடையது உடம்பு. உடம்பு எந்நாளும் அழியாமல் நிலைத்து இருக்கும் என்று எண்ணுவது அறியாமை ஆகும். உடம்பின் மீது நம்பிக்கை வைத்துப் பயனில்லை. உணவு உட்கொள்ளுவதும், மருந்து சேர்த்துக்கொள்ளுவதும் பெற்றிருக்கின்ற உடம்பைப் பேணிக்கொள்ளுவோம் என்னும் கருத்தில்தான்.

நீரில் எழுத்து எப்படி மறைந்து போகுமோ அதுபோன்று நமது உடம்பும் மறைந்துபோகக் கூடியதுதான்.

எனவே, இளமை நிலையில்லாதது; செல்வம் நிலையில்லாதது; யாக்கையாகிய உடம்பு நிலையில்லாதது. எப்போதும் அழியாமல் இருக்கும் பொருளே உயிர்க்கு உறுதி தருவதாகும். அழியக்கூடிய இவற்றை நம்பிப்பயனில்லை. உலகத்தில் தோன்றுகின்ற பொருள்களெல்லாம் அழியக்கூடிய இயல்பு உடையவை. எந்தப்பொருள் தோற்றத்திற்கு வருமோ அந்தப் பொருள் அழியும் தன்மை உடையது. இறைவன் தோற்றம் இல்லாதவன்; ஒடுக்கமும் இல்லாதவன். தோற்றமும் அழிவும் இல்லாத பரம்பொருளே உயிர்களுக்கு உறுதி தருவது.

"நமரங்காள்! என்னே வழுத்தாதது எம்பிரான்மன்று" — அன்பர்களே! உலகம் நிலையற்றதென நீங்கள் உணர்ந்திருந்தும், எம்பெருமான் நடராஜப்பெருமான் திருநடனமிடும் பொன்னம்பலத்தினைப் போற்றி வணங்காமல் இருப்பதற்கு என்ன காரணம்? சொல்லுங்கள்.

இளமையையும், நிறைந்த செல்வத்தையும், யாக்கையையும் நம்பிப் பயனில்லை. இவையெல்லாம் அழியும் முன்பே, அழியாப் பரம்பொருளை வாழ்த்தி வணங்குங்கள் என்கிறார் குமரகுருபரர்.

பரம்பொருளாகிய இறைவனை ஏன் வணங்க வேண்டும்? மனிதன் பகுத்தறிவும் உணர்வும் உடையவன். ஆத்மா மனித உடம்புக்குள்ளே வருகின்றபொழுதுதான் நல்உணர்வும் ஆறாவது அறிவாகிய பகுத்தறிவும் பெறுகின்றது.

நல்உணர்வு, பகுத்தறிவு இரண்டும் பெற்ற தன் பயன் இறை உணர்வைப் பெறுவதே ஆகும். பகுத்து உணர்ந்துகொள்ளும் ஆறாவது அறிவைப் பெற்ற மானிட உயிர், ஆத்மாவைப் பற்றியும், உலகத்தைப்பற்றியும், இறைவனைப்பற்றியும் அறிந்துகொள்ள விரும்புகின்றது; விரும்பவேண்டும். விரும்பாத உயிர் மானிட தேகத்தில் இருந்தாலும் மானிட உயிர் ஆகாது. உணர்வு அற்ற உயிரேயாகும். பறவைகள் விலங்குகள் முதலிய உயிர்கள் இறைவனை எண்ணுவதாகவும், எண்ணிப் போற்றுவதாகவும் நம் முன்னோர்கள் கூறுவது மானிடருக்கும் அந்த உணர்வு வருவதற்காகவே.

அறிவின் பயன் இறைவனை எண்ணுதலே ஆகும். ஏன்? அறிவிலே சிறந்த அறிவு எது? நுட்பமான அறிவு சிறந்த அறிவாகும்; நுட்பமான அறிவு மிக நுட்பமான பொருளை உணர்தல் வேண்டும். அணுவுக்குள் அணுவாய் அப்பாலுக்கு அப்பாலாய் இலங்குபவன் இறைவன். எனவே, அணுவாய், நுண்ணியனாய்த் திகழும் பரம்பொருளைச் சிந்திப்பதே நுட்பமான அறிவின் பயனாகும்.

மானிட அறிவுக்கு அப்பாற்பட்ட, அறிவின் எல்லையைக் கடந்த ஒரு பொருளைப்பற்றிச் சிந்திக்க முயல்வது, சிந்தித்து அதைப்பற்றி அறிந்துகொள்வது சிறந்த நுட்பமான அறிவுக்கு இலட்சணமாகும்.

சித்தமும் செல்லாத சேயோன் இறைவன். வாக்கு, மனம் கடந்த அப்பெருமானைச் சிந்திப்பது மானிட அறிவு படைத்திருப்பதன் பயனை முழுமையாகப் பெறுவதாகும்.

எனவே குமரகுருபர சுவாமிகள், "அன்பர்களே! பொன்னம்பலவாணனை நீங்கள் வழுத்தாதது—வணங்காதது ஏன்?" என்று வினவி நம் சிந்தனையை நல்வழிக்குத் திருப்பிவிடுகின்றார்.

"தக்க இன்ன தகாதன இன்ன என்று
ஒக்க உன்னலர் ஆயின் உயர்ந்துள
மக்களும் விலங்கே; மனுவின் நெறி
புக்கவேல் அவ்விலங்கும் புத்தேளிரே"

என்கிறார் கம்பர்.

— தக்கவை இவை; தகாதவை இவை என்று தம் பகுத்தறிவைக்கொண்டு சிந்தித்துப் பார்க்கவில்லை என்றால், உயிர் இனங்களில் மிகவும் உயர்ந்து விளங்கும் மக்களும் விலங்குகளே ஆவார்கள். மனுநீதி நெறி அறிந்து நடந்தால், இழிந்த இனமான விலங்கும் தேவர்களுக்குச் சமமாக ஆன்றோரால் எண்ணப்படும்.

மனித அறிவைக்கொண்டு எண்ணுகின்ற எண்ணம் உயர்ந்த எண்ணமாக, உயர்ந்த பொருளைப் பற்றிச் சிந்திக்கின்ற எண்ணமாக இருத்தல் வேண்டும். உயர்ந்த பொருள் எது? பரம்பொருள்தான் உயர்ந்த பொருள்.

பரம்பொருளைச் சிந்திக்காத மனிதப் பிறவி விலங்குப் பிறவியாக இருந்தாலும் தெய்வத்தைச் சிந்தித்தால் தெய்வப் பிறவி ஆகும்.

எல்லா நாடுகளிலும், எல்லாக் காலங்களிலும், எல்லா நாகரிக மக்களுக்கிடையிலும், கடவுள் நம்பிக்கை இருந்து வந்தது என்பதும், கடவுளை உணர்வதே பண்பின் சிகரமாகும் என்பதும் அனைவருக்கும் ஒப்ப முடிந்த கருத்தாகும்.

கல்வியின் சிறப்பு

"அறம்பொருள் இன்பமும் வீடும் பயக்கும்
புறங்கடை நல்இசையும் நாட்டும்—உறுங்கவல் [ஒன்று
உற்றுழியும் கைகொடுக்கும் கல்வியின் ஊங்கில்லை
சிற்றுயிர்க்கு உற்ற துணை."

— ஒழுக்கம், செல்வம், இன்பம் ஆகிய மூன்றினையும் தரும். அத்துடன் மோட்சத்தையும் தரும். உலகத்தில் சிறந்த புகழையும் நிலை நாட்டும். இயல்பாக வரக்கூடிய துன்பம் வந்து சேர்ந்தபொழுது, நமக்குக் கைகொடுத்து உதவிசெய்யும். எது? கல்வியே ஆகும். கல்வியைக் காட்டிலும் மக்களுக்கு உதவி செய்யக் கூடியது வேறு எதுவும் இல்லை — என்று கல்வியின் சிறப்பைக் குமரகுருபரர் கூறுகின்றார்.

[கல்வி] அறப்பொருள் இன்பம் வீடும் பயக்கும் — கல்வியானது மக்களுக்கு நல்லொழுக்கத்தைக் கொடுக்கும். "மனிதனை உயர்த்துவது எதுவோ அது ஒழுக்கம்" என்பது பெரியவர்களின் கருத்து. உண்ணத் தெரிந்த மனிதன், உடை உடுத்தப் பழகிய மனிதன், தன்னை நன் மனத்தால் உயர்த்திக்கொள்ளவும் தெரிந்து கொள்ளவேண்டும். தெரிந்து உயர்த்திக் கொள்ளவும் வேண்டும். அப்படி உயர்த்திக் கொள்வதற்குப் பெரிதும் உதவுவது ஒழுக்கமேயாகும். ஒழுக்கத்தை வற்புறுத்தாத ஆச்சார்யர்கள் யாரும் இல்லை. "ஒழுக்கம் விழுப்பம் தரும்" ஒழுக்கம் மேன்மையை நல்கும் என்பது சான்றோரின் கருத்து.

விலங்குகளுக்கோ பறவைகளுக்கோ ஒழுக்கக் கட்டுப்பாடு கிடையாது. ஒழுக்கத்தை வலியுறுத்தும் கல்விப் பயிற்சி கிடையாது. மனித இனம் ஒன்றுக்கே கல்வி உரிமை உடையது. அவ்வுரிமையின் அடிப்படையாக அவன் அடைவது ஒழுக்கம். கல்வியின் பயனாகக் கிடைப்பது சிந்தனை. சிந்தனையின் விளைவாகத் தோன்றுவது நல்லொழுக்கம்.

அமரநாத யாத்திரை

(320ஆம் பக்கத் தொடர்ச்சி)

[சுவாமி குஹானந்தர்]

தூய அன்னையார் குருதேவருக்கும் அடியவர்களுக்கும் செய்யும் சேவையையே தவமாக ஏற்றுக்கொண்டு பத்து ஆண்டுகள் வாழ்ந்த புனிதஸ்தலம் தக்ஷிணேசுவரம் ஆகும். இந்த ஸ்தலம் கல்கத்தாவிற்கு மேற்கே சுமார் மூன்று மைல்தூரத்தில் கங்கைக்கரையில் ராணி ராசமணி என்ற பக்திமதி ஜமீன்தாரணியால் 1855 ஆம் ஆண்டு நிறுவப்பட்டது. இதில் அன்னை பவதாரணியைப் பிரதான தெய்வமாக வைத்துப் பெரிய கோயில் அமைத்துள்ளார்கள். அதற்கருகில் ராதாகிருஷ்ணன் கோவிலும் அதற்கு எதிரில் வரிசையாகப் பன்னிரண்டு சிவலிங்கங்களும் அமைத்து வழிபாடு நடத்தப்பட்டு வருகிறது. ஸ்ரீ ராமகிருஷ்ணரின் சமய சமரசக் கொள்கைக்கு ஏற்ப இந்தக் கோவில் அமைப்பு அமைந்துள்ளது. அங்கு அன்னை பவதாரணி முயலகன் மீது மிதித்த பாதத்தையும் வெட்டிய கைகளைக் கோத்துக் கட்டிய இடுப்பையும் பலதரப்பட்ட வயதுடையவர்களின் முண்ட மாலையைத் தரித்த கழுத்தையும் ஒரு கையில் ஓங்கியவாளையும் இன்னொரு கையில் வெட்டிய தலையையும் வர, அபயம் தருகின்ற நான்கு கைகளையும் உடைத்திருக்கிருள். இயற்கையின் நடைமுறைக்கு விளக்கமாக, படைத்தல், காத்தல், மறைத்தல், அருளல் என்ற பஞ்சகிருத்தியங்களுக்கு இலக்கணமாக இலங்கி வருகிருள். இத்தேவிக்குத் தான் குருதேவர் வழிபாடு செய்து அன்னையின் அருளுக்குப் பாத்திரமானர். இக்கோவிலின் ஒரு பகுதியில் உள்ள ஓர் அறையில் அவர் வாழ்ந்து வந்தார். அதற்கு எதிர்ப்புறம் உள்ள நகபத் என்று அழைக்கப்படும் வாத்திய அறையின் கீழ்ப்பகுதியான சிறிய அறையில் தூய அன்னையார் வாழ்ந்து வந்தார். இங்குள்ள தோட்டத்தின் ஒரு பகுதியில் ஐந்து வித மரங்களையுடைய பஞ்சவடி என்னுமிடத்தில் தான் குருதேவர் பல வகையான சாதனங்களையும் புரிந்து சித்தியடைந்தார். இன்னெரு பகுதியில் பைன் மரங்கள் அடர்த்தியாக இருந்தன. பஞ்சவடிக்கு அடிக்கடி சென்று தியானம் செய்து வந்தார். அங்குள்ள ஒரு வில்வமரத்தடியில் பைரவி பிராம்மணியின் உதவியால் தந்திர சாதனங்கள் செய்து முடித்தார். இதில் ஒரு கோடியில் ஆலமரத்தடியில் குருதேவர் கிறிஸ்துவ இஸ்லாமிய மத முறைப்படி சாதனை செய்து அந்த முறைகளும் பரத்தை அடையும் மார்க்கங்களே என்று கண்டார். எங்களை அழைத்துச் சென்ற சுவாமி நந்தானந்தர் இந்த இடங்களையெல்லாம் காட்டி விளக்கமும் கூறினர்.

காசிப்பூர்த் தோட்டம்

அங்கிருந்து காசிப்பூர் என்னுமிடத்தில் குருதேவர் தம் அந்திய காலத்தில் எட்டு மாதங்கள் தங்கியிருந்த வீட்டிற்குச் சென்ருேம். 1885 ஆம் ஆண்டு. இறுதியில் குருதேவருக்கு ஏற்பட்ட தொண்டை நோய் சிகிச்சை வசதிக்காக இங்குவந்து தங்கியிருந்தார். பிற்காலத்தில் துறவிகளான இளைஞர்கள் இரவும் பகலும் அங்கேயே தங்கி குருதேவருக்குப் பணிவிடை செய்துவந்தனர். அவர்களைத் துறவு வாழ்க்கைக்குத் தயார் படுத்துவதற்குக் குருதேவரின் நோய் ஒருவகையில் காரணமாக இருந்தது. 1886ஆம் ஆண்டு ஜனவரி மாதம் முதல் தேதி விடுமுறை நாளானதால் ஏராளமான பக்தர்கள் குருதேவரைத் தரிசிக்க வந்திருந்தனர். அவர்கள் எல்லாருக்கும் ஆனந்தப் பரவசநிலையை அனுபவிக்க அருள்புரிந்தார். அந்நாளைக் கற்பகத்திரு நாளென ஏராளமான பக்தர்கள் கூடி இங்குக் கொண்டாடிவருகின்றனர்.

உத்போதன்

அங்கிருந்து அன்னையார் இறுதிக்காலத்தில் தங்கியிருந்த பாக்பஜார் என்னுமிடத்தில் உள்ள உத்போதன் என்னும் நிலயத்திற்குச் சென்ருேம். தூய அன்னையார் இங்குத் தங்கித் தினசரி காணவரும் மக்களுக்கு அருளுரை வழங்கியும், ஸ்ரீ ராமகிருஷ்ண இயக்கம் பரவுவதற்கு வேண்டிய அறிவுரைகளை அவ்வப்போது வழங்கியும் வந்தார். தூய அன்னையார் இங்குத் தங்கியிருந்தபோது ஸ்ரீமத்

சாரதானந்த சுவாமிகள் உடனிருந்து அன்னை யாருக்கு வேண்டிய சேவைகளைச் செய்துவந் தார் என்பனவெல்லாம் எங்களுக்கு விளக்க மாக எடுத்துரைத்து இடங்களையும் காட்டினர் நந்தானந்த சுவாமிகள்.

பகல் பன்னிரண்டு மணிக்கு மேலாகிவிட்ட தால் ஸ்ரீமத் நந்தானந்த சுவாமிகளுக்கு எல்லா ரும் நன்றிகலந்த வணக்கத்தைத் தெரிவித்து அவர்களைப் பேலூர் மடத்திற்குஅனுப்பி விட்டு நாங்கள் பஸ்ஸில் கல்கத்தா காளி கோவிலுக் குச் சென்றோம். அங்குப் பெரிய கும்பலாகப் பண்டாக்கள் சதாகாசு பறிப்பதிலே கருத்தாய் இருக்கிறார்கள். அதனால் அங்குப் போகின்ற வர்களுக்கு மனக்கஷ்டத்தை உண்டுபண்ணி விடுகிறார்கள். அங்கிருந்து விக்டோரியா மெமோரியல் என்னும் பரந்த புல்வெளியில் உள்ள பெரிய மண்டபத்தைச் சென்று பார்த் தோம். அதில் விக்டோரியா சிலை,சில வெள் ளைக்காரர் படங்கள் வைக்கப்பட்டுள்ளன. உடன் எடுத்துச்சென்றிருந்த உணவை அங்கே உள்ள புல்வெளியில் அமர்ந்து அருந்தினோம். இலேசாக மழைபெய்யஆரம்பித்ததால் பிர்லா பிளானிட்டோரியம் கடைத்தெரு பார்த்து விட்டு ரயில்நிலையத்தை அடைந்து இரவு உணவை முடித்துக்கொண்டு இரவு 7-15 மணிக்குப் பூரிஜகந்நாதத்திற்குப் புறப்பட் டோம். கல்கத்தா நகரத்தில் எங்குப் பார்த்தாலும் பெரிய கும்பல்கள், குப்பைகள், திருட்டுக்கள் அதிகமாக இருந்ததால் அதை விட்டுப் புறப்பட்டால் போதுமென்ற எண்ணம் எல்லாருக்கும் உண்டாயிற்று.

பூரி ஜகந்நாதம்

9—8—80 காலை 8-30 மணிக்கு எங்கள் வண்டி பூரி ரயில்வே நிலையத்தை அடைந்தது. அதற்கு முன்பே ஓடும் ரயிலிலேயே சிற்றுண் டியை முடித்துக்கொண்டோம். ரயிலை விட்டு இறங்கியதும் சைக்கிள் ரிக்ஷா மூலம் அங்கி ருந்து இரண்டுமைல்தூரத்திலுள்ளகடற்கரைக் குச்சென்று எல்லாரும்சமுத்திர ஸ்நானம் செய் தோம். அந்த இடத்தில் அலைகள் அதிகமாக வும் வேகமாகவும் வீசுகின்றன. அங்குக் குளிக் கும்போது ஜாக்கிரதையாகக் குளிக்கவேண் டும். கவனியாது இருந்தால் திடீரென அலை வந்து நம்மைக் கீழே தள்ளிப் புரட்டிவிடுகிறது. ஐம்பது பைசா கொடுத்தால் கூட இருந்து துணைசெய்ய இங்கு ஆட்கள் நிறைய இருக் கிறார்கள். பலபேர் அவர்களின் துணைகொண்டு குளித்தார்கள். பிறகு சைக்கிள் ரிக்ஷா விலேயே கோவில் பக்கமுள்ள மார்க்கண்டே யர் தீர்த்தம் சென்று அத்தீர்த்தத்தில் எல் லாரும் நீராடினோம். ஜகந்நாதன் கோவிலுக் குச் சென்றோம். நைவேத்தியம் படைத்துக் கொண்டிருந்ததால், கோவில் கதவு சாத்தப் பட்டிருந்தது. அங்கு ஒரு பக்கம் எல்லாரும் அமர்ந்து ஐக்கிய வணக்கம் செய்தோம். கோவில் திறந்ததும் எல்லாரும் நன்கு தரிச னம் செய்தோம். இங்குக் கர்ப்பக் கிரஹத்தில் கிருஷ்ணன், பலராமன், சுபத்ரா ஆகியோரு டைய விக்ரஹங்கள் இருக்கின்றன. அவ்விக்ர கங்ககளுக்கு அந்நாட்டு முறையில் அலங்காரம் செய்துள்ளார்கள். அங்குப் பிரசாதம் நைவேத் யம் முதலியன செய்ய ரூபாய் ஐந்து முதல் ஐயாயிரம் வரை கட்டணம்வாங்கி அதற்கேற்ற அளவு செய்து தருகிறார்கள். பூரி பிரசாதம் பிரசித்தி பெற்றது. ‘‘ஸ்ரீ ராமகிருஷ்ணர், ‘‘பூரி பிரசாதம், கங்கா தீர்த்தம், பிருந்தாவன மண் ஆகிய மூன்றிலும் பிரம்ம சான்னித்யம் அதிகமாக உள்ளது” என்று சொல்லியுள் ளார். அவரிடம் பல கோவில்பிரசாதங்கள் பல நதியின் தீர்த்தங்கள், பல இடத்து மண்கள் இவைகளைக் கொண்டுபோய்க் காட்டினால், பூரி பிரசாதம் இது, கங்கா தீர்த்தம் இது, பிருந்தாவன மண் இது என்று சுலபமாகச் சுட்டிக்காட்டி விடுவார். அப்படிக் காணும் சக்தி அவரிடம் இருந்தது.

கோவில் புத்த விஹார் போன்று வட்ட வடிவமாக அழகாக அமைந்துள்ளது. அடிப் பகுதிகள் தேசமடைந்துள்ளதால் இப்போது அவைகளைப் புதுப்பித்துக்கொண்டுள்ளார்கள். ஒரிஸா மாகாணத்தில் பொருளாதார வசதி குறைவாக இருப்பதால் ஐந்து மைல் தூர மானாலும் சைக்கிள் ரிக்ஷாவில் இரண்டு பேரை வைத்துக்கொண்டு போக நிறைய ரிக்ஷாக்கள் கிடைக்கின்றன. ரயில்வே நிலை யத்திலிருந்து ஜகந்நாதர் கோயிலுக்குச் சென்று வருவதற்கு இரண்டு பேருக்கு மூன்று ரூபாய் வீதம் வாடகைபேசி முப்பத்திரண்டு ரிக்ஷாக்களில் சென்று வந்தோம். அங்கிருந்து

மாலை 4-30 மணிக்கு எங்கள் ரயில் ஆந்திரப் பிரதேசத்திலுள்ள வால்டேரை நோக்கிப் புறப்பட்டது.

சிம்மாசலம்

10—8—80 காலை ஓடும் ரயிலிலேயே காலைக் கடன்களை முடித்துக்கொண்டு வழக்கம்போல் காலைப் பிரார்த்தனைக்குப் பிறகு சிற்றுண்டி அருந்தினோம். காலை 10மணிக்கு எங்கள் வண்டி வால்டேருக்குச் சுமார் பத்து மைல் தூரத்திலுள்ள சிம்மாசல ஸ்டேஷனை நெருங்கிற்று. வால்டேரிலிருந்து சென்னை செல்வதற்கு எங்களுக்கு 3-30 மணிக்குத்தான் ரயில் புறப்படுவதாக இருந்ததால் இந்த நேரத்தை வீணுக்க வேண்டாம் என எண்ணிச் சிம்மாசலத்தில் எழுந்தருளியுள்ள நரசிம்மமூர்த்தியைத் தரிசித்துவரப் பெரும்பாலோர் விரும்பினர்கள். இதற்குமுன் சிம்மாசலம் தரிசனம் செய்தவர்கள் சிலபேரைத் தவிர மற்றவர்கள் எல்லாரும் சிம்மாசல ஸ்டேஷனில் இறங்கினோம். அங்கிருந்து சுமார் மூன்று மைல் தூரத்திலுள்ள மலை அடிவாரத்திற்கு டவுன் பஸ்ஸில் சென்றோம். அடிவாரத்திலிருந்து மலைக்குமேலே தேவஸ்தான பஸ்களே செல்கின்றன. ஏழு கி. மீ. தூரம் மலைமேல் செல்ல 50 பைசாக் கட்டணம் வசூலிக்கின்றார்கள். சிம்மாசலம் சுமார் 500 மீட்டர் உயரமுள்ள நீண்ட மலைத்தொடர். அதில் ஒரு பகுதியில் கோயில் அமைந்துள்ளது. மலை முழுதும் மரம், செடிகளால் மூடப்பெற்று எங்கும் ஒரே பசுமையாய்க் கண்ணுக்கினிய காட்சியளிக்கிறது. இருபதுநிமிஷ நேரத்தில் பஸ் மலையின் உச்சியை அடைந்து விடுகிறது. கீழிருந்து நடந்துபோவதற்குப் படிக்கட்டு நன்றாக அமைந்துள்ளது. மூன்று நான்கு இடங்களில் மலையிலிருந்து வரும் அருவி நீரில் குளிப்பதற்கு வசதி செய்து வைத்திருக்கிறார்கள். அங்கு நன்றாக யாவரும் நிம்மதியாக நீராடினோம். கோவில் தமிழ் நாட்டுமுறையில் ஓரளவு பெரியதாக இருக்கிறது. மூன்றரைரூபாய் கொடுத்து டிக்கட் வாங்கினல் கர்ப்பக்கிரஹத்துக்கு அருகில் செல்ல அனுமதிக்கிறார்கள். மூர்த்தி லிங்க வடிவில் இருக்கிறது. அதில் நரசிம்ம வடிவத்தைச் சிறிதாகப் பொறித்துள்ளார்கள். எல்லாரும் பக்கத்தில் சென்று நன்கு தரிசனம் செய்தோம். தெய்வ சான்னித்தியத்தை அவரவர் பண்பிற்கேற்ப உணர முடிந்தது. பின்னர்ப் பிரசாதம் பெற்றுக் கொண்டு திரும்பினோம். மலைமேல் சிறிய கடைத்தெரு, யாத்ரீகர்கள் தங்கும் விடுதிகள், சிற்றுண்டிச் சாலைகள் முதலியன இருக்கின்றன. ஆந்திர மக்கள் தரிசனத்திற்கு அதிகம் பேர்வந்துபோகின்றனர். தேவஸ்தான பஸ்ஸில் அடிவாரத்தை வந்தடைந்து அங்கிருந்து டவுன் பஸ்ஸின் மூலமாக ஜங்ஷனுக்குப் பகல் ஏழு மணிக்குள் வந்து சேர்ந்தோம். டவுன் பஸ் கண்டக்டர் 80 பைசா டிக்கட்டிற்கு 1 ரூபாய் வீதம் எங்களை ஏமாற்றி வாங்கிவிட்டான். ரயில் நிலையம் வந்து எல்லாரும் பகல் உணவு அருந்தினோம். பிற்பகல் 3-30 மணிக்கு எங்கள் ரயில் சென்னையை நோக்கிப் புறப்பட்டது. ஸ்தல யாத்திரை இத்துடன் முடிந்தது.

யாத்திரை முடிவு

ஜுலை மாதம் பதின்மூன்றும் தேதி காலை தபோவனத்தில் எல்லாரும் ஒன்று கூடினோம். அன்றுமுதல் யாத்திரை முடியும்வரை யாவரும் ஒரே நோக்கம், ஒரே உணவு, ஒரே இடத்தில் பிரார்த்தனை, படுக்கை, ஒரே முடிவு என்று ஒரு பெரிய ஆன்மீகக் குடும்பம் போன்று இருந்தோம். பஸ் பிரயாணங்களில் சிரமம், வெளியில் தங்கும்போது படுக்கையில் சிலருக்கு வசதி, சிலருக்கு அசௌகரியங்கள், சிலருக்கு அவ்வப்போது உடல் நிலை சிறிது குன்றியிருத்தல் போன்ற சிறு சிறு அசௌகரியங்கள் ஏற்பட்டபோதிலும் அவைகளைப் பொருட்படுத்தாது ஒருவருக்கொருவர் ஆன்மநேய ஒருமைப்பாட்டுடன் உறவாடி இருந்து வந்தோம். வயதில், தொழிலில், படிப்பில், பண்பாட்டில் பல தரப்பட்டவர்களாக இருந்த போதிலும் எல்லாரும் அவற்றையெல்லாம் மறந்து இறை எண்ணத்திலேயே பிரார்த்தனை, பஜனை, சத்சம்பாஷணை போன்றவைகளில் அதிகநேரம் ஈடுபட்டிருந்தோம். அதனல்யாத்திரையின் முப்பது நாட்களும் ஒரு புனிதமான புது வாழ்வில் ஈடுபட்டிருந்த புத்துணர்ச்சி எல்லார்மனதிலும் உண்டாகி இருந்தது. இறைவன் அருளாலும் ஸ்ரீமத் சுவாமிஜி அவர்களின் ஆசியாலும் யாத்திரை தொடக்கம் முதல் முடிவுவரை யாரும் அபிப்பிராய வித்தியாசமில்லாது ஒரே முடிவிற்கு எல்லாரும் ஒத்து இருந்ததாலும் யாத்

திரை முழுவதும் அன்பும் இனிமையும் கலந்த ஆன்மிகச் சூழ்நிலை யாண்டும் இருந்து வந்தது.

சென்னையை நோக்கி ரயில் வர ஆரம்பித்ததும் எல்லாருக்கும் ஒரு மாதமாக மறந்திருந்த சொந்த ஊர், வீட்டைப் பற்றிய எண்ணங்கள் அதிகம் தோன்ற ஆரம்பித்து விட்டன. சென்னை வாசிகள் ஸ்டேஷனுக்கு யார் யார் வருவார்கள் என்றும், அவர்களுக்கு என்ன தருவது என்றும் திட்டம் போட்டார்கள். சென்னைக்குப் பக்கத்து ஊரில் உள்ளவர்கள் எந்தப் பஸ்ஸில் அல்லது ரயிலில் போனால் விரைவில் ஊர் போய்ச் சேரலாமென எண்ணிக் கொண்டிருந்தனர்.

சென்னை சேர்தல்

11—8—80 அன்று வழக்கம்போல் வசதிப்பட்ட ஸ்டேஷனில் காலையில் குளித்து ஓடும் ரயிலிலேயே பிரார்த்தனை செய்தோம். அன்று யாத்திரைக் குழுவினர் சேர்ந்து செய்யும் கடைசிப் பிரார்த்தனை ஆதலால் சற்று அதிக நேரம் பிரார்த்தனை நாமஜபம் ஆகியன செய்தோம். ஜெய் ஸ்ரீ துவார நாத்கி ஜெய், ஜெய் ஸ்ரீ பசுபதிநாத்கி ஜெய், ஜெய் ஸ்ரீ காசி விஸ்வநாத்கி ஜெய், ஜெய் ஸ்ரீ குருமகராஜ்கி ஜெய், ஜெய் ஸ்ரீ சாரதா மாதாகி ஜெய், ஜெய் ஸ்ரீசுவாமிஜி மகராஜ்கி ஜெய் என்று எல்லாரும் உற்சாகத்துடன் சொல்லி முடித்தனர். பிறகு ஒவ்வொருவரும் ரயிலிலேயே விடைபெற்றனர். ரயிலில் காலைச் சிற்றுண்டியை முடித்தோம். சுமார் ஒன்பது மணிக்கு ரயில் கூடூர் ஜங்ஷனை அடைந்தது. அங்கு எல்லாரும் இறங்கிப்பிளாட்பாரத்தில் குரூப் போட்டோ எடுத்துக்கொண்டோம். ரயில் புறப்பட்டதும் சென்னையில் இறங்குகின்றவர்கள் அவர்கள் சாமான்களைச் சரிபார்த்துப் படுக்கை முதலியவற்றைக் கட்டும் காரியத்தில் ஈடுபட்டார்கள். ரயில் சென்னை சேர்வதற்கு முன்பே பகல் உணவை முடித்தோம். ரயில் 12-15 மணிக்குச் சென்னை சென்ட்ரல் ஸ்டேஷனை அடைந்தது. பிளாட்பாரத்திற்கு வரவேற்புக் கூட்டம் வந்திருந்தது. சிறிது நேரத்தில் சிலர் பிரிந்து சென்றனர். மீதிப்பேர் மார்க்கட் சென்று சாமான்கள் வாங்கினர். இரவு 9-30 மணி ரயிலில் எங்கள் பெட்டி இணைக்கப்பட்டு இரவு இரண்டு மணிக்குச் சேலம் வந்து சேர்ந்தோம். பெரும்பாலோர் சேலத்தில் இறங்கிக் கொண்டனர். காலை ஆறு மணிக்கு ஈரோட்டில் சிலர் இறங்கினர். ஆறு பேர் மட்டும் பகல் 12 மணிக்குத் திருச்சி ஜங்ஷன்வரை வந்தனர். புறப்பட்ட இடமாகிய பரமாத்மனைப் போய்ச் சேரும் பொழுது தான் ஜீவாத்மனின் யாத்திரை நிறைவுறும் என்பது போன்று யாத்திரை திருச்சி ஜங்ஷனைவந்து சேர்ந்ததும் இனிதே நிறைவுற்றது.

நாடு நகரமும் நற்றிருக் கோயிலும்
தேடித் திரிந்து சிவபெரு மானென்று
பாடுமின் பாடிப் பணிமின் பணிந்தபின்
கூடிய நெஞ்சத்துக் கோயிலாய்க் கொள்வனே.
— திருமந்திரம்.

ஸ்ரீ ராமகிருஷ்ணர் க்ஷேத்திர யாத்திரை அதிகம் செய்யவில்லை. தமக்குப் பதில் ஸ்ரீ சாரதாதேவியாரைச் செய்யச் சொல்லியிருந்தார். ஸ்ரீசாரதாதேவியாரும் அக்கட்டளையை நிறைவேற்றி வைத்தார்கள். பக்திச் சூழ்நிலையில் யாத்திரைசெய்வது நம்மிடத்துப் பக்தியை வளர்க்கப் பயன்படுகிறது. வாழ்க்கையில் க்ஷேத்திரயாத்திரை செய்வதும் ஒரு திட்டமாகும். ஐம்பது வயதுக்குமேல் அறுபது வயதுக்குள்ளாக யாத்திரையை மேற்கொண்டால் யாத்திரையில் சிறந்த பயனைப் பெறலாம். அறுபது வயதுக்கு மேல் போய்விட்டால் உடல் தளர்ச்சி ஏற்பட்டுவிடும். அப்பொழுது யாத்திரை செய்தால் சரீர சிரமம் அதிகமாக இருக்கும். ஐம்பது வயதுக்கு முன்பாக இருந்தால் யாத்திரையின் புனிதத்தைக் கிரஹிப்பதற்கு ஏற்ற மனபரிபாகம் இருக்காது. ஆகையால் ஐம்பது வயதுக்குமேல் அறுபது வயதுக்குள் அருள்கூட்டம் ஒன்றோடு சேர்ந்து யாத்திரை செய்ய அன்பர்களும், தாய்மார்களும் திட்டமிட்டுக் கொள்வார்களாக. (முற்றும்)

செய்திகள்

நிகழ்பவை

அக்டோபர் மாதம் 7ஆம் தேதி புதன் கிழமை அன்று இரவு ஸ்ரீ விவேகானந்த வித்யாவன குருகுல மாணவர்கள் குழுக்களாகச் சேர்ந்து சரஸ்வதி பூஜையைச் சிறப்பாகக் கொண்டாடுவார்கள்.

ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்கள்
இயற்றிய நூல்கள்

ஸ்ரீமத் பகவத்கீதை பிரசார விலை	ரூ.	16-00
ஸ்ரீ தாயுமானசுவாமி பாடல்கள்	,, ...	6-00
இராமாயணம்	,, ...	5-00
தினசரி தியானம்	,, ...	4-00
ஸ்ரீ ராமகிருஷ்ணர் உபதேச மஞ்ஜரி	,, ...	3-00
கர்மயோக விளக்கம்	...	10-00
ஞானயோக விளக்கம்	...	8-00
ராஜயோக விளக்கம்	...	8-00
பக்தியோக விளக்கம்	...	6-00
பரமஹம்சரின் பெருமை	...	6-00
விவேகானந்த விவரணம்	...	4-00
விவேகானந்த உபநிஷதம்	...	4-00
கடவுளின் வடிவங்கள்	...	4-00
சந்தேகம் தெளிதல் பாகம்-I	...	3-50
அனுஷ்டான வேதாந்தம்	...	3-00
எதிர்கால இந்தியா	...	3-00
ஸ்ரீ ராமகிருஷ்ண சரிதம்	...	3-00
திருக்கயிலாயகிரி யாத்திரை	...	3-00
தேவரகசியம் (முதலிய கதைகள்)	...	2-50
ஸ்ரீ சாரதா தேவியார் சரிதம்	...	2-00
தாயுமானவர் இயற்றிய		
கருணாகரக் கடவுள் விரிவுரை	...	3-50
பரிபூரணானந்தம் ஷை	...	3-00
சின்மயானந்த குரு ஷை	...	3-00
ஆனந்தமானபரம் ஷை	...	3-00
சுகவாரி ஷை	...	3-00
மௌனகுரு வணக்கம் ஷை	...	3-00
எங்கும்நிறைகின்றபொருள் ஷை	...	2-50
பரசிவ வணக்கம் ஷை	...	1-00
பஜனைப் பாடல்கள்	...	2-50
விரதவீரர் பீஷ்மர் (நாடகம்)	...	1-50
விபீஷணன் சரணாகதி ஷை	...	1-50
பரமஹம்சர் பாமாலை	...	1-50
அமரநாத யாத்திரை	...	1-25
சந்நியாசி	...	1-25
இறைவணக்கம்	...	1-00
குழந்தைகளின் களிக்கூடம்	...	1-00
சகோதரி நிவேதிதை	...	1-00
காயத்ரீ	...	1-00
இராவண தத்துவம்	...	1-00
வாலி மோட்சம் (நாடகம்)	...	1-00
தவப்புதல்வர்கள் ,,	...	1-00
ஏகலைவ்யனின் குருபக்தி ,,	...	1-00
தானவீரன் கர்ணன் ,,	...	1-00
பார்வதி,லக்ஷ்மி,சரஸ்வதி கர்வபங்கம்	...	1-00
பிரஹ்லாதன் ,,	...	1-00

மார்க்கண்டேயன் (நாடகம்)	ரூ.	1-00
தபோபலன் ,,	...	1-00
இந்துமதமும் கிறிஸ்துவ மதமும்	...	1-00
பாண்டவ கௌரவபெருமை (நாடகம்)	...	0-80
நன்மக்களைப் பெறுதல்	...	0-80
பாதுகா பட்டாபிஷேகம் (நாடகம்)	...	0-75
செத்தவர்கள் நம்மோடு பேசுகிறார்களா?	...	0-75
*ஆத்ம சக்தி	...	0-75
*ஆலய வழிபாடு	...	0-75
*சக்தி தத்துவம்	...	0-70
*சிவதத்துவம்	...	0-70
*மனிதனது நிஜசொருபம்	...	0-70
*ஈசன் எங்கும் நிறைந்துள்ளான்	...	0-60
தாயுமானவர் ஆலயத்தில் தத்துவ அமைப்பு	...	0-60
நன்னெறிகளும் அருள்வாக்குகளும்	...	0-60
*சூரிய நாராயணன்	...	0-50
*முருகக்கடவுள்	...	0-50
*விஷ்ணு தத்துவம்	...	0-50
தெய்வீக மகிமைகள்	...	0-50
சைவன் யார்?	...	0-50
கர்மகாண்டம்எது?ஞானகாண்டம்எது?		0-50
*கணபதி	...	0-40
வர்ணாச்ரம தர்மம்	...	0-30
அருள் விருந்து 1 to 25 ஒவ்வொன்றும்	...	0-30
The Bhagavad Gita (10th Imp.)	...	20.00
Sri Lalitambika Sahasranama Stotram	...	10-00
The Indian National Education	...	8.00
Ramakrishna Lives Vedanta	...	8-00
Facets of Brahman or The Hindu Gods	...	5-00
Daily Divine Digest (DELUXE)	...	4-50
Daily Divine Digest (Ordinary)	...	2-50
Mahabharata (with plastic cover)	...	6-00
Ramayana (do)	...	4-00
The man Making Message of Vivekanada (with plastic cover)	...	4-00
Sri Vishnu Sahasranama Stotram	...	4-00
The Bahagaved Gita (Small Size)	...	4-00
Siva Sahasranama Stotram	...	3-50
Bheeshma The Superman	...	3-50
Hinduism Hosts Christianity	...	3-00
Holy Bible—In the Light of Vedanta	...	1-50
Reminiscences of Master Mahashaya	...	1-50
*Introducing the Gita	...	1-50
The Garland of Paraaparam	...	1-50
TAT TVAM ASI *That Thou Art* IN Tayumana Swami	...	1-00

தேவையான புத்தகங்களுக்கு உரிய விலையுடன் தபால் கட்டணத்திற்காக கீதைக்கு ரூ. 3-25ம் மஞ்ஜரிக்கு ரூ. 1-40ம் இராமாயணத்திற்கு ரூ. 1-30ம் தினசரி தியானத்திற்கு ரூ. 1-20ம் மற்ற வெளியீடுகளுக்கு ரூ. 2-50 முதல் ரூ. 3-50 வரையும் சேர்த்து அனுப்புங்கள்.

* இக்குறியிட்ட புத்தகங்கள் ஏனைய பெரிய புத்தகங்களில் அடங்கியுள்ளன.

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் அந்தர்யோகம்

சேலம் ஸ்ரீ ஸாரதா ஸமிதியில் 29—9—81 முதல் 1—10—81 முடிய மூன்று நாட்கள் சக்தி பூஜை அந்தர்யோகம் ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் நடைபெறும். இதில் கலந்துகொள்ள விரும்பும் தாய்மார்கள் மட்டும் செப்டம்பர் மாதம் 28 ஆம் தேதி திங்கட்கிழமை இரவே நேரில்வந்து நாள் ஒன்றுக்கு ரூ. 6-00 வீதம் ரூ. 18-00 மட்டும் உணவுக்காகச் செலுத்திப் பெயர்களைப் பதிவுசெய்து கொள்ளவேண்டும். அமைதியைக் காக்க 12 வயதுக்குக் கீழ்ப்பட்ட சிறுமிகளும், கைக்குழந்தையுடன் வரும் தாய்மார்களும் இதில் சேர்த்துக்கொள்ளப்படமாட்டார்கள்.

வாழ்க்கை முறை

காலை

	மணிமுதல்	மணிவரை
துயிலெழுதல்		4-30
நாம ஜபம்	5-00	5-30
ஸ்நானம்	6-00	7-30
ஆரதி	7-30	
சிற்றுண்டி	7-45	
பஜனை	8-30	9-30
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை	10-00	11-00
அர்ச்சனை	11-30	12-30
உணவு, ஓய்வு	1-00	3-00

மாலை

	மணிமுதல்	மணிவரை
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை	3-00	3-45
நாம ஜபம்	4-00	4-30
சிற்றுண்டி	4-30	
ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம அர்ச்சனை, ஆரதி, பிரார்த்தனை	6-00	7-00
தியானம்	7-00	7-30
உணவு	7-45	
ஸத்ஸம்பாஷணை	8-30	9-30

குறிப்பு :—1. செப்டம்பர் 29, 30 ஆகிய இரண்டு தினங்களிலும் ஸ்ரீ ஸாரதா கல்லூரி பிரார்த்தனைக் கொட்டகையிலும், அக்டோபர் 1 ஆம் தேதி ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்திலும் காலை 10-00 மணிமுதல் 11-00 மணிவரை ஸ்ரீமத் சுவாமி சித்பவானந்தர் அவர்களால் ஸ்ரீலலிதா ஸஹஸ்ரநாம விளக்கம் நடைபெறும். இவைகளில் அன்பர்களும் கலந்துகொள்ளலாம். மேற்படி மூன்று தினங்களிலும் மாலை 3-00 முதல் 3-45 மணிவரை ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் ஸ்ரீ லலிதா ஸஹஸ்ரநாம விளக்கவுரை யதீஸ்வரிகளால் நடைபெறும். இவைகளில் தாய்மார்கள் மட்டும் கலந்துகொள்வார்கள்.

2. ஸ்ரீ ஸாரதா வித்யாலயத்தில் அக்டோபர் 1 ஆம் தேதி மாலை அர்ச்சனை 4-30 மணி முதல் 5-30 மணிவரை நடைபெறும். அன்று மாலை 6-00 மணிக்கு ஸ்ரீ ஸாரதா கல்லூரியில் ஸ்ரீஸாரதா ஸ்தாபனங்களின் மாணவிகளால் கலாநிகழ்ச்சிகள் நடைபெறும். அன்பர்களும் இதில் கலந்துகொள்ளலாம்.

Edited by SWAMI NITHYANANDA,
Printed & Published by Swami Sankarananda at Tapovanam Printing School, Tirupparaitturai, Tiruchi Dt.